www.tamilarangam.net

# களத்தில்

### கவிதை மூலை

நகலென்று நங்கை
நக்கலடிக்கிறாள்
பகலிரவென்று
பணத்துக்கிங்கே
பறக்கிறான் பரதேசி

- சுடு கவி

திருவள்ளுவர் ஆண்டு 2027 கும்பம் 21 (06.03. 1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வருஞ் செய்தித் தாள் அன்பளிப்பு 60p

# தீர்வுத் திட்ட நகல் சமர்ப்பிப்பு சமாதான நடவடிக்கையின் கருக்கலைப்பு

அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாகச் சந்திரிகா அரசின் யோசனைகள் அடங்கிய புதிய நகல்த்திட்டம், 16-01-96 அன்று சிறிலங்காவின் அரசியல் யாப்பு விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸினால் வெளியிடப்பட்டது.

இப்புதிய நகல்த் திட்டத்தில் இலங்கைக் குடியரசு பிரிக்க முடியாத பிராந்தியங்களின் ஒன்றியமாக இருக்குமெனவும் குடியரசில் பௌத்த சமயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதில் பிராந்திய சபைகளைக் கலைக்கும் அதிகாரம் சிறிலங்கா சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், ஒரு பிராந்தியத்தின் ஆளுகைக்கு உட்பட்ட காணி எதனையும் மத்திய அரசு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு உரிமையும் வழங்கப் பட்டுள்ளது. மேலும் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழேயே இருக்குமெனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த நகல்த்திட்டச் சட்டமூலம் அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் சம்பந்தமான பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த அத்தியாயத்தின்படி இலங்கை ஐக்கியமும் இறைமையுங் கொண்ட குடியரசாக விளங்கும். இலங்கைக் குடியரசு பிரிக்கப்பட முடியாத பிராந்தியங்களின் ஒன்றியமாக இருக்கும். இந்த ஒன்றியத்திலிருந்து எந்தவொரு பிராந்தியமும் பிரிந்துபோக இயலாது என்பது முக்கியமான அம்சமாகும். அதே சமயம் பிராந்தியங்களின் பெயர்கள், எல்லைகள், இடப்பரப்பு என்பன நகல் சட்ட மூலத்துடன் இணைக்கப்பட்டுள்ள முதலாவது அட்டவணையில் தரப்பட்டுள்ளன. குடியரசில் பௌத்த சமயத்திற்கு முக்கிய இடம் அளிக்கப் பட்டாலும் எல்லா மதங்களுக்குமுள்ள உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படும்.

கொழும்பு சிறிஜெயவர்தனபுர, புறக்கோட்டை ஆகியன மத்திய அரசினால் நிர்வகிக்கப்படும். பிராந்தியத்தில் பிரதான அமைச்சரது ஆலோசனைக்கமைய, சனாதிபதி ஆளுனரை நியமிக்க வேண்டும். ஆளுனரை அகற்றுவதற்காகச் சபை உறுப்பினர்களிற் சமூகமளிக்காதவர்களுட்பட, மூன்றிலிரண்டு பங்கினருக்கும் குறையாதவர்களினால் ஆளுனரை அகற்றுமாறு சனாதிபதிக்குப் பிராந்திய சபை ஆலோசனைகளைக் கூறலாம். பிராந்திய சபையைக் கலைக்கும் அதிகாரம் ஆளுனருக்கு இருக்கும்.

ஒரு பிராந்தியத்தின் பரப்பளவு, சனத்தொகை ஆகியவற்றின் அடிப்படையில் அதன் அங்கத்தவர்களின் எண்ணிக்கை அமையும். பிராந்திய சபை பதவிக்காலத்திற்கு முன்னரேயே கலைக்கப்பட்டாலொழிய அதன் முதலாவது கூட்டத்திற்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்தாண்டு காலப்பகுதிக்கு அது தொடர்ந்து இயங்கும். ஐந்தாண்டு காலம் முடிவடைந்ததும் இயல்பாகவே சபை கலைந்ததாகக் கொள்ளப்படும். ஒரு பிராந்தியத்திற்குப் பிரதான அமைச்சர் தலைவராக இருப்பார். ஆறு பேருக்கு மேற்படாத அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையும் இருக்கும். பிரதான அமைச்சரின் ஆலோசனையின் மீது, பிராந்திய சபையின் உறுப்பினர்களிலிருந்து ஆளுனர் ஏனைய அமைச்சர்களை நியமிக்க வேண்டும். ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒரு மேல் நீதிமன்றம் இருக்கும். இந்த நீதிமன்றம் பிராந்தியத்திற்குள் புரியப்படும் தவறுகள் போன்றவற்றை விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கும். பிராந்தியத்திலுள்ள நீதி மன்றங்கள் ஆகியவற்றினால் விதிக்கப்பட்ட தீர்ப்புகள், தண்டனைகள், கட்டளைகள் என்பன பற்றி, மேல் முறைமீடு செய்யும் அதிகாரம் அதற்கு இருக்கும்.

ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் பிராந்தியச் சேவை ஆணைக்குழு அமைக்கப்படும். பிர-தான அமைச்சரின் ஆலோசனைக்கமைய அரசியல் அமைப்புப் பேரவையினால் அமைக்கப்பட்ட உயர்நீதி மன்றத்தின் அல்லது மேல் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற மூன்று நீதிபதிகள், அல்லது தற்போது பதவி வகிக்கும் நீதிபதிகள் இதில் அங்கம் வகிப்பர். பதவி வகிக்கும் நீதிபதி இந்த ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்படும்போது, அவர் தனது நீதித்துறைப் பதவியைக் கைவிட வேண்டும்.

பிராந்தியத்திற்குள் நீதித்துறை அலுவலக உத்தியோகத்தர்களின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியன இந்தப் பிராந்திய நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கும் உரித்தாக இருக்கும்.

ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஆளுனர், பிராந்தியத்தின் மேல் நீதிபதியாக நியமிக்கப்படுவதற்குத் தகைமையுள்ள ஒருவரைப் பிராந்திய சட்டத்துறைத் தலைமை அதிபதியாக நியமிக்க வேண்டும். பிராந்திய மட்டத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழு ஒன்று இருக்கும். இது ஆளுனருடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னர், அரசியல் அமைப்புப் பேரவையினரால் நியமிக்கப்படும் ஐவருக்குக் குறையாத அங்கத்தவரைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு பிராந்தியத்திலுமுள்ள ஆளுனர்

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்

## "இது (ஏ)மாற்றுத் தீர்வுத் திட்ட நகலென்பது நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை. மேற்படி புதிய நகல்த் திட்ட அறிவிப்பிலிருந்து, தமிழ் மக்களுக்கு ஒன்றுமே வழங்கப்படமாட்டாது என்பது மட்டுமல்ல, அவர்களின் எச்சிலிலையில் காத்திருந்த துரோகக் குழுவினருக்குக் கூட ஒன்றும் கிடைக்கவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது."

# வலிகாமத்தின் வெவ்வேறு இடங்களில் விடுதலைப் புலிகள் இராணுவம் மோதல்

02-03-96 சனிக்கிழமையன்று, சிறிலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட வலிகாமப் பகுதியில் மூன்று, வெவ்வேறு இடங்களில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றன. விளான், மாதகல், கொழும்புத்துறை போன்ற வெவ்வேறு இடங்களிலே உள்ள இராணுவ நிலைகள் மீதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. அதிகாலை 5.50 மணியளவில் முதலாவது தாக்குதல் மாதகல் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. இதில் மூன்று இராணுவம் கொல்லப்பட, இரண்டாவது தாக்குதல் விளான் பகுதியில் காலை 7.35 மணிக்கு நடாத்தப்பட்டது. இதில் இராணுவத்தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார். கொழும்புத்துறை முகாமில் இருந்து காலை 8.30 மணிக்கு வெளியேறிவந்த இராணுவத்தினர் மீது நடாத்தப்பட்ட மற்றைய தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலின்போது, பல இராணுவத்தினர் படுகாயங்களுக்குள்ளாகினர். இராணுவத்திடமிருந்து பல தன்னியக்க துப்பாக்கிகள், ரவைகள் விடுதலைப் புலிப் போராளிகளால் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# வலிகாமத்தின் உடுவில் பகுதியில் வயோதிபர்கள் இராணுவத்தால் சுட்டுக்கொலை

சிங்கள இனவெறி இராணுவம் ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ள வலிகாமம் உடுவில் தெற்குப் பகுதியில் ஏழுக்கும் மேற்பட்ட வயோதிபர்கள் சிறிலங்காப் படையினரின் துப்பாக்கி வெறித்தனத்துக்கு அநியாயமாகப் பலியாகியுள்ளனர். கடந்த ஒரு மாதத்திற்கு முன் நடந்த இம் பயங்கரவாதச் செயல் குறித்த செய்தி தற்பொழுதே வெளிவந்துள்ளது. மாசி மாதம் முதலாம் திகதி நடந்த இப் பயங்கரவாதத்திற்கு 80 வயதுடைய கந்தன், அவரது மனைவியான 72 வயது பாக்கியம், 90 வயதுடைய சின்னப்பு கனகம், 83 வயதுடைய நாகமுத்து, 85 வயதுடைய வேதமுத்து ஆகிய முதியவர்களே பலியாகியுள்ளனர். இதேவேளை, அத்தினம் அருகில் இருந்த பாடசாலை ஒன்றிலும் துப்பாக்கிச் சூட்டில் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று முகாம்கள் மீது ஒரே தினத்தில் தாக்குதல்

## கிண்ணியடி முகாம் மீது பலமான தாக்குதல்

## 14 வீரவேங்கைகள் வீரமரணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று வெவ்வேறு இடங்களில் விடுதலைப் புலிகள் ஒரே தினத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது தாக்குதலை மேற்கொண்டனர். புலிபாய்ந்தகல் இராணுவ முகாமிற்கும் கிரான்குளம் இராணுவ முகாமிற்கும் இடையே துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீதே 24-02-96 அன்று தாக்குதல் நடாத்தப்பட்டது. இதேவேளை இதேதினம் இரவு கிண்ணியடி, கிரான் இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் ஒரே நேரத்தில் தாக்குதல் நடாத்தினர். மோட்டார்கள் மற்றும் சிறிய ரக ஆயுதங்களைப் பயன்படுத்தியே இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகச் சர்வதேசச் செய்தி நிறுவனங்கள் தெரிவித்திருந்தன. இத் தாக்குதல்களிற் சிறிலங்கா இராணுவத் தரப்புச் சேத விபரங்கள் இது வரை தெரியவரவில்லை. கிண்ணியடி இராணுவ முகாம் மீதான தாக்குதலின்போது மேஜர் சாந்தன் உட்பட 14 வேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

தாய் நாட்டை எப்படியேனும் எதிரியிடம் இருந்து மீட்டெடுக்க வேண்டும் என்ற உறுதியுடன் களமாடி, அக்களத்திலேயே விதையாகிய இம் மாவீரர்களுக்கு எமது வீரவணக்கங்கள்.

# தீர்வுத் திட்ட நகல்.....

1 ஆம் பக்கத் தொடர்ச்சி...

மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படுவதற்குத் தகமையுள்ள ஒருவரைப் பிராந்திய சட்டத்துறை அதிபதியாக நியமிக்க வேண்டும். பிராந்திய மட்டத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழு ஒன்றிருக்கும். இது ஆளுனருடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னர் அரசியலமைப்புப் பேரவையினால் நியமிக்கப்படும் ஐவருக்குக் குறையாத அங்கத்தவர்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு பிராந்தியத்திலுமுள்ள அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, பிராந்தியப் பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு உட்பட்டவையாக இருக்கும். ஒரு பிராந்தியத்தில் உள்ள அரசாங்கக் காணி பிராந்தியத்திற்கு உரியதாக்கப்படும். இவை பிராந்திய நிரலில் தரப்பட்டுள்ள நோக்கங்களுக்காகப் பிராந்திய சபையினால் கையாளப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

காணி நிர்ணய முறையில் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பின்னர் அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். பிராந்தியங்களுக்கிடையிலான நீர்ப்பாசனத்திட்டங்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்தியங்களில் இயங்குபவையாக இருப்பதால், அவை மத்திய அரசின் பொறுப்பிலிருக்கும்.

பிராந்தியப் பொலிஸ் ஆணையாளரின் தலைமையில் பிராந்திய பொலிஸ் சேவையிருக்கும். ஆளுனருடன் கலந்தாலோசித்த பின்னரே, பிராந்தியத்தின் பிரதான அமைச்சர் இதனை நியமிக்க வேண்டும்.

இது தவிர பிராந்தியப் பொலிஸ் ஆணையாளரையும், மற்றும் இருவரையுங் கொண்ட பிராந்திய பொலிஸ் ஆணைக்குழு இருக்கும். இது தவிர பிராந்தியத்திற்குப் பொறுப்பாக இருக்கக் கூடிய 46 அம்சங்களும் இந் நிரலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இது (ஏ)மாற்றுத் தீர்வுத் திட்ட நகலென்பது நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை. மேற்படி புதிய நகல்த் திட்ட அறிவிப்பிலிருந்து தமிழ் மக்களுக்கு ஒன்றுமே வழங்கப்படமாட்டாது என்பது மட்டுமல்ல, அவர்களின் எச்சிலிலையில் காத்திருந்த துரோகக் குழுவினருக்குக் கூட ஒன்றும் கிடைக்கவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் எச்சிலிலையில் தலைமைப் பொறுப்பில் நாக்கைத் தொங்கவிட்டுக் காத்திருந்த ஈபிடிபி தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களே, அரசின் புதிய யோசனைகளைத் தம்மால் ஏற்க முடியாது எனக் கூறியுள்ளமை வேடிக்கையானது.

அது மட்டுமன்றி, பி. பி. சி செய்தி நிறுவனம்கூட, பிராந்திய சபைகளைக் கலைக்கும் முழு உரிமை ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டியுள்ளதோடு மட்டுமன்றி, வடக்கும் கிழக்கும் ஒரே அலகாக இருக்காது எனவும் சந்தேகம் எழுப்பியுள்ளதுடன், இந்தப்புதிய நகல்த்திட்டத்தில் எதுவும் இல்லையெனவும் கருத்து வெளியிட்டுள்ளது. இத்தனைக்கும் பிறகு கூட, இது பயனுள்ள திட்டமெனத் திரு. நீலன் திருச்செல்வம் அவர்கள் கூறியுள்ளமையானது, நகைச்சுவையின் உச்சமாகும். அது மட்டுமல்ல, திரு.குமார் பொன்னம்பலம் அவர்கள், வடக்கில் தமிழ் மக்கள் வீதிகளிலும் மரங்களின் கீழும் வீடு, உணவு, உடை ஏதுமின்றி வாழும் நிலையில் அவர்கள் இதுபற்றி அக்கறை கொள்ளப்போவதில்லை என்றும் முதலில் இராணுவத்தை வடக்கிலிருந்து திரும்ப அழையுங்கள் என்றும் கூறிய கருத்துக்குத் திரு.நீலன் திருச்செல்வம் அவர்கள், குமார் பொன்னம்பலம் கடந்த பொதுத் தேர்தலில் தோற்றவர், அவர் எந்தப்பிரிவு மக்களதும் கருத்தைத் தெரிவிக்கத் தகுதியற்றவர் எனக் கருத்து வெளியிட்டுள்ளமை அதைவிட உச்ச நகைச்சுவையாகும். இவர் எந்தத் தேர்தலில், எத்தனை ஆயிரம் வென்றவராம்?

மொத்தத்தில் இந்த நகல்த் திட்டம் சிங்களப் பேரினவாதிகளின் உண்மை முகத்தை மட்டுமன்றி, துரோக முகங்களையும் திரும்பவும் இனங்காட்டியுள்ளது. சுருங்கக்கூறின், குறைப்பிரவசம் ஒன்று நடைபெற முன்னரே, 'கருக்கலைப்பு' நடவடிக்கையாக இந்த நகல்த் திட்டத்தைச் சந்திரிகா அரசு சமர்ப்பித்துள்ளது.

# செய்திச் சுருள்

## மணலாறு அரியகண்டனில் சிறிலங்கா இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்

27.02.96 அன்று அதிகாலை 6.30 மணியளவில், மணலாற்றில் அரியகண்டல் என்னுமிடத்தில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவ அணி மீது, விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர். அத்துமீறிய சிங்களக் குடியேற்றத்திற்குப் பாதுகாப்பு வழங்கவென அமைக்கப்பட்டிருந்த அரியகண்டல் இராணுவ முகாமிலிருந்து 500 மீற்றர் தொலைவிலேயே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்துணிகரத் தாக்குதலின்போது சிறிலங்கா இராணுவத்தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை. சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சு தமது தரப்பில் 4 படையினர் கொல்லப்பட்டதாக அறிவித்தது. குறிப்பிட்ட தொகை ஆயுதங்களும் ரவைகளும் கைப்பற்றப்பட்ட இச்சண்டையில் விடுதலைப் புலிகள் தரப்பில் மேஜர் சிந்துஜன் வீரச்சாவடைந்தார். இவருக்கு எமது வீரவணக்கங்கள்.

## 4 தமிழ் சிறுவர்கள் கோரப்பலி அம்பாறை திக்கோடையில் சம்பவம்

சந்திரிகாவின் கொலைவெறிப்படை, தொடர்ந்தும் ஆக்கிரமித்திருக்கும் பகுதிகளிற் தமிழ் மக்களைக் கொன்றுகுவித்து இனவெறி ஆட்சியை நடத்தி வருகிறது. இவ்வாறாக 24-02-96 அன்று காலை 10 மணியளவில் அம்பாறை திக்கோடையிற் சிறிலங்காப் படையினர் நடாத்திய குரூரத்தனமான எறிகணை வீச்சால் வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு சிறுவர்கள், இரண்டு சிறுமிகள் உடல் சிதறிப் பலியாகியுள்ளனர். 9 வயதிற்குக் கீழ்ப்பட்ட இப் பிஞ்சுகளே சிறிலங்கா இனவெறிப்படையின் இலக்குகள் ஆகின.

## தேச விரோதக் கும்பலின் தமிழ் மக்கள் மீதான தொடர் அட்டூழியங்கள்

சிறிலங்கா அரசின் அடிவருடிகளாக இருந்து, அவர்களின் ஏவலாளர்களாகச் செயற்படும் கொழும்புத் தமிழ்க் கும்பல்கள், சிறிலங்காவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில், சிறிலங்காப் படையுடன் சேர்ந்து தமிழ் மக்கள் மீது காடைத்தனம் புரிவது தெரிந்ததே. இவ்வாறான குழுக்களில் புளொட்டும், ரெலோவும் வவுனியா தாண்டிக்குளத் தடைமுகாமில் சிறிலங்காப் படையுடன் சேர்ந்து, தடைமுகாமிற்கூடாகச் செல்லும் தமிழ்ப் பயணிகளின் மீது தமது காடைத்தனத்தை வெளிப்படுத்துகின்றனர். துப்பாக்கிப் பிடிகளாலும், தடிகளாலும், இடுப்புப் பட்டிகளாலும் வயது வேறுபாடின்றிக் கண்மூடித்தனமாக அடித்துத் துன்புறுத்துகின்றனர்.

27-02-96 அன்று ஒரு வயோதிபரைத் தாக்கித் தலையில் காயத்தை ஏற்படுத்தி முரட்டுத்தனமாக இழுத்துச் சுடுமணலில் நிறுத்திச் சித்திரவதை செய்துள்ளார்கள்.

## சிறிலங்காக் கடற்படை மீனவர் மீது தொடர் தாக்குதல்

25-02-96 அன்று அரியாலைக் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது, அக்கடற்பரப்பில் திடீரெனத் தோன்றிய சிறிலங்காப் படையினர் தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகத்தை மீனவர்கள் மீது மேற்கொண்டனர். இம் மீனவர்கள் அண்மையில் இடம்பெற்ற யாழ்ப்பாண ஆக்கிரமிப்பை அடுத்துக் குருநகரிலிருந்து இடம்பெயர்ந்தவர்களாவர். இத்தாக்குதலில் புஸ்பராசா ஜெட்வின் என்பவர் படுகாயமடைந்தார். மற்றையோர்கள் சிறுகாயங்களுடன் தப்பித்துக் கொண்டனர்.

இதேவேளை வடமராட்சிக் கடற்பரப்பிற் பாரிய கடற்படைக் கப்பலுக்குப் பாதுகாப்பு வழங்கிச் சென்ற 'டோரா'ப் படகுகள், கரையோரப்பகுதி மீது பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டன. இதன்போது கடலில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரு மீனவர்களான நகுலேந்திரன் வயது 23, சிவலெட்சணம் வயது 33 என்போர் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வள்ளத்தில் இருந்து குதித்து நீந்திக் கரைசேர்ந்தனர். இவர்களின் வள்ளம் கடற்படையின் தாக்குதலால் தீப்பிடித்து எரிந்து மூழ்கிவிட்டது.

பலாலி இராணுவ முகாமில் இருந்து 26-02-96 அன்று வடமராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் யோகேஸ்வரி பாலசிங்கம் வயது 37 என்பவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மண்டியிடக் கூறிவிட்டு சுட்டுக் கொலை

திருமலை மாவட்டம் கன்னியாவில் கல்லுடைக்கும் ஆலையில் பணிபுரியும் தமிழ்த் தொழிலாளர்கள் நால்வர், வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் சிறிலங்கா இராணுவத்தால் தடுத்து நிறுத்தப்பட்டு முழங்காலில் நிறுத்தப்பட்டனர். பின்னர் பின்னால் நின்ற இராணுவத்தால் சுடப்பட்டனர். அந்த இடத்திலேயே இரு தொழிலாளர்கள் பலியாக்கப்பட்டனர். 27 வயதான 2 பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் சுப்பிரமணியம், 37 வயதுடைய 4 பிள்ளைகளின் தந்தையான சுப்பையா கஜேந்திரன் ஆகியவர்களே கொல்லப்பட்டவர்களாவர். காயமடைந்த மற்றைய இருவரும் திருகோணமலை வைத்தியசாலையிற் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## இருவெவ்வேறு தாக்குதலில் 6 வேங்கைகள் வீரமரணம்

24-02-96 அன்று திருமலை மாவட்டம் திரியாயில் வீதியாற் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீது பற்றைகளுக்குள் மறைந்திருந்த சிறிலங்கா இராணுவம் தாக்கியது. இதன்போது நடைபெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் மேஜர் அறிவுக்கரசு, கப்டன் புவி உட்பட 4 வீரவேங்கைகள் வீரச்சாவடைந்தனர்.

19-02-96 அன்று வலிகாமம் விளான் கிராமத்திற் சிறிலங்கா இராணுவ அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். இதன்போது சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் லெப். ஈழச்செல்வன், லெப். வீரபாண்டியன் ஆகியோர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். தாயக மண் மீட்புக்காய் தம்முயிரை ஈகம் செய்து வீரமுடன் எதிரிப் படையுடன் பொருதி வீரச்சாவடைந்த இம்மாவீரருக்கு எமது வீரவணக்கங்கள்.

## அனுராதபுரம் கெப்பெட்டிப்பொலவில் தாக்குதல்

## 6 படையினர் அவ்விடத்திலேயே பலி

கடந்த 22.02.96 அன்று அனுராதபுர மாவட்டம் கெப்பெட்டிப்பொலவில் அமைந்திருந்த இராணுவ நிலைகள் மீது, விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். இத் தாக்குதலில் 2 இராணுவத்தினர், 2 பொலிசார், 2 ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனர். கைப்பற்றப்பட்ட நவீன ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகள் எவ்வித இழப்புக்களும் இன்றித் தளம் திரும்பினர்.

தமிழ்க் கிராமமொன்றை மணிக்கவேவ என்னும் சிங்களப் பெயரிட்டு இங்கு ஆண்டாண்டாக வாழ்ந்த தமிழ்க் குடும்பங்களை ஆயுதமுனையிற் பயமுறுத்தி வெளியேற்றிச் சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றி அதற்குப் பாதுகாப்பாகவே இவ்விராணுவ நிலைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன் அக்கிராமவாசிகளுக்கும் ஆயுதம் வழங்கி அவர்களும் ஊர்காவற் படை எனும் பெயரில் ஆயுதபாணிகளாக்கப்பட்டிருந்தனர்.

www.tamilarangam.net



# இலங்கை இனப்பிரச்சனையில் மூன்றாவது நாட்டின் மத்தியத்தத்தின் அவசியம்

இலங்கைத்தீவில் காணப்படும் தமிழர் பிரச்சனை, இன்று சிறிலங்கா அரசினால் தீர்க்கப்படமுடியாத சர்வதேசப் பிரச்சனையாக உறுதி பெற்று வருகிறது.

இந்தத் தேசிய முரண்பாட்டிற்குத் தமிழீழ மக்களின் தலைமையின் பங்களிப்புடனான அரசியற் தீர்வைக் காண மறுக்கும் சிறிலங்கா அரசு, இந்தத் தேசிய முரண்பாட்டின் விளைவுகளைச் சாட்டாக வைத்து, சர்வதேசச் சட்டங்களுக்கு முரணான வகையில், தமிழீழ மக்களை இனஅழிப்பு, இனத் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கி வருவதுடன், தமிழர் தாயகத்தின் இயற்கைச் சூழலையும் மூலவளங்களையும் சமூகப் பொருண்மிய கட்டுமானங்களையும் திட்டமிட்ட வகையிற் சிதைத்து நாசமாக்கியும் வருகிறது. இவற்றைச் சர்வதேச சமூகத்தவர்கள் அறிந்து கொள்ள முடியாதவாறு செய்தியாளர்கள் மற்றும் சமூகத் தொடர்பாளர்களை அங்கு செல்லாதவாறு சிறிலங்கா தடுத்து வருகிறது.

இருந்தபோதிலும் தலைநகரான கொழும்பில், தென்னாபிரிக்காவில் நடைபெற்றது போன்ற இனஒதுக்கல் கொள்கைகளை வெளிப்படையாக அமுலாக்குவதைச் சர்வதேச சமூகத்தவரால் இலகுவில் இனங்காண முடியும். தமிழர்களுக்கு, அவர்கள் தமிழர்கள் என்பதற்காக வீடுகள் கொடுக்கப்படக்கூடாது, பொது வைபவங்களுக்கு அழைக்கப்படக்கூடாது போன்ற உத்தரவுகளைச் சிறிலங்கா அதிகாரிகள் வழங்குவது மட்டுமல்லாமல், எவ்வித காரணமுமின்றித் தமிழர்கள் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் கைதாக்கப்பட்டும் வருகின்றனர். வெளிப்படையான இனஒதுக்கற் கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாடுகளுடன் ஐக்கிய நாடுகள் சபை தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்பது ஐக்கிய நாடுகள் சபையின் நிலைப்பாடு என்பதை இவ்விடத்தில் நினைவு கூற விரும்புகின்றோம்.

சமீபத்தில் இலண்டனில் ஒரு குண்டு வெடிப்பு ஏற்பட்டது. இதற்கான காரணமாக, ஐரிஷ் குடியரசு இராணுவம் கருதப்பட்டபோதிலும் பிரித்தானிய – அயர்லாந்துப் பிரதமர்கள் அரசியற் தீர்வு வழிமுறைக்கான வழிகளில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது அதனைத் தொடருவதில் அக்கறையாக உள்ளனர். ஆனால், இலங்கைத்தீவில் என்ன சம்பவம் நிகழ்ந்தாலும் அதனைச் சாட்டாகக் கூறி, அரசியற் தீர்வுக்கான வழிமுறைகளை மாற்றியமைப்பது சாதாரண விடயம். இது சிறிலங்கா, அரசியற் தீர்வின் மேல் ஆழ்ந்த அக்கறை எதுவுமின்றிச் சர்வதேச சமூகத்தைத் திசை திருப்புவதற்காகவே அரசியற் தீர்வைப் பற்றி பேசுகிறது என்பதையே வெளிப்படுத்துகின்றது.

மேலும் பேச்சுவார்த்தை என்பது சிறிலங்காவால் வேறு உள்நோக்குடன் முன்வைக்கப்படுகிறதே தவிர, தமிழர் பிரச்சனைக்குரிய தீர்வாக மட்டுமல்ல, அவர்களின் நாளாந்தப் பிரச்சனைகளுக்குக் கூடத் தீர்வாக அமைவதில்லை. வேறுவார்த்தைகளிற் கூறினால், அரசியல் யதார்த்தத்தைச் சிறிலங்கா ஏற்க ஆயத்தமாக இல்லையெனலாம். இதனாலேயே மூன்றாவது மத்தியஸ்தம் ஒன்றின் தேவை ஏற்படுகின்றது.

1957ஆம் ஆண்டு யோசனைகளை 1996இல் ஆயுதபலத்தைக் கொண்டு தமிழர்கள் மேல் திணிக்கலாம் எனச் சிறிலங்கா அரசு எதிர்பார்க்க, அதையுங்கூட அனுமதிக்கச் சிங்கள– பௌத்த பேரினவாதம் மறுப்பது கொழும்பின் அரசியல் யதார்த்தமாக உள்ளது.

ஆனால் 1957 இல் தமிழர்கள் தங்களுக்கான சக்தியையோ தீர்மானம் மேற்கொள்ளும் வலிமையையோ உருவாக்கிக் கொள்ளாத காரணத்தினால், பேச்சுவார்த்தையின் பொழுது பண்டாரநாயக்கா "சமஸ்டி அரசியலமைப்பை அல்லது பிரதேச சுயாட்சியை மட்டுமல்ல, சிங்கள மட்டும் சட்டத்திற்கான திருத்தங்களைக் கூட நான் அனுமதிக்கமாட்டேன்" என ஆணித்தரமாகக் கூறியபொழுது, "அப்படியானால் சமஸ்டிக் கட்சி தனது அடிப்படைக் கொள்கைகளையோ அல்லது நோக்குகளையோ கைவிடாது சமாளித்துப் போகக் கூடிய வழிமுறைகள் ஏதாவது சாத்தியமாகுமா? என அவரிடமே தமிழ்ப் பிரதிநிதிகள் கேட்ட பொழுதுதான் அவர் 'பிரதேச சபைக் கருத்தைத் திணித்தார். ஆனால் அதையும் பௌத்த சிங்களப் பேரினவாதம் அனுமதிக்கவில்லை.

இன்று தமிழீழ மக்களின் தலைமைப்பீடமான விடுதலைப் புலிகள் சக்தியையும், தமிழீழ மக்களின் மேலான அரசியல் பணிவையும், வலிமையான தீர்மானம் மேற்கொள்ளும் தன்மையையும் கொண்ட உறுதியான அமைப்பாக உள்ளனர். இதனால் "நாம் ஆள்பவர்கள், அவர்கள் ஆளப்படுபவர்கள்" என்ற மமதையுடனோ "நாம் பெரும்பான்மை, அவர்கள் சிறுபான்மை" என்ற அறியாமையுடனோ தமிழீழத் தேச மக்கள் மேல் தன்னிச்சையான தீர்வுகளைத் திணிக்கமுடியாது. இவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, ஒரு தலைப்பட்சமான தனது தீர்வைத் திணிக்க முடியாது என்பது சந்திரிகாவுக்குத் தெரியும். இதனாலேயே கொழும்பில் தீர்வு யோசனைகளைக் கூறி உலகை ஏமாற்றுகிறார்.

அவர் எவ்வளவுதான் ஒற்றையாட்சி நடத்துவதாகக் கூறினாலும் இரு அரசுகள், இருநாடுகள் இலங்கைத்தீவில் இயங்குவதைச் சிறிலங்காவின் ஒவ்வொரு நிர்வாகச் செயற்பாடும் தெளிவாக்குகின்றது. பிறநாடு செல்வது போல், அனுமதி பெற்று ஒருவரின் உறுதிக் கடிதத்துடன் கொழும்பு வந்து அந்நிய நாட்டவரைப்போல் பொலிசில் பதிந்தே தமிழர் கொழும்பிற் தங்கலாம். எனவே இதனைக் காணும் சர்வதேசத் தூதரகங்கள் இலங்கைத்தீவில் இரு அரசுகள் உண்டு என்பதனை இலகுவாக உணர்கின்றன. ஆகவே தமிழீழ அரசு நோக்கிய அரசின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளும், சிற–லங்கா அரசும் தங்கள் நாடுகளின் பிரச்சனைகள் குறித்து, மூன்றாவது நாடு ஒன்றின் மத்தியத்தத்துடன் பேசுவதன் மூலமே இலங்கைத்தீவில் அமைதி உருவாகும்.

## சிறிலங்காவின் பொருளாரத் தடையால் கிழக்கிலும் பொருளாதாரச் சீர்குலைவு

இலங்கையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் யுத்தம், சிறிலங்காவின் பொருளாதாரத்தை இரக்கமின்றி விழுங்கி வருகின்றது என்று கொழும்புச் செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

'தேசிய பொருளாதாரம் ஒரு புறத்தில் வீழ்ச்சியடைய, யுத்தம் நடைபெறும் வடக்கு–கிழக்குப் பகுதிகளின் பொருளாதாரம் மறுபுறத்தில் நலைகுலைந்துள்ளது: பொருளாதாரத்தடை, மீன்பிடித்தடை போன்றவை வடபகுதியின் பொருளாதாரத்தை ஏற்கெனவே சீர் குலைத்து விட்டன. இதையிட்டு அரசு ஒருபோதும் கவலைப்பட்டதேயில்லை. இப்போது இத்தகைய தடைகள் கிழக்கு மாகாணத்தையும் இறுக்கத் தொடங்கியுள்ளன.

கிழக்கு மாகாண மக்கள், விவசாயத்தையும் மீன்பிடியினையுமே தமது பிரதான வாழ்க்கைத் தொழில்களாகக் கொண்டுள்ளனர். இத்தொழில்களை நலிவடையச் செய்யும் பல தடைகள் சிறிலங்கா அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. செழிப்பான விளைநிலங்கள் தரிசு நிலங்களாக மாறிக் கொண்டு வருகின்றன. விவசாயத்தை நம்பியிருந்த பல குடும்பங்கள் தமது தொழில் நம்பிக்கையை இழந்துள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்பிடி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு சுமார் 15,000 கடற்றொழிலாளர் குடும்பங்கள் உள்ளன. மீன்பிடித்தடை காரணமாகப் பெரும்பாலானோர் தமது அன்றாட உணவுக்குக் கஷ்டப்படுகின்றனர். பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி விதிக்கப்பட்டுள்ள தடைகளே இந்த நிலைமைக்குக் காரணம்' என்றும் அச்செய்தித் தாளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடப்பெயர்வும் புலப்பெயர்வும்

தாம் மனங்கொண்ட மண்ணிழந்து, வீடிழந்து, உடுத்த உடுப்போடு இடம்பெயர்ந்து தமிழினத்தின் ஒரு பகுதி தெருவிலே நிற்கும் வேளையிலே, அதனைப் புலப்பெயர்வுடன் ஒப்பு நோக்கி எமது அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தன்மையொன்று இன்று தலைதூக்கியுள்ளது.

சிங்கள அரசு, புலிகளிடமிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றப் போவதாக அறிவித்துக் கொண்டு, கண் மூடித்தனமான இனஅழிப்பு நடவடிக்கையில் கோர வெறியாட்டம் நடாத்த முனைந்த வேளையில் இடம்பெற்றதே இடப்பெயர்வு.

போராட்ட அழுத்தத்தின் நிமித்தம் போராடும் நோக்கின்றி ஒரு சாரார், சிறிது சிறிதாக அவ்வவ்போது குடிபெயர்ந்து பின் வேற்று மண்ணில் குழுமங்களாகப் புலம் பெயர்ந்த தமிழர்களாக இன்று வேரூன்றியுள்ளனர்.

ஆனால் கோரத்தனமாக அழிப்பு நடவடிக்கை ஒன்றின்போது ஒரு மக்கட் கூட்டத்தினர் இரவோடிரவாக அப்படியே முழுதாக, தமது தாயக மண்ணின் இன்னொரு பகுதிக்குள் இடம்பெயர்ந்துள்ளமையை மேற்சொன்ன புலப்பெயர்வுடன் பொருத்திப் பார்ப்பது பேதமை.

புலம் பெயர்ந்த தமிழருட் சிலர், இன்றைய தமிழினத்தின் நிலையை ஒப்பிட்டு "ஒரு பிரச்சனை தோன்றும் போதுதான் 'பெயர்வு' என்பதன் தேவை புரிந்து வருகிறது" என்று புலப்பெயர்வையும் இடம்பெயர்வையும் ஒரு தராசில் இட்டு நிறுக்க முனைவது மிகத் தவறு.

மழை பனியில் நடுங்கி, உண்ண உணவின்றி, நடுத்தெருவில் நின்றபடியும் போராட்டத்துடன் இணைந்து போராட்டத்தின் அங்கமாகி, போராளிகளுடன் கைகோர்த்து நிற்கும் இடம்பெயர்ந்த மக்களெங்கே? எது எப்படி இருப்பினும் நேரத்துக்கு உணவு, மேலைத்தேய சொகுசு என்று வாழும் புலம்பெயர்ந்தோர் வாழ்வு எங்கே? அதேவேளை, புலம்பெயர்ந்தோரிற் பலர் இன்று போராட்டத்தின்பால் இணைந்து அரும்பெரும் உதவி–களைப் பெரிய எழுச்சியான அளவிலே செய்துகொண்டு போராட்டத்தைத் தாங்கிக் கொள்வதிற் தங்கள் கரங்களை மிக வலுவாக்கியுள்ளார்கள் என்பதும் மறக்கப்படக்கூடியதல்ல. ஆனால், அதற்காக இரண்டையும் ஒப்புநோக்கித் தளம்புதல் தேவையற்றது.

அதேபோல, புலம்பெயர்ந்தோருக்கும் இன்று மிகப் பெரிய பாரிய பொறுப்பு உள்ளது. என்னதான் சொல்லினும், தாயகத்திலுள்ளவர்களை விட புலம்பெயர்ந்தவர்களாகிய நாம் வசதியாக உள்ளோம். போராட்டத்தைக் தாங்கிப் பிடித்துக் கொள்வது என்பதைத் தாண்டி, போராட்டத்தை நகர்த்துவது என்ற பெரும் பணியும் புலம்பெயர்ந்தோரிடமே உள்ளது. உடனடியாக நாம் அப்பணியைச் செய்யத் தவறினால் எதிரியின் திட்டங்கள் நிறைவேற நாமாகவே வழி சமைத்தவர்கள் ஆவோம். பிறகு தமிழினம் இடம்பெயர்ந்தது என்றல்ல, புலம் பெயர்ந்தது என்றுமல்ல, அது குலம் பெயர்ந்தது என்றாகிவிடும்.

www.tamilarangam.net



# இலங்கையின் இனப் பிரச்சனைக்குச் சமஷ்டி அமைப்பு உதவாது

இலங்கையில் இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வு காண்பதென்பது, சிங்கள மக்களிடமிருந்து தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு செய்வதாக அது இருக்க முடியாது. தமிழ் மக்கள் தங்களது சுதந்திரத்திற்கும் தேசியத் தன்மைக்கும் வேறு எவரிட மிருந்தும் கையேந்தத் தேவையில்லை. இவ்விரண்டி ற்கும் தமிழர்கள் என்ற முறையில் சிங்களவர்களுக்கு எவ்வகை உரித்துண்டோ, அதே விதமான இன்னும் கூறப்போனால் சிங்களவர்களுக்கு இருந்த உரித்திலும் பார்க்கத் தமிழர்களுக்குக் கூடிய உரித்து உண்டு. ஆகவே சிங்களவர்கள், தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு செய்வதன் மூலம் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணலாமென்பது பொருத்தமானதல்ல.

சுயாட்சி உரிமையும் அதிகாரப்பகிர்வும் ஒன்றுக்கொன்று முரண்பாடான கோட்பாடுகளாகும். உதாரணத்திற்குப் பல நாடுகளை அல்லது தேசியங்களைக் கொண்ட ஒரு சாம்ராஜ்யம் அல்லது சக்கரவர்த்தி அதன் கீழ் அல்லது தன் கீழ் இருக்கும் நாடுகளிற்கு அதிகாரங்களைப் பகிர்வு செய்தல் அதிகாரப் பரவலாக்கம் ஆகும். இங்கு அதிகாரம் உச்சியிலிருந்து பகிரப்படுகிறது. சுயாட்சி உரிமை என்பது, அடிமட்டத்திலிருந்து மக்களினால் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு குழுவிற்கு அல்லது அரசிற்கு நம்பிக்கையின் பேரில் சட்டவாக்கு, நிறைவேற்று, நீதி, நிர்வாக அதிகாரங்களை நிறைவேற்றுமாறு வழங்கப்பட்ட அதிகாரமாகும். இங்கு அதிகாரம் கீழ் மட்டத்திலிருந்து மேல் நோக்கிச் செல்கின்றது. தமிழர்கள் ஒரு போதும் தங்களது இறைமையைக் கைவிட்டு, அதைச் சிங்களவர்களிடம் அதிகாரம் செய்யும்படி வழங்கியிருக்கவில்லை.

சுயாட்சி உரிமையும் அதிகாரப்பகிர்வும் ஒன்றுக்கொன்று முரண்பாடான கோட்பாடுகளாகும். உதாரணத்திற்குப் பல நாடுகளை அல்லது தேசியங்களைக் கொண்ட ஒரு சாம்ராஜ்யம் அல்லது சக்கரவர்த்தி அதன் கீழ் அல்லது தன் கீழ் இருக்கும் நாடுகளிற்கு அதிகாரங்களைப் பகிர்வு செய்தல் அதிகாரப் பரவலாக்கம் ஆகும். இங்கு அதிகாரம் உச்சியிலிருந்து பகிரப்படுகிறது. சுயாட்சி உரிமை என்பது, அடிமட்டத்திலிருந்து மக்களினால் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு குழுவிற்கு அல்லது அரசிற்கு நம்பிக்கையின் பேரில் சட்டவாக்கு, நிறைவேற்று, நீதி, நிர்வாக அதிகாரங்களை நிறைவேற்றுமாறு வழங்கப்பட்ட அதிகாரமாகும். இங்கு அதிகாரம் கீழ் மட்டத்திலிருந்து மேல் நோக்கிச் செல்கின்றது. தமிழர்கள் ஒரு போதும் தங்களது இறைமையைக் கைவிட்டு, அதைச் சிங்களவர்களிடம் அதிகாரம் செய்யும்படி வழங்கியிருக்கவில்லை.

1978 ஆம் ஆண்டின் சிங்கள அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது சரத்து, இறைமை மக்களிடமிருந்து பெறப்படுகின்றது என்று கூறுகிறது. அவ்விதமாயின் ஏற்கனவே இறைமை கொண்டுள்ள தமிழ் மக்களுக்குச் சில அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்க முடியும்.

## சமஷ்டி உதவாது

இந்த நிலையில், இலங்கையின் இனப்பிரச்சனைக்குச் சமஷ்டி அரசியலமைப்பு ஒவ்வாதது என்பதைக் கவனத்திற்கு எடுப்போம். இது சம்பந்தமாக 1956 ஆம் ஆண்டு கார்த்திகை 19 ஆம் திகதி அக்காலத்தில் தமிழர்களின் தனிப்பெரும் தலைவராகக் கருதப்பட்ட திரு.எஸ். ஜே.வி. செல்வநாயகம் அவர்கள், பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கீழ் வருமாறு கூறியதை இங்கு கவனத்திற்கு எடுப்பது நல்லது.

நாங்கள் தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளைத் திரும்பப் பெறுவதற்கு ஒரு காலத்தில் சமஷ்டி இயக்கத்தைத்தொடக்கினோம் ஆனால் நாங்கள் சமஷ்டி அமைப்பின் மூலம் எமது நோக்கத்தை நிறைவேற்ற முடியாது என்பதை இப்போது கண்டுள்ளோம். இந்த அனுபவத்தின் காரணமாக நாங்கள் பிரிய வேண்டும் என்ற முடிவிற்கு வந்துவிட்டோம். அவ்வித முடிவிற்கு வராவிட்டால் தமிழ் பேசும் மக்கள் தமது இழந்த உரிமைகளை மீளப்பெறமுடியாது. எமது மூதாதையர்கள் புத்திசாலிகள். அவர்களுக்கென தனி இராச்சியம் ஒன்று இருந்தது. இலங்கை வரலாற்றில் எமக்கென ஒரு இடம் இருந்தது. எமது இயக்கத்தின் மூலம் நாம் நாட்டைப் பிரிக்கும்படி கோரவில்லை. நாம் இழந்தவற்றைத் திரும்பப் பெறத்தான் முனைகிறோம். எமது கட்சி இன்று தனிநாடொன்றை அமைக்கும் எண்ணத்தோடுதான் இயங்குகின்றது. தனிநாட்டைப் பெறுவது என்பது கடினமான விடயம் என்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் சிங்களவரது அதிகாரப் பிடியில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும். அல்லாவிடின் நாங்கள் அழிந்து விடுவோம். அவ்விதம் நடக்கும் என்பது உண்மை. ஆகவே இந்தப் பிரிவினையை நாங்கள் பெற்றே ஆகவேண்டும். சமஷ்டி வேண்டியவர்களாகிய நாம் அக்கோரிக்கையைக் கைவிட்டு விட்டோம்.

## மத்திய அரசு

சமஷ்டி அமைப்பென்பது, 'அங்கத்துவ மக்களிடையே வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒரு ஒற்றுமையையே குறிக்கும்.' சமஷ்டி அமைப்புக்காக வருடக்கணக்காகப் போராடிய திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகமே அதைக் கைவிட்டார். அவருடைய காலத்துக்குப் பின் தமிழர், சிங்களவர்களுக்கிடையேயான அடிப்படை வித்தியாசங்கள் பல வெளிப்படையாகத் தோற்றம் பெற்றன. ஒரு சமஷ்டி அமைப்பின் கீழ் பொது நோக்கங்களுக்காகச் சமூகமாக இயங்குதற்கு இருபகுதியினராலும் முடியாத நிலை உருவாகி உள்ளது. ஒரு சமஷ்டி அமைப்பிற் சில பொது நிறுவனங்களை இருபாலாரும் சேர்ந்து இயக்க வேண்டிய கட்டாயம் இருக்கும்.

வரலாற்று ரீதியாகப் பௌத்த மதபீடங்களும் அவர்களின் பகடைக்காய்களாக இருந்த சிங்கள அரசியல்வாதிகளும் தமிழருக்கு எதிராகக் கொண்டிருந்த எதிர்ப்பு உணர்வும், இரு இனங்களுக்கிடையே நிரந்தரமாக அமைந்துள்ள சனத்தொகை வித்தியாசமும் இத்தகைய பொது நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று முரணான திசையில் இயங்குவதற்கே வழி வகுக்கும். இது தமிழர்களுக்குப் பாதகமாக அமையும். இவ்வாறான விடயம் வெளிவிவகார நடவடிக்கைகளில் இடம்பெறும் என்று எடுத்துக் காட்டலாம். ஏனெனில் வெளிவிவகார விடயங்கள் பொதுவாக மத்திய அரசைச் சார்ந்ததாகும். உதாரணத்துக்கு இந்தியாவுக்கு எதிரான வெளிவிவகாரக் கொள்கையைச் சிங்களவர்கள் கொண்டிருப்பதைத் தமிழர்கள் எதிர்க்கும்போது அந்த எதிர்ப்பினால் ஒரு பயனும் ஏற்படாது.

## தற்கொலை

பாதுகாப்பு, மத்திய அரசைச் சார்ந்த விடயம். எனவே மத்திய அரசு முப்படைகளையும் தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும். சிறிலங்காவில், தமிழர்களை இம்சைப்படுத்தச் சிங்களவர்கள் தங்கள் சொந்தப் படையைப் பாவிப்பதுமல்லாமல், வெளிநாட்டுப்படை ஒன்றையும் வரவழைத்ததை மறந்துவிட முடியாது. இந்த மாதிரியான நிலையிற் பெரும்பான்மைச் சிங்களவர் படையினைச் சிங்களவர்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்குத் தமிழ் மக்கள் ஆதரவு வழங்கினால் அது தற்கொலைக்குச் சமமான விடயம் ஆகும்.

## இன ஒழிப்பு

தமிழர்களின் தேசிய உரிமைகளுக்குச் சனத்தொகையிற் கூடிய தொகையினராக்வுள்ள சிங்கள மக்கள் மதிப்புக் கொடுக்க மனம் உள்ளவர்களாக இருந்தால் மட்டுமே, ஒரு சமஷ்டி அமைப்பை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும். ஆனால் உண்மைநிலை என்ன? சிங்களவர்கள், தமிழர்களை ஒரு பொருட்டெனக் கருதாது, தமிழர்களிற் பெருந்தொகையினரை இனப்படுகொலை மூலம் அழித்தொழிக்கவும் அவர்களின் வாழ்வுக்குத் தேவையான வளங்களை அவர்களிடமிருந்து பறித்தெடுத்து, அவர்களைத் தமது தாயகத்தைவிட்டு வெளியேற வைத்து, அவர்களின் நிலங்களைப் பறித்தெடுத்து மிகுதியானோரை விருப்பமின்றியே சிங்களவர்களுடன் சங்கமிக்கவும் செய்து வருகிறார்கள். இந்தப் பின்னணியில் இலங்கைத் தீவின் இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்குச் சமஷ்டி அரசியலமைப்பு உதவுமென்று எண்ணுவது மடைத்தனம்.

தமிழர்களின் தேசிய உரிமைகளுக்குச் சனத்தொகையிற் கூடிய தொகையினராகவுள்ள சிங்கள மக்கள் மதிப்புக் கொடுக்க மனம் உள்ளவர்களாக இருந்தால் மட்டுமே, ஒரு சமஷ்டி அமைப்பை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும். ஆனால் உண்மைநிலை என்ன? சிங்களவர்கள், தமிழர்களை ஒரு பொருட்டெனக் கருதாது, தமிழர்களிற் பெருந்தொகையினரை இனப்படுகொலை மூலம் அழித்தொழிக்கவும் அவர்களின் வாழ்வுக்குத் தேவையான வளங்களை அவர்களிடமிருந்து பறித்தெடுத்து, அவர்களைத் தமது தாயகத்தைவிட்டு வெளியேற வைத்து, அவர்களின் நிலங்களைப் பறித்தெடுத்து மிகுதியானோரை விருப்பமின்றியே சிங்களவர்களுடன் சங்கமிக்கவும் செய்து வருகிறார்கள். இந்தப் பின்னணியில் இலங்கைத் தீவின் இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்குச் சமஷ்டி அரசியலமைப்பு உதவுமென்று எண்ணுவது மடமை.

ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டதால் ஏற்கனவே தமிழர்கள் பாதகமான விளைவுகளுக்கு உள்ளாகியுள்ளனர். இதிலிருந்து விடுபடுவதற்கான எமது முயற்சியின் பின்னரும், எமது வருங்காலச் சந்ததியினரின் இறைமையைச் சிங்களவரின் பெரும்பான்மைப் பலம் பாதிக்கக் கூடிய சமஷ்டி அரசியலமைப்புக்குள் மாட்டிவிடுவது புத்திசாலித்தனமல்ல.

## போலி வார்த்தைகள்

தமிழ் இனம், சிங்களவர்கள் மீது ஆட்சி செலுத்த விரும்பவில்லை. அதேவேளை, சிங்களத் தேசத்தினரால் தமிழர்கள் ஆளப்படுவதையும் விரும்பவில்லை. சிங்களவரின் ஒத்துழைப்பின் பேரிலும் இறைமையின் பேரிலும் தமிழர்களைத் தம் காலடியின் கீழ் வைத்திருக்கும் எண்ணத்தைச் சிங்கள அரசுகள் கைவிட வேண்டும். தேசிய ஒற்றுமை, சகலருக்கும் சமத்துவம் போன்ற சொற்பதங்கள் சிங்களவர்களால் உபயோகிக்கப்படுவது, தமிழர்கள் மீது குதிரை விடத்தான் என்பதைத் தமிழ் மக்கள் தெளிவாகத் தெரிந்து வைத்துள்ளனர்.

## தமிழ் ஈழம்

சிங்களவர்களின் இனஅழிப்பு நடவடிக்கைகள், தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை ஏற்றுக்கொள்ளாத நியாயமற்ற போக்கு ஆகியன தமிழ் மக்களுக்கு ஒரு தனிநாடு கட்டாயமாகத் தேவையென்பதை உறுதிப்படுத்தியுள்ளன. இலங்கைத் தீவு இரு சுதந்திரமான நாடுகளாகப் பிரிவது நன்மை பயக்காது என்ற வாதம் எடுபடாததொன்றாகும். தமிழீழத்திலும் பார்க்கச் சிறிதான முப்பத்தாறு சுதந்திர நாடுகள் உலகில் உள்ளன. ஒரு நாடு சுதந்திரமாக இயங்க முடியுமா என்பதைத் தீர்மானிப்பது அதன் அளவல்ல. அந்த நாட்டில் உள்ள வளங்களும், அங்கு வாழும் மக்களின் விடாமுயற்சியுமே அந்த நாடு சுதந்திரமாக இயங்குவதற்குத் தேவையான அம்சங்களாகும். திட்டமிட்ட முறையில் தமிழீழப் பகுதி கவனிக்கப்படாது, அபிவிருத்தி செய்யப்படாது விடப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் பொருளாதார மீட்சி, அவர்கள் அரசியற் சுதந்திரத்தை அடைவதில்தான் தங்கியுள்ளது. ஆகவே தமிழீழம்தான், தமிழர்களைப் பொறுத்தளவு முடிந்த முடிவாகும்.

www.tamilarangam.net



# தனிநாடு, தனியரசு தமிழ் மக்களின் பிறப்புரிமை

## போர் தொடர்வதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் சிங்களவர்களேயன்றித் தமிழர்கள் அல்ல

-நக்கீரன்

கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாகத் தமிழர் – சிங்களவர்களுக்கு இடையிலான இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண எடுத்த சகல முயற்சிகளும் தோல்வி கண்டுள்ளன.

*1957* இல் எழுதப்பட்ட பண்டா – செல்வா ஒப்பந்தம் கிழித் தெறியப்பட்டது.

*1965* இல் எழுதப்பட்ட டட்லி – செல்வா ஒப்பந்தம் ஓசைப்படாமற் கைவிடப்பட்டது.

இவற்றைவிட வட்டமேசை மாநாடுகள், சர்வகட்சி மாநாடுகள், பாராளுமன்றத் தெரிவுக்குழுக்கள் என்பன காலத்துக்குக்காலம் கூட்டப்பட்டன. இவை குற்றுயிரும் குறையுயிருமாகப் படுக்கையிற் கிடந்து உயிரைவிட்டன.

*1987* இல் எழுதப்பட்ட இந்திய – சிறிலங்கா ஒப்பந்தம் இனப்பிரச்சனையை வளர்க்க உதவியதேயொழிய, தீர்க்க உதவவில்லை.

அதிகாரப் பரவலாக்கல் பற்றிக் கவலைப்படாத, அதைக் கேட்காத சிங்கள மக்களது தலையில், இந்திய – சிறிலங்கா ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபைகள், தூக்கி வைக்கப்பட்டன.

அதற்குமுன், *1981* இல் உருவாக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபைகள் மிகக் குறுகிய காலத்துக்குள் சிவபதமடைந்தன.

இந்த ஒப்பந்தங்களும், மாவட்ட – மாகாண சபைகளும் இனப்பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வுகாணத் தவறியதற்கு முக்கிய காரணம், சிங்களவர்களுக்கும் – தமிழர்களுக்கும் சமவுரிமை உண்டு என்ற உண்மை ஒத்துக்கொள்ளப்படாததேயாகும். ஒரு தேசிய இனத்துக்குரிய வரைவிலக்கணங்கள் தமிழர்களுக்கு உண்டு.

இன்றைய உலகநாடுகளைப் பார்ப்போமேயானால் அவை, இன அடிப்படையில் உருவாக்கப்பட்டிருப்பதைக் கண்கூடாகக் காணலாம்.

தமிழர்கள் தங்களது உரிமைகளைப் பெறுவதற்குச் சிங்களவர்களிடம் அனுமதி பெறத் தேவையில்லை. அதுமட்டுமல்லாமல், அவர்களது தயவும் அனாவசியமானது.

தனிநாடு, தனியரசு என்பது தமிழ் மக்களது பிறப்புரிமையாகும்.

தமிழ் மக்களது தமிழீழம் நோக்கிய விடுதலைப் பயணம், இடையில் அந்நியப் படையெடுப்பினால் கைப்பற்றப்பட்ட தமிழரசை மீண்டும் நிலைநாட்டுவதற்கான பயணமாகும்.

*1619* இல் யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயரால் யுத்தமுனையிற் கைப்பற்றப்பட்டபோது, அதனது இறைமை யாழ்ப்பாண மன்னனிடம் இருந்து போர்த்துக்கேய அரசிடம் கைமாறியது.

*1972* இல் இலங்கை முடியாட்சியைக் கைவிட்டுக் குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டபோது, ஐரோப்பியரிடம் பறிபோன தமிழர் இறைமை மீண்டும் சிங்களவர் மீது பாரப்படுத்தப்பட்டது.

*1972* இல் நிறைவேற்றப்பட்ட புதிய அரசியல் யாப்பைத் தமிழ்மக்களாற் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நிராகரித்ததன் மூலம், அந்த அரசியல் யாப்புக்குத் தமிழ்மக்கள் கட்டுப்பட மறுத்தார்கள்.

*1978* இல் நிறைவேற்றப்பட்ட புதிய யாப்பையும் தமிழ்மக்கள் சார்பில், தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நிராகரித்தார்கள். எனவே இன்றைய தமிழீழ விடுதலைப் போராட்டமானது, தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட இறைமையை மீளப்பெற நடத்தப்படும் போராட்டமாகும்.

அகிம்சைப் போராட்டம் தோல்வி கண்டதாலேயே, ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது.

தமிழர்களின் இறைமையைச் சிங்களவர் அங்கீகரித்தால் இனப்பிரச்சனை தீர்ந்து விடும்.

சிங்களத் தேசிய இனம், தமிழ்த் தேசிய இனத்தின் இறைமையை மறுப்பதன் காரணமாகவே போர் தொடர்கிறது. போர் தொடர்வதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் சிங்களவர்களேயொழிய, தமிழர்கள் அல்ல.

> போர் தொடர்வதினால் தமிழர்களுக்குப் பாரிய ஆள், பொருள் இழப்பு ஏற்படுகிறது என்பது உண்மை, ஆனால் இந்த ஆள், பொருள் இழப்புக்களை தமிழர்கள் தங்கள் இறைமைக்கும், சுதந்திரத் துக்கும் கொடுக்கவேண்டிய விலையாகக் கருதுகிறார்கள்.
>
> ஆனால் சிங்களவர்களுக்கு ஏற்படுகின்ற பெரிய ஆள், ஆயுத, பொருள் இழப்புக்களுக்கு அவர்களுடைய அர்த்தம் இல்லாத ஏகாதிபத்திய ஆசையே காரணமாகும்.

போர் தொடர்வதினாற் தமிழர்களுக்குப் பாரிய உயிர், பொருள் இழப்பு ஏற்படுகிறது என்பது உண்மை. ஆனால் இந்த உயிர், பொருள் இழப்புக்களைத் தமிழர்கள் தங்கள் இறைமைக்கும், சுதந்திரத்துக்கும் கொடுக்கவேண்டிய விலையாகக் கருதுகிறார்கள்.

ஆனால், சிங்களவர்களுக்கு ஏற்படுகின்ற பெரிய ஆள், ஆயுத, பொருள் இழப்புக்களுக்கு அவர்களுடைய அர்த்தம் இல்லாத ஏகாதிபத்திய ஆசையே காரணமாகும்.

இலங்கை இரு நாடுகளை, இரு தேசிய இனங்களை உள்ளடக்கிய ஒரு தீவு என்ற யதார்த்தம் ஒத்துக்கொள்ளப்படவேண்டும்.

இந்த இரு நாடுகள்–இரு இனங்களுக்கு இடையிலான சமத்துவம் (parity of status) அங்கீகரிக்கப்பட வேண்டும்.

சமத்துவம் என்று சொல்லும் போது, எண்ணிக்கைச் (quantity) சமத்துவத்தைக் குறிப்பதென்று அர்த்தமல்ல. அது தராதரச் சமத்துவத்தை (qualitative)க் குறிப்பதாகும்.

தமிழ்–சிங்கள இனங்களுக்கிடையிலான இந்தத் தராதரச் சமத்துவத்தை அங்கீகரிக்காத எந்தத் தீர்வும் இனப்பிரச்சனையைத் தீர்க்கப் போவதில்லை.

முன்னைய தீர்வு எத்தனங்கள் எவையும் இந்த யதார்த்தத்தை அங்கீகரிக்க மறுத்த காரணமாகவே, அவை தோல்வியில் முடிந்தன.

> தமிழர்கள் தங்களது உரிமைகளைப் பெறுவதற்குச் சிங்கள வர்களிடம் அனுமதி பெறத் தேவையில்லை. அதுமட்டும் அல்லாமல், அவர்களது தயவும் அனாவசியமானது. தனிநாடு, தனியரசு என்பது தமிழ் மக்களது பிறப்புரிமையாகும்.
>
> தமிழ் மக்களது தமிழீழம் நோக்கிய விடுதலைப் பயணம், இடையில் அந்நியப் படையெடுப்பினால் கைப்பற்றப்பட்ட தமிழரசை மீண்டும் நிலைநாட்டுவதற்கான பயணமாகும்

சனாதிபதி சந்திரிகாவினால் மிகவும் விளம்பரப்படுத்தப்பட்ட தீர்வுத்திட்ட யோசனைகளும், இந்த இரு இனங்களுக்குமிடையிலான தராதர சமத்துவத்தை அங்கீகரிக்க மறுக்கிறது.

கடந்த ஆண்டு ஆவணி மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அரைகுறைத் தீர்வு யோசனைகள் வழமைபோல இளைக்க ஆரம்பித்து விட்டன. இந்திய இணைப்பாட்சி ஆட்சி முறையைவிடப் பல மடங்கு உயர்வானது என வர்ணிக்கப்பட்ட இனப்பிரச்சனைக்கான தீர்வு யோசனைகள், சிங்கள–பௌத்த இனவாதச் சக்திகளின், குறிப்பாகக் கண்டி அஸ்கிரிய மல்வத்தை பௌத்த பீடாதிபதி களினது, கடும் எதிர்ப்புக் காரணமாக மலினப்படுத்தப்பட்டுள்ளது.

முக்கிய தீர்வு யோசனைகளில், சிறிலங்கா எட்டுப்பிரதேசங்களைக் கொண்ட ஒன்றியம் என்று இருந்ததற்குப் பதிலாக, சிறிலங்காக் குடியரசு கலைக்க முடியாத பிரதேசங்களைக் கொண்ட ஒன்றியம் (the Republic of Sri Lanka shall be in undisoluble union of Regions) என மாற்றப்பட்டுள்ளது.

இதன் அர்த்தம் இலங்கைத்தீவை ஒருபோதும் யாரும் துண்டாட முடியாதென்பதாகும்.

இதற்கு ஏதுவாகப் பிரதேச சபைகளைக் கலைக்கும் அதிகாரம் சனாதிபதியிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலாக வெளிநாட்டுக் கடனுதவி, முதலீடு போன்றவற்றில் பிரதேசசபைகளது அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வட–கிழக்குப் பிரதேச சபையின் அலகு எதுவென்பது அந்தரத்தில் விடப்பட்டுள்ளது.

முக்கியமாக இத்தீர்வுத்திட்ட யோசனைகள் சந்திரிகா அரசுக்கு முண்டு கொடுக்கும் கூலித் தமிழ்க் கட்சித் தலைவர்களையே திருப்திப்படுத்தத் தவறியுள்ளது.

இதனால் இத் தலைவர்கள், இத்தீர்வுத்திட்ட யோசனைகளை எதிர்க்கப் போகின்றார்கள் என்று அர்த்தமில்லை.

பிச்சைக்காரர்கள் தேர்ந்தெடுக்க முடியாது (Beggars cannot be choosers) என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. இந்தக் கூலித் தலைவர்கள் பிச்சைக்காரர்களை விட மோசமான பிச்சாதிபதிகள்.

வேடிக்கை என்னவென்றால், கலப்படம் செய்யப்பட்ட தீர்வு யோசனைகளைச் சிங்கள–பௌத்த இனவாதிகளும் தீவிரமாக எதிர்க்கிறார்கள்.

கல்யாண வீட்டில் அழுபவர்கள், இழவு வீட்டைக் கண்டால் விடுவார்களா என்ன?

மாவட்ட சபையை, நாட்டைத் துண்டாடும் அரசியற் திட்டம் என்றவர்கள் பிரதேச சபையை விட்டு வைப்பார்களா என்ன?

இந்தச் சிங்கள–பௌத்த இனவாதிகளுக்குத் தமிழர்களை ஒட்டுமொத்தமாக இந்து சமுத்திரத்தில் அமுக்கி, சாகடிக்கும் மட்டும் தூக்கமே வராது என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

கனடா, இலங்கைத் தீவைப்போலவே இரண்டு நாடுகள், இரண்டு பிரதேசங்கள், இரண்டு தேசிய இனங்களைக் கொண்ட நாடு.

இணைப்பாட்சி அரசியல் யாப்பு மூலம், இந்த இரு தேசிய இனங்களும் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

www.tamilarangam.net



# மணலாறு

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, பின் மனிதரைக் கடிப்பது போல், தமிழ் மக்களின் பிரதேசமான மணலாற்றுப் பகுதிக்கு முதலிற் காலபோக மீன்பிடித் தொழிலுக்கென்று, தற்காலிகமாகச் சிங்களவர்கள் சென்றனர். பின்னர் சில சிங்களவர்கள் கபடத்தனமாகக் குடியேற்றப்பட்டனர். அதன் பின்பு அங்கு வாழ்ந்த தமிழ் மக்களைப் பலவந்தமாக இராணுவ உதவியுடன் விரட்டிக்கலைத்து விட்டு, அரசு இயந்திர உதவியோடு சிங்களவர்கள் பெருமளவிற் குடியேற்றப்பட்டனர்.

அவ்விதம் குடியேற்றப்பட்ட பின்னரும் இதுவரையும் அரசியற் சிக்கல்கள் காரணமாகவும் விமர்சனங்கள் ஏற்படுமே என்ற அச்சத்தாலும் மணலா ற்றுப்பகுதி அநுராதபுரம், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்குப் பொதுவாகவே இருந்து வந்தது. சிறிலங்கா அரசு, யாழ்ப்பாணத்தில் ஒரு போலியான வெற்றியை அடைந்ததுபோல், மேலும் மேலும் வெற்றிகள் கிடைக்கும் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருப்பதால், சில தீர்க்கமான பிழையான தீர்மானங்களைச் சூட்டோடு சூடாக எடுத்து விடுவது நல்லது என்று கருதுகிறது. அந்த அடிப்படையில் மிகப் பாரிய இராணுவ முகாம்களையும் அவற்றின் பாதுகாப்புடன் இன்னும் விடுதலைப் புலிகளின் பயத்தால் வெளியேறாத சில சிங்களக் குடும்பங்களையும் கொண்டுள்ள தமிழ் மண்ணான மணலாற்றை ஒரு சிங்களப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி, அதை ஒரு உதவிப் பிரதேசச் செயலர் பிரிவாக அரசு ஆக்குகிறது. தமிழ் மணலாறு, சிங்கள வெலிஓயாவாக மாறுகிறது.

மணலாற்றின் வரலாறு தெரியாத, குறைந்தபட்சம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சனத்தொகை மதிப்பீடுகளைத்தானும் படித்தறியாத சிங்களப்புத்திஜீவிகளும், ஏன் அவர்களுக்கு வக்காலத்து வாங்கும் பேற்றம் பஸ்தியாம்பிள்ளை போன்ற தமிழ்ப் புத்திஜீவிகளும், மணலாறு என்ற பிரதேசம் இருக்கவில்லை, இருந்தது வெலிஓயா ப்பிரதேசமே என்று மேசையிற் குத்தி வாதாடுவர்.

அநியாயமான முறையில், தமிழ் மக்களின் தாயக பூமியை அபகரிக்கும் சிறிலங்கா அரசு, தான் கைப்பற்றிய யாழ்ப்பாணத்தைப் புனரமைக்கப் போகிறது என்று பிரச்சாரம் செய்கிறது. இராணுவம் யாழ்ப்பாணத்தில் அகலக் கால்விரித்து விட்டுக் குலை நடுக்கத்துடன், தினமும் இழப்புக்களைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது. யாழ். நகர சபைப் பகுதியைக்கூட முறையாகத் தம்வசப்படுத்தாமல், . விடுதலைப் புலிகளின் தாக்குதல்க ளுக்கு எதிராகச் சதா செல்களை அடித்துக் கொ ண்டிருக்கும் இவ்வேளையில், யாழ்ப்பாணத்தைப் புனரமைப்பது என்று கதைப்பது கேலிக்குரிய விடயமாகும். வேண்டுமென்றால், யாழ்ப்பாண வீடுகளையும் கட்டடங்களையும் மேலும் தகர்க்கலாம். அழிக்கலாம். புனருத்தாரணம் மாத்திரம் செய்ய முடியாது.

அரசு, யாழ்ப்பாணத்திற் சிவில் நிருவாகத்தை அமைப்பதற்கு முன்னோடியாகப் பொலிஸ் நிலையங்களைத் திறந்து வைக்கிறதாம். இரண்டாயிரம் மக்கள்கூட இல்லாத இடத்தில், அதிலும் சுமார் 1500 பேர்வரை தள்ளாத வயோதிபர்களே. பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்ட வைபவத்தில் 400பேர் சமூகமளித்திருந்தனராம். அவர்களுக்குப் பொலிஸ் பாண்ட் வாத்திய இசை வாசித்துக் காட்டப்பட்டு, இசை நிகழ்ச்சியும் நடைபெற்றதாம்.

இவையெல்லாம் காட்டப்பட்டு அவர்கள் ஏமாற்றப்படுவார்கள். இன்னொரு விடயம் என்னவென்றால், பொலிஸ் நிலையத் திறப்புவிழாவில் பொலி ஸ்மா அதிபர் இராஜ குரு அவர்கள்

(இவர் ஒரு தமிழர் அல்ல), விரைவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பின்னர் பருத்தித்துறை, சாவகச்சேரிப் பகுதிகளிலும் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படும் என்று கூறியதாகும். சிங்கள மக்களைத்தான் ஏமாற்றலாம் என்றால், உலகத் தையும் ஏமாற்றுவதற்குச் சிறி லங்கா அரசு முனைகிறது.

# நியூட்டனின் மூன்றாம் விதியும் இன்றைய சிறிலங்கா - தமிழீழப்போரும்

**இனியவன்**

எந்த ஒரு தாக்குதலுக்கும் சமனானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு எனும் மதிப்புக்குரிய ஐசாக் நியூட்டனின் 3 ஆம் விதி, தமிழர்களால் வரையறுக்கப்படும் தமிழீழத்தினது போரைப் பாதித்து நிற்கின்றது? தொன்று தொட்டு இன்று வரை மாறி மாறி வரும் சிறிலங்கா ஆட்சிப் பீடத்தில் ஆட்சி மாற்றங்களை உற்றுக் கவனிக்கும்போது, அந்த ஆட்சியாளர்கள் அனைவரும் தமிழர்களுக்குச் சரியான அந்தஸ்த்தை வழங்காது அவர்களைச் சிறுபான்மை இனம் என்ற கண்ணோட்டத்துடன் நோக்கத் தொடங்கிய வரலாறு, சேர்.பொன். இராமநாதன் காலத்திலிருந்து இன்றைய சந்திரிகா ஆட்சி வரை நீண்டே செல்கின்றது. இவர்களெல்லாம் தமிழர்களை ஓர் இரண்டாந்தரப் பிரசைகளாகவே கருத்தில் எடுத்து வந்துள்ளனர். இதற்கு நல்லதோர் உதாரணமாகத் தமிழர்கள் மீதான தனிச்சிங்களச் சட்டம், தரப்படுத்தற் சட்டம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றுக்கெல்லாம் எதிராக, அன்றைய தமிழரசுக் கட்சியினர் தொடக்கம் பல பழுத்த தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவரும் குரல் கொடுத்ததுடன், அகிம்சை வழியிலான போரைச் செய்தும், இடித்துரைத்தும் வந்தனர். ஆனாற் சிங்கள ஆட்சியாளர்களோ அதனைச் செவிடன் காதில் ஊதிய சங்கைப் போன்று விட்டு விட்டு, அசமந்தப் போக்குடன் செயற்பட்டு வந்தமையையும் வரலாறுகள் தெளிவாகக் காட்டி நிற்கின்றன. இப்படி அகிம்சை வழியிற் தோல்வி கண்ட தமிழர்கள், ஆயுதப் போராட்டத்திற்குத் தங்கள் ஒருமித்த பலத்தைக் காட்டிக் குரல் கொடுத்தனர். இதன் பின்பு தமிழர் பிரதேசமெங்கணும் ஆயுதப் போராட்டம் விரிவடைந்து வந்தது. இதிற் சில தமிழ் ஆயுதக் குழுக்கள் தமது குறிக்கோளையும் மீறித் தமிழர்களுக்கும், தமிழர்களின் ஆயுதப் போராட்டங்களிற்கும் முரணான வகையிற் சுயநலத்தோடு செயற்பட்டமையால் இவ்வமைப்புக்கள் அனைத்தும் தமிழர்களின் ஒட்டு மொத்த ஆதரவுடன் விடுதலைப் புலிகளாற் தடைசெய்யப்பட்டதுடன், தமிழர்கள் தமது ஆத்ம பலம் விடுதலைப் புலிகள் மட்டுமே என்று கூறிவருவது, இப்போது உலக நாடுகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் நன்றாகவே தெரியும். இதற்கு ஆதா ரமாக 1994 ஆம் ஆண்டு வைகாசி மாதம் சுபமங்களா சஞ்சிகை ஆசிரியருக்கு வழங்கிய செவ்வியைப் போன்று, எத்தனை வகையான தமிழர்களின் வாய்வழியான செவ்விகளையும், உணர்ச்சிக் கொந்தளிப்புக்களையும் அனைவரும் காதாற் கேட்டும் கண்ணாற் பார்த்தும் அறிந்து வருகின்றோம்.

எந்த ஒரு விடுதலை அமைப்பிலும் ஆயுதங்களைக் கீழே வைத்துப் பேச்சுவார்த்தை நடந்தது இல்லை. ஆனால், தமிழர்களின் பலமான ஒரேயொரு விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதங்களைக் கீழே போடுமாறும், அதன் பின்பே பேச்சுவார்த்தை என்றும் சந்திரிகா அம்மையாரும், ரத்வத்தவும் கூறி வருவது தமிழர்களை மேலும் விரக்திக்கு உள்ளாக்குவதுடன், அவர்களைத் தனித்தமிழீழம் தான் முடிந்த முடிவு என்ற நிலைக்கும் கொண்டு வந்து விட்டது.

சந்திரிகா அம்மையாரும் தமிழர்கள் மீதான வழமையான அநீதிகள், ஆக்கிரமிப்புக்கள், கலாச்சார ஒடுக்கு முறைகள், கல்விச் சீரழிவுகள் என்பவற்றை மேற்கொண்டு, தென்பகுதிச் சிங்களவர்களின் கதாநாயகியாகத் திகழ வேண்டும் என்ற குறிக்கோளைத் தன்னகத்தே வைத்துக் கொண்டு வெளித் தோற்றத்தில் அமைதியை நாடி நிற்கும் தமிழர்களுக்குப் பச்சைக் கொடியையும் காட்டி, தமிழர்களின் ஒட்டு மொத்த வாக்குகளையும் சுருட்டி விட்டார். இப்போது நடப்பது என்ன? சிங்களப் பேரினவாதிகளையும், அறிவாளிகளையும் கவர்ந்து இழுக்கும் நோக்குடன், தமிழர்களின் மீது மீண்டும் ஒரு இனக்கொலையை முடு க்கிவிட்டுக், கொடூரமான குண்டு வீச்சுக்களால் மக்களை மாய் ப்பது, பாதுகாப்புக்காகப் பதுங்கு குழிக்குட் செல்பவர்களைக் குடும்பம் குடும்பமாகக் கொன்றொழிப்பது, பாடசாலை மாண வர்கள், முதியோர்கள், சிறார்கள் என்ற பேதமின்றிப் பள்ளிக் கூடங்களிலும், மதவழிபாட்டுத் தலங்களிலும், வீதிகளிலும் மக்கள் வதைக்கப்பட்டுக் கொன்று அழிக்கப்படுவது போன்ற ஈன இரக்கமின்றிப் புரியும் கொடுமைகள் மூலம், சிங்களவர்களைத் திருப்திப்படுத்தி வருகின்றார்.

இதற்கு நல்லதோர் உதாரணம் அரசியல் ஆய்வாளர்களினதும், இராணுவத் தளபதிகளினதும், வெளி நாடுகளினதும் கருத்துக்களையும் மீறி, இனவாதமும் போர் வெறியும் ஒருமித்த நிலையில் நடத்தி முடித்த சூரியப் பிரகாச நடவடிக்கையாகும். இதன் மூலம் அம்மையார் எந்தளவிற்கு இனவாதப் பிடிக்குள் சிக்கியிருக்கிறார் என்பது புலனாகிறது. இது ஒரு புறமிருக்க, மறுபுறம் தான் நடாத்திய இனவாதப் போரில் எந்தளவிற்கு வெற்றி பெற்றுள்ளார் என்பதையும், பட்டாசு கொளுத்திச் சந்தோசத்தில் இருக்கும் சிங்களவர்களினதும், சிங்கள பெளத்த பிக்குகளினதும் ஒட்டு மொத்தப் பலத்தைப் பெற்றுக் கொள்வதற்கு, விரைவாக உள்ளூராட்சித் தேர்தலை நடாத்த முனைகிறார்.

இது புறம் இருக்க, எந்த ஒரு விடுதலை அமைப்பிலும் ஆயுதங்களைக் கீழே வைத்துப் பேச்சு வார்த்தை நடந்தது இல்லை. ஆனால், தமிழர்களின் பலமான ஒரேயொரு விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதங்களைக் கீழே போடுமாறும், அதன் பின்பே பேச்சுவார்த்தை என்றும் சந்திரிகா அம்மையாரும், ரத்வத்தவும் கூறி வருவது தமிழர்களை மேலும் விரக்திக்கு உள்ளாக்குவதுடன், அவர்களைத் தனித்தமிழீழம் தான் முடிந்த முடிவு என்ற நிலைக்கும் கொண்டு வந்துவிட்டது. ஏனெனில், சிங்கள அரசு திட்டமிட்டுச் செய்யும் ஆக்கிரமிப்பால் இன அழிப்பின் மூலம் தமிழர்களைப் பாதுகாக்கவென, அவர்களால் இரத்தம் சிந்திக் கட்டிவளர்க்கப்பட்ட ஒரே ஒரு சக்தி விடுதலைப் புலிகள்தான் என்பதால் அந்தச் சக்தியை யும் இல்லாமற் செய்து விட்டு, ஒருவன்மையான ஆயுத பலத் தின் மூலமே தமிழர்கள் மீது அரசியற் தீர்வை முன்வைக்க – திணிக்க – அரசு முனைகிறது.

இதற்கு நல்லதோர் உதாரணம், அண்மையில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள், தமிழீழத்தில் இருந்து வெளியாகும் உள்ளூர்ச் செய்தித்தாளுக்கு விடுத்த செய்தியொன்றில், ஆக்கிரமித்த பிரதேசத்தை விட்டு இராணுவம் அகன்றால், அனைத்துலக மத்தியத்தத்துடன் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் தயார் என்று கூறியுள்ளமை. இதன் உண்மை நிலை என்னவெ–னில், சொத்துக்களை இழந்து அகதிகளாய் இடம்பெயர்ந்த வலிகாமத்து மக்களை, இராணுவத் தலையீடு எதுவும் இன்றிச் சுதந்திரமாகத் தமது சொந்த இடங்களில் இருக்கச் செய்வதேயாகும். ஆனால், அரசோ தமது படைகளை வலிகாமத்தில் இருந்து எடுக்க மறுப்பதும் விடுதலைப் புலிகளை, ஆயுதங்களைக் கீழே போடுமாறு கூறுவதும் ஒடுக்கு முறையின் பிரதிபலிப்பைத் தெட்டத்தெளிவாகக் காட்டி நிற்கின்றது. அல்லாமலும் அரசின் பொருண்மியத் தடை, திரவப்பணத் தடை, கல்வித் தடை, வேலையில்லாமை, இட நெருக்கடி, சொத்துச் சேதம், குடும்பப் பிரிவு, எல்லாவற்றி லும் மேலாக உயிர்ச் சேதம் போன்ற இவை அனைத்தும் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல் அமைந்து ள்ளன. இவைபோன்ற பல்வேறு காரணங்களால் மனமுடைந்த நிலையில் தமிழ் மக்கள் சிறிலங்கா அரசின் மீது பெரும் ஆத்திரமும் வெறுப்பும் கொண்டுள்ளனர். ஒட்டு மொத்தத்தில், சிங்கள அரசியல்வாதிகளும் ஆட்சிப் பீடமும் தமிழர்களின் பரம விரோதிகள் என்ற உணர்வை அவர்களுக்கு ஊட்டியுள்ளது.

முன்பெல்லாம் சிறிலங்கா அரசின் கொடுமைகளால் இளைஞர்கள், பெண்கள் எல்லாம் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து வந்தனர். தற்போது அந்த நிலைமை மாற்றம் அடைந்து வயது வேறுபாடின்றித் திருமணத் தம்பதிகள், வயோதிபர்கள் எனப் பல்வேறு தரப்பட்டவர்களும் இணைந்து பயிற்சி பெற்று வருகின்றனர். எனவே இத்தனை காலமும் சிறிலங்காப் படையினரும் அரச பயங்கரவாதிகளும் தமிழர்களைத் தாக்கி வந்தனர். இப்போது தங்களைத் தாக்கிய எதிரிகளைத் தமிழர்கள் திரும்பத் தாக்கிக் கொண்டிருக்கின்றனர். இது நியூட்டனின் 3 ஆம் விதிக்கு சரிநிகர் என்பது தெளிவாகும். இப்போது எந்தவொரு தமிழீழத்தவரை எடுத்துக் கொண்டாலும், தமிழீழம் தவிர வேறு எதுவும் இல்லை என்று கூறுவதையும், போரின் மூலமே அரசிடம் இருந்து தீர்வைப் பெறவேண்டும் என்று கூறுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

www.tamilarangam.net



# தமிழீழ அரசு "எப்பவோ முடிந்த காரியம்"

தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் என்பது, 'தமிழ் மக்களுக்கு ஒரு நாடு வேண்டும், தமிழ் மக்களுக்கு விடுதலை வேண்டும், தமிழ் இனம் வாழ வேண்டும்' என்ற உன்னத இலட்சியங்களை நனவாக்கத் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் தலைமையிற் தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த பன்னிரண்டு ஆண்டுகாலமாக ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடன் போராடி வருவதாகும்.

இந்த விடுதலைப் போராட்டத்தில் இதுவரை எண்ணாயிரத்திற்கும் அதிகமான வேங்கைகள் களத்தில் விதையாகிப் போயிருக்கிறார்கள். பல கரும்புலிகள் கடலிலும் காற்றிலும் கரைந்திருக்கிறார்கள்.

ஒரு இனத்தின் விடுதலைக்கான போராட்டம் என்பது புகையிரதப் பிரயாணமோ, விமானப் பிரயாணமோ போன்றதன்று. புகையிரத, விமானப் பயணங்களில் எந்த நேரத்திற்கு எந்த இடத்தில் இருந்து, எந்தெந்த நேரத்திற்கு என்னென்ன இடத்திற்குச் சென்றடையலாம் என்ற கால அளவை முன்கூட்டியே தெரிந்து கொள்ளலாம்.

> யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் தன்னிடம் வரும் அடியார்களிடம் அடிக்கடி சொல்லிக் கொள்ளும் அருளுரைகளில் ஒன்று, "எப்போதோ முடிந்த காரியம்" என்பது ஒன்றாகும்.
>
> அதுபோல தமிழீழ அரசு என்பது "எப்போதோ முடிந்த காரியம்." அதனை, அந்த எண்ணத்தை எந்தவொரு எதிரிப் படையும் அழித்துவிட முடியாது.

இதேபோல் பிரயாணத்திற்குக் கொடுக்க வேண்டிய கட்டணத்தையும் முன்கூட்டியே தெரிந்து வைத்துக் கொள்ளலாம்.

ஆனால் ஒரு விடுதலைப் போராட்டத்திற்குக் கால அளவை முன்கூட்டியே நிர்ணயிக்க முடியாது. அதுபோலவே அதற்குக் கொடுக்க வேண்டிய விலையையும் முன்கூட்டியே தெரிந்து கொள்ள முடியாது.

அதாவது ஒரு பத்து அல்லது இருபது ஆண்டுகள் போராடினால் விடுதலை கிடைத்துவிடும் என்றோ, பத்தாயிரம் பேரைப் பலி கொடுத்தால் நாட்டுக்குச் சுதந்திரம் என்றோ சொல்லிவிட முடியாது.

பிரித்தானிய சாம்ராச்சியத்திற்கு எதிரான ஐரிஸ் மக்களது விடுதலைப் போராட்டம் முந்நூறு ஆண்டுகள் நீடித்தது. 1921 ஆம் ஆண்டே ஐரிஸ் குடியரசு பிறந்தது.

எத்தியோப்பியருக்கு எதிரான எரித்திரிய மக்களது போராட்டம் இருபத்தி ஐந்து ஆண்டுகள் நீடித்தது. 1993 ஆம் ஆண்டு எரித்திரியா சுதந்திர நாடாகத் தன்னைப் பிரகடனம் செய்து கொண்டது.

கிழக்குப் பாகிஸ்தான் 'பங்களாதேசம்' ஆக உருவெடுக்க ஒரு சில ஆண்டுகளே எடுத்தன. 1971 இல் பங்களாதேசம் தன்னை ஒரு சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்தது.

எனவே ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு யாராலும் கால அளவு குறிக்க முடியாது. அதுபோலவே சுதந்திரத்தின் விலை இத்தனை உயிர்கள் என்றும் கணக்குப் போட முடியாது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய்பவர்களும், அதன் இன்றைய பின்னடைவு பற்றி விமர்சிப்பவர்களும் மேற்கூறப்பட்ட யதார்த்தங்களை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தளவில் 1995 ஆம் ஆண்டு ஒரு பெரிய மைல்கல் என்றே கூறவேண்டும்.

ஈழப்போர் 3 இல் விடுதலைப் புலிகள் முதன் முறையாக விமான எதிர்ப்பு ஆயுதத்தைப் பாவித்து இரண்டு அவ்ரோ விமானங்கள், ஒரு புக்காரா விமானம் என்பவற்றைத் தமிழீழ வான்பரப்பில் வைத்துச் சுட்டு வீழ்த்திருக்கிறார்கள்.

ஒரு வை-8 விமானம், முல்லைத்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட, இரு 'டோறா' பீரங்கிப் படகுகளிலிருந்து கைப்பற்றப்பட்ட 4 ஒலிகன் பீரங்கிகளில் ஒன்றைப் பயன்படுத்தி, பலாலிக் கடற்புலிகளின் விசேட படையணிகளால் கார்த்திகை மாதம் 18 ஆம் திகதி சுட்டு வீழ்த்தப்பட்டது.

இதேபோல் ஈழப்போர் 3 ஆரம்பமான அதே இரவு சிறிலங்காக் கடற்படைக்கு சொந்தமான சூரயா, ரணசுரு என்ற இரண்டு பீரங்கிப் படகுகள் கடற்புலிகளின் விசேட நீரடி நீச்சற் படையினரால் மூழ்கடிக்கப்பட்டன. இப்படிக் கடலின் அடியில் நீந்திச் சென்று எதிரியின் கப்பல்களை மூழ்கடித்தது இதுவே முதற் தடவையாகும்.

சிறிலங்காப் படையினர் தரப்பிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நவீன ஆயுதங்கள் ஈழப்போர் 3 இல் பயன்படுத்தப்பட்டுள்ளது, பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, 'சூரியக்கதிர்' இராணுவப் படையெடுப்பின்போது மிக நவீனமான நீண்ட தூரத்துக்குப் பாயக்கூடிய பீரங்கிகளைச் சிறிலங்கா இராணுவம் பயன்படுத்தியது. இதைவிட விமான எதிர்ப்பு ஏவுகணைகள், ராடர்கள், கடலுக்கு அடியில் இடம்பெறும் அதிர்வுகளை வெளிப்படுத்தும் **Sonars** கருவிகள் என்பவற்றைச் சிறிலங்காப் படை பயன்படுத்தி வருகிறது. இஸ்ரேலியத் தயாரிப்பான **Drone** என்ற ஓட்டியில்லாத விமானம் விடுதலைப் புலிகளின் தரைநகர்வுகளைக் கண்காணிக்கப் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

நாற்பத்தியொன்பது நாட்கள் நீடித்த சூரிய கதிர் இராணுவ நடவடிக்கையின்போது, இராணுவம் ஐநூறுக்கு அதிகமான இராணுவத்தினரை இழந்துள்ளது. ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் படுகாயம் அடைந்துள்ளார்கள். பல போர்த் தாங்கிகள், கவச வாகனங்கள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டுள்ளன. வை-8, அன்ரனோவ்- 32 விமானத்தையும் விமானப்படை இழந்தது. எடித்தாரா என்னும் கட்டளைக்கப்பல், 'டோறா' போன்ற அதிவேகப் படகுகளைச் சிறி லங்காக் கடற்படை இழந்தது.

மொத்தத்தில் சிறிலங்கா விமானப்படையும், சிறிலங்கா கடற்படையும் பாதிக்கு மேலான பலத்தை இழந்த நிலையில் இப்போது இருக்கின்றன. இதனால் ஆள், ஆயுத நகர்வுகள் விநியோகங்கள் பெருமளவு பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது.

இந்த இழப்புக்களை ஈடு செய்யவே சிறிலங்கா அரசு இஸ்ரேல் நாட்டிலிருந்து 6 போர் விமானங்களை 50 மில்லியன் டொலர் செலவில் கொள்வனவு செய்துள்ளது.

இதைவிட 1996 ஆம் ஆண்டு பாதுகாப்புச் செலவு 38 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் பாதுகாப்புக்கான ஒதுக்கீடு அடுத்த ஆண்டு 5,382 கோடி ரூபாவாக உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது நாளொன்றுக்கு 14.75 கோடி ரூபா பாதுகாப்புக்குச் செலவழிக்கப்படும். இந்தச் செலவீனம் சிறிலங்கா அரசை ஒரு நிதி நெருக்கடிக்குத் தள்ளி அதன் பொருண்மிய அபிவிருத்தியைப் பெரியளவில் பாதிக்கும் என்பதில் எந்தவிதச் சந்தேகமுமில்லை.

இந்தக் கோணத்திலிருந்து பார்க்கும் போது சிறிலங்கா அரசு பெருமளவில் பலவீனமடைந்திருக்கிறது என்றே கூறவேண்டும்.

சிறிலங்கா இராணுவம் மக்கள் இல்லாத யாழ்ப்பாணத்தை 'வெற்றிகரமாக' ஆக்கிரமித்தது. இது சிறிலங்கா அரசுக்கு அரசியல் ரீதியான தோல்வியை ஏற்படுத்தியுள்ளது.

> தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் மலையே வந்தாலும் நிலை குலையாத தலைமை, வேங்கைகளின் வீரம், தமிழ் மக்களின் ஆதரவு இருக்கும்வரை, உலகின் எந்தச் சக்தியும் தமிழீழம் உருவாகுவதைத் தடை செய்துவிட முடியாது.

ஆக்கிரமித்த பிரதேசத்தைத் தக்க வைக்க மேலும் 10,000 துருப்புக்களைச் சிறிலங்கா இராணுவம் திரட்டியுள்ளது. இதேசமயம் மக்களை இடம்பெயரச் செய்து தாங்களும் பின்வாங்கியதினால் விடுதலைப் புலிகள் தங்களதும், மக்களதும் இழப்புக்களைப் பெருமளவு குறைத்துத் தங்கள் இராணுவ பலத்தையும், கட்டுக் கோப்பையும் காபாந்து செய்துள்ளார்கள்.

"எதிரி முன்னேறும்போது பின்வாங்குவது, எதிரி பின்வாங்கும்போது முன்னேறுவது" இதுவே கெரில்லாப் போரின் அடிப்படைச் சித்தாந்தமும் தந்திரமுமாகும்.

இந்தப்போர் உபாயத்தையும், தந்திரத்தையும் வெற்றிகரமாகப் பின்பற்றியவர்களில் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்களில் சீனத் தலைவர் மாவோ சேதுங் ஒருவராவர். சியாங்காய் சேக்கின் கோமிங்டன் படைக்கு எதிரான போரில், தனது செம்படையை (Red Army) அழிவில் இருந்து காப்பாற்ற மாவோ சேதுங் பல ஆயிரம் மைல்கள் நடந்து ஆறுகள், மலைகளைக் கடந்து கியாங்சி (Kiangsi) மாகாணத்திலிருந்து யெனன் (Yenen) மாகாணத்துக்குப் பின்வாங்கினார். இந்தப் பின்வாங்கலை வரலாற்று ஆசிரியர்கள், 'நீண்ட கால்நடை' (Long March) என்று வர்ணித்துள்ளார்கள்.

விடுதலைப் புலிகளின் பின்வாங்கலையும் இதே கண்ணோட்டத்தோடுதான் நாம் பார்க்க வேண்டும். தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டதுபோல, "விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியது ஒரு தற்காலிக பின்னடைவே. அதனை நிரந்தரப் பின்னடைவு என்று யாரும் எண்ணிவிடக் கூடாது".

சிறிலங்கா இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவே 'சண்டே ரைம்ஸ்' செய்தித்தாளுக்குக் கொடுத்த செவ்வியில் விடுதலைப் புலிகள் விழுந்தது சரிதான். ஆனால் தோற்றுவிடவில்லை. (LTTE Down but not out) என்ற கருத்துப்படச் சொல்லியிருப்பது கவனிக்கத்தக்கது.

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் தன்னிடம் வரும் அடியார்களிடம் அடிக்கடி சொல்லிக் கொள்ளும் அருளுரைகளில் ஒன்று, "எப்போதோ முடிந்த காரியம்" என்பது ஒன்றாகும்.

அதுபோல தமிழீழ அரசு என்பது "எப்போதோ முடிந்த காரியம்." அதனை, அந்த எண்ணத்தை எந்தவொரு எதிரிப் படையும் அழித்துவிட முடியாது.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் மலையே வந்தாலும் நிலை குலையாத தலைமை, வேங்கைகளின் வீரம், தமிழ் மக்களின் ஆதரவு இருக்கும்வரை, உலகின் எந்தச் சக்தியும் தமிழீழம் உருவாகுவதைத் தடை செய்துவிட முடியாது.

இந்த உண்மையினைத் துட்டகைமுனுவின் வாரிசுகள் எனத் தங்களை எண்ணிக் கொள்ளும் சனாதிபதி சந்திரிகா, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த, மற்றும் சிங்கள பௌத்த பேரினவாதிகள் மிக விரைவில் புரிந்து கொள்வார்கள்.

தமிழீழ அரசு "எப்போதோ முடிந்த காரியம்."

- சேரன்மாதேவி

www.tamilarangam.net



# தமிழ் மக்களால் பாதுகாக்கப்பட வேண்டிய தலைமைச் சக்தி




வரலாறாகிப் போய்விட்ட தமிழர்தம் பழம் பெருமைகளுக்கும், வீரத்துக்கும் மீண்டும் உயிர் கொடுத்து, முதன்முதலாகத் தமிழ் மக்களின் பங்களிப்புடன் மட்டும் நடாத்தப்படும் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போருக்கு வித்திட்டு அதனைத் தலைமைதாங்கி வழிநடத்தி வருபவர்தான் திரு. வே. பிரபாகரன்.

எந்தவொரு நாட்டின் விடுதலைப் போராட்டமோ அல்லது நாடுகளுக்கிடையிலான யுத்தங்களோ வசீகரமான, உறுதியான தலைமையின் வழிநடத்த லின்றி வெற்றி பெற்றதில்லை. இவ்வாறான நிரா–கரிக்கப்பட முடியாத, தகுதியான தலைமைகளை மாற்றிவிட வேண்டும் அல்லது அழித்துவிட வேண்டும் என்பதில் எதிரிகளும், துரோகக் குழுக்களும், ஏகாதிபத்திய நாடுகளும், பிராந்திய வல்லரசுகளும் முழுமுயற்சிகளில் ஈடுபட்டுவருவது மறைக்கப்பட முடியாத உண்மையாகும்.

தமது சொந்த அரசியல் – இராணுவ தேவைகளுக்கு ஏற்ற முறைமிற் செயற்பட மறுக்கும் மற்றைய நாட்டுத் தலைமைகளை அகற்ற வேண்டுமென்பதில், மேற்குறிப்பிட்ட சக்திகள் நேரடியாகவும் மறைமுக மாகவும் செயற்பட்டு வருவது தற்காலத்தில் நாம் காண்பவையாகும்.

இவ்வாறுதான், 1619களில் தமிழீழத்தின் இறைமை யைப் பாதுகாக்க ஐரோப்பியக் கடலோடிகளான போர்த்துக்கேயரை எதிர்த்துப் போரிட்ட சங்கிலி மன்னனை, தமிழ்த் துரோகியான காக்கை வன்னியன் மூலம் சதிசெய்து போர்க்களத்திற் கைது செய்தனர் போர்த்துக்கேயர். இதனால் தமிழீழம் 1619 ஆனி 5 இல் போர்த்துக்கேயரிடம் அடிமைப்பட்டது.

இவ்வாறு அடிமைப்படுத்தப்பட்ட தமிழீழம் மீட்சிபெற முடியாதவகையில் தமிழரிடம் இருந்த அனைத்துப் பாதுகாப்புக் கவசங்களும் போர்த்துக்கே யரால் நிர்மூலமாக்கப்பட்டன. தலைமையை இழந்து நின்ற வீரமிகு படைத் தளபதிகளும் போர் வீரர்களும் வழி நடத்தச் சரியான தலைமையின்மையால் அழிக்கப்பட்டனர். சுதந்திரத் தமிழர்களாக, சுய நிர்ணயம் உள்ள மக்களாக வாழ்ந்து வந்த தமிழர்கள், போர்த்துக்கேயரின் ஆயுதபலத்தினாலும் துரோகிகளின் காட்டிக்கொடுப்பு வேலைகளாலும் அடிமைகளாகினர்.

இவ்வாறு போர்த்துக்கேயரிடம் அடிமைப்பட்ட தமிழீழமும், தமிழ் மக்களும் போர்த்துக்கேயருக்குப் பின் ஒல்லாந்தரிடமும், பின் ஆங்கிலேயரிடமும் அடிமைப்பட்டனர்.

1619 ஆனி 5 தொடக்கம் 1948 மாசி 4ம் நாள் வரையான காலப்பகுதியிற் பல்வேறு விதமான மாற்றங்கள் தமிழீழத்தின் எல்லைகள், பொருளாதாரக் கட்டமைப்பு, பழக்கவழக்கங்களில் ஐரோப்பியக் கடலோடிகளாற் கொண்டுவரப்பட்டது. 1900களில் தமிழர்களின் தலைமைகளாகச் சேர். பொன் இராமநாதனும், சேர். பொன். அருணாசலமும் தோற்றம் பெற்றனர்.

தமிழ், சிங்கள இரு இனத்தவரையும் உள்ளடக்கிய "தேசிய இயக்கம்" என்னும் நம்பிக்கையோடு, "இலங்கைத் தேசிய காங்கிரஸ்" இயக்கம் அருணாசலம் அவர்களால் வளர்க்கப்பட்டு வந்தது. ஆனால் அவரோடு சேர்ந்து செயற்பட்ட சிங்களவர்களோ அவ்வமைப்பைச் சிங்கள தேசிய இயக்கமாகவே கருதிச் செயற்பட்டு வந்தார்கள். இக் காலக்கட்டத்திற்றான், சிங்கள பௌத்த இனவாதமும் தீவிரமாக வளரத்தொடங்கியது.

இதனை, காலங் கடந்தபின்தான் இராமநாதனும் அருணாசலமும் உணர்ந்து கொண்டனர். 'தமிழ்த் தேசியம்' வளர்க்கப்பட வேண்டியதின் அவசியத்தை உணர்ந்த அருணாசலம், 'இலங்கைத் தேசிய காங்கிரசிலிருந்து விலகி 'தமிழ் மகாசபை' என்னும் அமைப்பைத் தொடங்கினார்.
அக்கழகம் உருவாக்கப்பட்ட சிறிய காலத்துக்கு ள்ளேயே அருணாசலம் நோய்வாய்ப்பட்டு இறந்தார். அதனால் 'தமிழ் மகாசபை' வழி நடத்திச் செல்லச் சரியான தலைமையின்றிச் செயலிழந்து போனது.

## தேர்தல் பகிஸ்கரிப்பு-டொனமூர் யாப்பு

தமிழ் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்தாத காரணத்தினால் 1931ம் ஆண்டு 'டொனமூர் யாப்பிற்கு' அமைய நடாத்தப்பட்ட தேர்தல் யாழ்ப்பாண மக்களால் பகிஸ்க்கரிக்கப்பட்டது.

## முழுச் சிங்கள அமைச்சரவை

1931 ஆம் ஆண்டு தேர்தலில் பெரும்பாலான அமைச்சர்களைப் பெற்ற சிங்கள மக்கள், 1936 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலோடு 'முழுச்சிங்கள அமைச்சரவையையும் தமதாக்கிக் கொண்டனர்.

## தமிழ்த் தலைவர்களின் சரணாகதி

தமிழ் மக்கள் இன்று வாழும் இந்த அவல வாழ்வுக்கான அடிப்படைகள், 1936 ஆம் ஆண்டுத் தேர்தலோடுதான் ஆரம்பமாகியது. அக்காலப் பகுதியில் தமிழ் மக்களின் தலைவர்கள் என்று இருந்தவர்கள் தம் சுயநலங்கருதி, குறிப்பாகக் கொழும்பில் தாம் வாழ்ந்து வந்த சொகுசான வாழ்க்கை முறைகளிற் கேடுவந்துவிடக்கூடாது என்பதற்காகச் சிங்களவர்களிடம், 'சொற்போர்' புரிந்து தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கும் சந்தர்ப்பத்தைக் கைநழுவவிட்டனர்.

தாம் சுகபோகமாக வாழ்வதற்காக முழுத் தமிழினத்தின் அரசியற் தலைவிதியையும் சிங்கள இனத்திடம் சரணாகதி அடையவிட்டனர்.

## சோல்பரி ஆணைக்குழு

இலங்கைக்கான ஆட்சியுரிமையை வழங்குவதற்கு

தொடர்ச்சி மறுபக்கம்




**'தமிழீழ இலட்சியத்திலிருந்து நாம் ஒரு போதும் வழிதவறப் போவதில்லை என்பதை நான் தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறவிரும்புகிறேன். சிங்கள ஆட்சியாளர்கள் தமிழரின் தேசியப் பிரச்சனைக்கு ஓர் நேர்மையான, நீதியான, கௌரவமான தீர்வை வழங்கப்போவதில்லை என்பதை இந்திய அரசு உணர்ந்து கொள்ளும் போது, தமிழீழ இலட்சியத்திற்கு மதிப்பளித்து எமது மக்களின் தேசிய சுய நிர்ணய உரிமையை ஆதரிக்க வேண்டும் என்பதே எமது அவா'**

**– தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன்**

www.tamilarangam.net



முன், பாராளுமன்றத்திற் சகல இனங்களின் சார்பிலும் இருக்க வேண்டிய பிரதிநிதித்துவம் பற்றி ஆராயப்பட்டது.

சேர் பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் ஆகியோருக்குப் பின் தமிழ் மக்களின் தலைமையாக வந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம், சிங்களவர் சார்பில் 50 வீதமும் தமிழர்கள் உள்ளிட்ட மற்றைய சிறுபான்மையினருக்கு (மலையகத் தமிழர், முஸ்லிம்கள் உட்பட) 50 வீதமுமாக பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் கேட்டார். இக் கோரிக்கை அக்காலகட்டத்தில் புகழ்பெற்று விளங்கியது.

ஆனால் இக்கோரிக்கையைச் சோல்பரி ஆணைக்குழு ஏற்க மறுத்துவிட்டது. அத்துடன், இக்கோரிக்கை அக்காலகட்டத்தில் தாம் கைப்பற்றி ஆண்ட நாடுகளில் ஏற்படுத்தியிருந்த பிரதிநிதித்துவ முறைகளுக்குக் கேடு விளைவிப்பதாக இருப்பதனை உணர்ந்த பிரித்தானியர், ஜீ. ஜீ. பொன்னம்பலம் இலங்கையில் இல்லாத நேரத்தில், அதாவது ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையைப் பிரித்தானியாவின் 'காலனித்துவச் செயலாளரிடம்' எடுத்துக்கூறி நியாயம் பெறச் சென்றிருந்த நேரத்தில், அப்போது சட்ட சபையில் அங்கத்தவர்களாக இருந்த இரண்டு கொழும்பு வாழ் தமிழர்களின் ஒப்புதலுடன் சோல்பரி ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் சட்டமாக்கினர்.

**இராசா**

ஜீ. ஜீ. பொன்னம்பலம் தனது சுயநலம் கருதித்தான் 50க்கு 50 கோரிக்கையை முன்வைத்தார் என, அரசியல் ஆய்வாளர்களால் கூறப்படுகிறது. அவர் உண்மையில் தமிழ் மக்களின் சரியான தலைமையாக இருந்திருந்தால், '1619 ஆம் ஆண்டு ஆடி 5ல் போர்த்துக்கேயரிடம் யுத்தத்தில் இழந்த தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை உள்ள மக்களாக வாழ வழிசமைக்கும்படி சோல்பரி ஆணைக்குழுவிடம் கேட்டிருக்க வேண்டும். அவர் அன்று விட்ட மாபெருந் தவறே இன்று தமிழர்களின் இரத்தம் ஆறாக ஓடக் காரணமாகும்.

அத்தோடு ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் சுயநலம் கொண்ட கோரிக்கையை அறிந்த மற்றைய தமிழ்த் தலைவர்கள்கூட, ஜீ.ஜீயின் கோரிக்கைக்கு மாற்றீடாகச் சுயாட்சிக் கோரிக்கையையோ அல்லது சமஸ்டியையோ சோல்பரி ஆணைக்குழுவிடம் கேட்காமல், சோல்பரி ஆணைக்குழுவால் வரையப்பட்ட 'ஒற்றை ஆட்சி' அமைப்பை ஏற்றுக் கையெழுத்திட்டுத் தமிழினத்திற்கே மாபெருங்கேடு ஏற்படக் காரணமாயினர்.

## தந்தை செல்வா அரசியலில்

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் 1947 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் இணைந்தார்.

மலைநாட்டுத் தமிழருக்கு எதிராகக் 'குடியுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அதற்கு ஜீ. ஜீ. பொன்னம்பலம் மறைமுக ஆதரவளித்துப் பின் அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டு 1949 இல் மலைநாட்டுத் தமிழரது வாக்குரிமை பறிக்கப்பட்ட போது அதற்கு ஆதரவாக வாக்களித்தார்.

இதனால் ஏமாற்றமடைந்த தந்தை செல்வா, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி 'சமஷ்டிக் கட்சி' என்று அழைக்கப்படும் தமிழரசுக் கட்சியை 1949 இல் உருவாக்கினார்.

தந்தை செல்வா தலைமையில், தமிழ் மக்களின் மிகப் பெரிய ஆதரவுடன் பலவித அரசியற் போராட்டங்கள், அகிம்சை ரீதியில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை மீளப் பெற நடாத்தப்பட்டன.

அனைத்தும் சிங்கள அரசுகளால் ஆயுத முனையில் நசுக்கப்பட்டன. பண்டாவுடனும், டட்லியுடனும் தந்தை செல்வா மாவட்ட சபை, பிரதேச சபை என மாறிமாறி ஒப்பந்தம் செய்து கொண்டார். எல்லாம் சிங்களவர்களாற் கிழித்தெறியப்பட்டன.

எல்லா முயற்சியிலும் தோல்வி கண்ட தந்தை செல்வா இறுதியில் கூறிச் சென்ற வார்த்தை, 'சமஷ்டி மூலம், தமிழ் மக்கள் இழந்துவிட்ட அரசியல் உரிமைகளை மீட்டெடுக்க முடியாது என்பதை நாம் அறிந்து கொண்டோம். இந்த அனுபவத்தின் மூலம் நாங்கள் ஒரு முடிவுக்கு வந்துள்ளோம். அந்த முடிவு பிரியவேண்டும் என்பதே. பிரியாவிட்டால் தமிழ் பேசும் மக்கள் தாங்கள் இழந்த உரிமைகளை ஒரு போதும் திரும்பப் பெறப்போவதில்லை' என்பதாகும். இதன் பின் நீண்ட காலம் தந்தை செல்வா உயிர் வாழவில்லை.

## திரு. அ. அமிர்தலிங்கம்

தந்தை செல்வாவின் மறைவின்பின் தமிழ் மக்களின் தலைமையைத் திரு. அமிர்தலிங்கம் பெற்றுக் கொண்டார். 1976 வைகாசி 14ஆம் திகதி பண்ணாகத்திற் கூடிய கூட்டணியின் மகாநாட்டில் 'சுதந்திர இறைமையுள்ள, மதச்சார்பற்ற சோசலிச தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைப்பது' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தை அதாவது 'தமிழீழ விடுதலை'

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

**'சமஷ்டி மூலம், தமிழ்மக்கள் இழந்துவிட்ட அரசியல்உரிமைகளை மீட்டெடுக்க முடியாது என்பதை நாம் அறிந்து கொண்டோம். இந்த அநுபவத்தின் மூலம் நாங்கள் ஒரு முடிவுக்கு வந்துள்ளோம். அந்த முடிவு பிரியவேண்டும் என்பதே. பிரியா விட்டால் தமிழ் பேசும் மக்கள் தாங்கள் இழந்த உரிமைகளை ஒருபோதும் திரும்பப் பெறப் போவதில்லை'**

**—தந்தை செல்வா**

**அரசியல்வாதிகளின் அகிம்சை ரீதியான போராட்டங்கள் தோல்வியடைந்ததையும் இத்தோல்விக்கு மாற்றீடான பொருத்தமான வேலைத் திட்டங்களில் அரசியல்வாதிகள் ஈடுபடாது, பாராளுமன்றக் கதிரைகளைக் கட்டிப் பிடித்தபடி காலம் கடத்திவந்ததையும் சகிக்க முடியாத இளைய தலைமுறையின் 'புரட்சிச் சின்னமாக' 1972ம் ஆண்டின் பின்னான காலங்களில் தோற்றம் பெற்ற திரு.வே.பிரபாகரன், 1983 ஆம் ஆண்டு ஆடியில் நடைபெற்ற தமிழின அழிப்பின் பின், இளம் சமுதாயத்தினது மட்டுமல்ல, முழுத் தமிழ் மக்களின் ஏகோபித்த தலைமைச் சக்தியாகத் தோற்றம் பெற்றார்.**




முன்னைநாள் இந்தியப் பிரதமருடன் கூட்டாக முன்னைநாள் கூட்டணித் தலைவர்



போர் ஒப்பந்தத்தில் பௌத்த பிக்குமார்



போர் நிறுத்தத்துக்காக இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் ராஜிவ்காந்தியும் ஜேயாரும்



இந்திய ஆக்கிரமிப்புச் சின்னங்களிலொன்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# த்தனை
# வித்துக்கள்

திட்டமிட்டபடி டேவிட் அன்று என்னோடு புறப்பட்டு விட்டார். அந்த மனத்துணிவோடு நேரே நவாலிக்குச் செல்லத் தீர்மானித்தோம்.

அன்று ஜெயக்குமார் ஆசிரியர் வீட்டில் பாதிப்புற்றவர்களின் பெயரைப் பதிவு செய்துகொண்டிருந்தனர். எங்களைக் கண்டதும் அவர் எம்மை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவராக, 'இருங்கோ நாங்கள் ஆட்களுக்குச் சொல்லி வைத்திருக்கிறோம் என்றார்.

எப்படியும் மற்றவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்ற நேரத்தைப் பயன்படுத்த விரும்பியவர்களாக, 'அப்ப மாஸ்ரர் நீங்கள் சொல்லி விடுங்கோ அவையள் வரட்டும். அதற்குள்ள ஹேமலதா ஜீ.எஸ் வீட்டை போயிற்று வாறம்' என்று சொல்லிப் புறப்பட்டோம். ஹேமலதாவின் வீட்டைக் கண்டுபிடிப்பது சிரமமாய் இருக்கவில்லை. அவர் வீட்டுக்கு முன்னாலேயே கிராமசேவையாளரின் விளம்பரப் பலகை காட்சியளித்தது. நாங்கள் போனபோதும் சிலர் ஹேமலதாவின் குடும்பத்தவரிடம் துக்கம் விசாரிக்க வந்திருந்தனர்.

26 வயதுக்குள், ஆகப் பத்துமாதக் கிராமசேவையாளர் சேவைக்காலத்தில், தனது பிரிவு மக்களின் மனங்களிலெல்லாம் இடம் பிடித்து விட்டவர் கிராம சேவையாளர் ஹேமலதா என்பது புரிந்தது.

எம்மிருவரையுங் கண்டதும், ஹேமலதாவிற்கு நேரே இளையவனான தம்பி ரமேஸ் வெளியே வந்து அழைத்துச் சென்றான். அவர்கள் யாருக்குமே அறிமுகம் இல்லாத முகங்கள் எங்களுடையவை. ஒருவேளை ஹேமலதாவுக்கு மட்டும் அறிமுகமானவர்களாய் இருப்போமோ என்று எண்ணியிருப்பர். ஏனெனில், அப்படி அவரை மட்டுமே அறிந்தவர்கள் பலர் வந்து துக்கம் விசாரித்துக்கொண்டு போயிருக்கின்றனர்.

எங்களைக் கண்டதும் ஹேமலதாவின் தாயார் திருமதி. செல்வராசா துக்கம் பீறிட வாய்விட்டு அழுதார். குடும்பத்தில் மூத்தபிள்ளை, அதுவும் மூன்று ஆண்களுக்கு ஒரே பெண். பத்துவருடங்களுக்கு முன் தந்தையார் விட்டுச்சென்ற சுமையைக் கடந்த பத்துமாதங்களாகத் தன் தலையிற் சுமந்து கொண்டு குடும்பத்தைக் காப்பாற்றி, தம்பிமாரைப் படிப்பிப்பதற்கு உழைத்துக்கொண்டிருந்த பொறுப்புமிக்கவள். இந்த வருடத்துடன் ரமேஸ் பல்கலைக்கழகப் படிப்பை முடித்துக் கொண்டு அவன் குடும்பப் பொறுப்பை ஏற்றதும் அடுத்த



வருடம் திருமணம் செய்துவைத்து மணமகளாய்க் காணவேண்டும் என்றிருந்தாள் அந்தத் தாய். அதற்காக, பேசி வந்த திருமணங்களுக்கு முற்றுச் சொல்லாமல் ஒரு மாப்பிள்ளையைத் தன் மகளுக்கு மணமகனாய் வரிந்துகொண்டு அந்த நன்னாளை எதிர்பார்த்துக்கொண்டிருந்த அன்னையின் நெஞ்சில் பேரிடி விழுந்துவிட்டதுபோல் ஹேமலதாவின் மரணம் நிகழ்ந்துவிட்டது. படிப்பிலே திறமைசாலி, சித்த ஆயுர்வேதக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு மாணவியாக இருந்தபோதுதான் இந்தக் கிராமசேவையாளர் பதவி அவளுக்குக் கிடைத்தது. ஆசிரியரின் விருப்புக்கு மாறாக வீட்டின் பொருளாதாரம், பொறுப்புணர்ச்சி, அதே வேளை பத்துவருடங்களுக்கு முன்னால் தந்தை செல்வராசா வகித்த அதே பதவியை–அதே இடத்திற் செய்வதில் அவளுக்கு இருந்த பற்று, அனைத்தும் ஒன்று சேர்ந்து இந்தப் பதவியை அவள் ஏற்கச் செய்தன. விடிந்தால் பொழுது சாயும் வரையில் தந்தையைப் போலவே தன்னை வருத்திக் கொண்டவள் ஹேமலதா. அந்தப் பத்துமாதக் கிராமசேவையாளர் பதவி வாழ்க்கையில் ஏனைய கிராம சேவையாளர்களை விடச் சாதனை நிகழ்த்தி, மேலதிகாரிகளிடம் நற்பெயரைச் சம்பாதித்து விட்டவள். அன்று யூலை 9ஆம் திகதி கூடத் தன் கடமையைச் செய்ய வேண்டும் என்ற உணர்வில் தனது பதவிக்குரிய 'றபர்' முத்திரை, இங்பாட், சகிதம் கோவிலில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்தவர்ளைப் பதிவு செய்யும் எண்ணத்துடன் வந்தபொழுதுதானே அவள் பலி கொள்ளப் பட்டாள்.

கபிரியேல்பிள்ளை அங்கிள் கூட ஒரு கிராம சேவையாளர்தான். முப்பத்திரண்டு வருடங்களுக்கு மேலாக அந்தப் பதவியை வகித்துவருகிறார். ஹேமலதாவின் தந்தை கிராமசேவையாளர் செல்வராஜாவும், கிராமசேவையாளர் கபிரியேல்பிள்ளையும் தொழில் ரீதியாக மட்டுமின்றிக் குடும்பநண்பர்களும்கூட. அப்பன் வழியில் மகள் கிராமசேவையாளராக வந்ததில் அவருக்குப் பெருமகிழ்வு. சுருங்கச்சொல்லப் போனால், அவர்தான் ஹேமலதாவிற்கு இந்தத்தொழிலில் குரு. பிள்ளை சிறியவளாய் இருந்தாலும் தொழில் நுணுக்கங்களையும், பொதுமக்களுடனான அணுகுமுறையையும் வெகு சிறப்பாகவே அறிந்துவைத்துச் செயற்படுவதனைக்கண்டு சந்தோசப்பட்டிருக்கிறார்.

அவருக்குச் சொந்த இடம் சில்லாலை. இராணுவ நடவடிக்கையால் சில்லாலையில் இருந்து இடம் பெயர்ந்து, உடுவிலிற் தற்பொழுது இருந்து வருகிறார்.

கடமை சம்பந்தமான எதிலும் ஹேமலதாவும் கபிரியேல்பிள்ளையும் இணைந்து, ஒருவருக்கொருவர் துணையாகச் செயல்படுவதுதான் வழக்கம். அது போலத்தான் அன்றுமவர்கள், நவாலிக்கோயிலில் இடம் பெயர்ந்து வந்திருக்குமந்த மக்களிடையே, தமது கடமையைச் செய்ய எண்ணி வந்துகொண்டிருந்தனர்.

பிரதீஸ் ஹேமலதாவின் சித்தியின் மகன். நவாலி மகாவித்தியாலய மாணவன். ஆண்டு பதினொன்றிற் படித்துக்கொண்டிருந்தான். படிப்பில் என்ன, விளையாட்டில் என்ன கெட்டிக்காரன். அதனால்தான் பாடசாலையின் சிரேஷ்ட மாணவர் தலைவனாக நியமிக்கப்பட்டிருந்தான்.

அன்றுகாலை முதலே சங்கானை, சித்தன் கேணி, சுழிபுரம், தொல்புரம் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் ஹேமலதாவின் வீட்டின் முன்னால் உள்ள வீதி வழியாகப் போய்க் கொண்டிருந்தனர். அவர்களுக்குத் தனது வீட்டுவாசலில் வைத்துக் குடிக்கத் தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தாள்.

காலைமுதலே முகம்கழுவாத, தலைவாராத கோலத்திற் சிறுவர்களும், பெரியோர்களும், முதியவர்களும், வயிற்றுப்பிள்ளைக்காரிகளும் போகும் கோலத்தையும் அவர்கள் துன்பத்தையும் பார்த்துக் ஹேமலதா அழுதே விட்டாள். அக்காள் சிறுபிள்ளை போல அழுகின்ற அந்தக்காட்சி இளையவனான ரமேசுக்குச் சிரிப்பை வரவழைக்கவே, அவன் சிரித்துவிட்டான். அவன் அப்படிச் சிரித்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. ஏனடா சிரிக்கிறாய்? நீயும் இப்படித்தான் அழப்போறாய் என்று கூறி ரமேசை அடக்கினாள். 'நீயும் இப்படித்தான் அழப்போறாய்' என்று காலையில் கூறிய அவள் வார்த்தைகள் அன்று மாலையே பலிக்கப்போகிறது என்று நினைத்தாளா என்ன?

உடுவிலிலும் எறிகணைகள் விழத்தொடங்கவே கபிரியேல்பிள்ளை, அங்கிருக்கும் தனது குடும்பத்தவரை வண்ணார்பண்ணைக்கு அனுப்பிவிட்டார். ஷெல்த் துண்டுபட்டு வீட்டின் ஓடுசிதறி அவர் தோள்மீது விழவே, இனிமேலும் தான் அங்கு நிற்பது புத்திசாலித்தனமல்ல என்று முடிவெடுத்தவராய் அங்கிருந்து புறப்பட்டு விட்டார்.

மற்றவர்கள் உடுப்புக்களையும், நகைகளையும் எடுத்து அடுக்கி ஆயத்தஞ்செய்துகொண்டிருந்தபோது ஹேமலதா, உணவு விநியோக அட்டைகளையும், அடையாள அட்டை விண்ணப்பங்கள், தனது றபர் முத்திரை என்பவற்றை பாதுகாப்பாக எடுத்துவைத்துக் கொண்டாள்.

ஹேமலதாவின் இந்தச்செயலைப்பார்த்துச் சிரித்த சிறியதாயாரை அவள் பார்த்தாள். பின்னர், என்ரை பகுதி மக்களிட வாழ்க்கையே இதிலதான் அன்ரி இருக்குது. என்ற பதில் பொறுப்புணர்ச்சியோடு அவளிடமிருந்து வெளிவந்தது.

வண்ணார்பண்ணைக்குப் புறப்படுமுன்னர் தம்பிமார் இருவரையும் அழைத்து, தொடர்ந்தும் வாசலில் வைத்துத்தண்ணீர் கொடுப்பது, மற்றவர்களோடு சேர்ந்து சாப்பாட்டுப்பார்சல் சேகரிப்பது போன்ற வேலைகளைச் செய்யும்படி சொல்லிவிட்டுப் புறப்பட்டாள். அவர்களும் உறவினர்களும் புறப்பட்டுவிட்டனர். வண்ணார்பண்ணையில் கபிரியேல்பிள்ளை அங்கிளும் வந்து சேர்ந்து கொண்டார்.

வண்ணார்பண்ணையில் நின்ற அந்த இரண்டு கிராமசேவையாளர்களும் நாங்கள் அப்பொழுது நிற்கவேண்டிய இடம் வண்ணார்பண்ணையல்ல நவாலியே என்பதில் ஒத்த கருத்துடன் நின்றார்கள். இத்தகைய காலங்களில் ஊழியர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று, பிரதேச செயலக ஊழியர் மட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஏற்கெனவே வலியுறுத்தப்பட்டிருந்தது. இயற்கையாகவே சேவை மனப்பான்மை உள்ள ஹேமலதாவும் கபிரியேல்பிள்ளியையும் பகற் சாப்பாட்டை முடித்துக்கொண்டு, பிற்பகலில் நவாலி நோக்கித் தத்தமது சைக்கிளில் புறப்பட்டனர். அவர்களது கிராமசேவகர்களுக்கான றபர் முத்திரைகளைக் கூடவே எடுத்துக்கொண்டனர். கடமை மட்டுமல்ல சாவும் அவர்களை அப்பொழுது அழைத்துக் கொண்டிருக்கிறது என்பதை எவரும் உணரவில்லை. அவர்கள் இருவரும் புறப்படவே, ஹேமலதாவின் சித்தியின் மகன் பிரதீசும் அவர்கள் பின்னால் தனது சைக்கிளில் புறப்பட்டான். விதி அந்த மூவரையும் ஒன்றாகவே அழைத்துக்கொண்டிருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# எத்தனை வீழ்ந்தன

நவாலி வீதியில் திருவிழாக் கூட்டம் போல் மக்கள் நிறைந்திருந்தனர். சைக்கிள், மோட்டார்ச்சைக்கிள், மாட்டு வண்டிகளில் பொருட்கள் ஏற்றப்பட்டு மக்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி நடந்துகொண்டேயிருந்தனர். இருவரும் பலருக்கு அறிமுகமானவர்கள். நின்று, கதைத்து... விடைபெற்று நவாலியை நோக்கி வந்துகொண்டிருந்தனர். சன நெரிசலுக்குள் வேகமாகவும் ஓடமுடியாது. முன்னே ஹேமலதா...அடுத்து கபிரியேல் பிள்ளை அங்கிள், அவருக்குப்பின்னால் பிரதீஸ். ஒருவர்பின் ஒருவராக வந்து நவாலிப் புனித பேதுருவானவரின் ஆலய வாசலுக்குள் அவர்கள் வந்து சேர்ந்தபோது நேரம் 4.50 மணி. அப்பொழுதுதான் அந்த அசுரத்தனம்–அராஜகம் நிகழ்ந்தது. பிணந்தின்னிக்கழுகின் பித்தலாட்டம் நடைபெற்றது. காடைக் கூட்டத்தின் கையாலாகாத்தனம் கவிழ்த்துக்கொட்டப்பட்டது... எங்கும் புகைமண்டலம்... புழுதி மண்டலம்... அழுகுரல்... அவலங்கள்... பிணக்காடு... இரத்த ஆறு...

இத்தனை அவலத்துள்ளும் ஹேமலதாவின் இரண்டு சகோதரர்களும் அந்த இடத்துக்கு வந்தபோது, அங்கேதான் அவர்கள் குலக்கொடி துண்டாடப்பட்டுக்கிடந்த கோலத்தைக்கண்டனர். 'நீயும் அழுவாய்' என்று தீர்க்கதரிசனம் சொன்னவள் தொடர்ந்து அழு என்று கட்டளையிட்டுச் சென்ற காட்சியைக்கண்டனர். அவள் கொண்டுவந்த கிராமசேவகர் றபர் முத்திரையும் மைப்பெட்டியும் அவள் பக்கத்தே பொலித்தீன் பை ஒன்றிற் சுற்றிவைத்தபடி கீழே கிடந்தன. அவளது இடக்கால் சிதைந்தும் அடிவயிற்றில் ஷெல் துண்டு கிழித்த காயமும் காணப்பட்டது. அவளது சைக்கிளின் பின் சக்கரத்தோடு கபிரியேல்பிள்ளை அங்கிளின் சைக்கிளின் முன்சக்கரம் பின்னிப்பிணைந்து கிடந்தது. கபிரியேல்பிள்ளை கிடந்த கோலம் கண்கொண்டு பார்க்கமுடியாத பரிதாபம். அறுபது வயது. ஆஜானுபாகுவான அவரது தோற்றம் இரண்டு அடியாகக் குறுகியிருந்தது. வார்த்தைகளால் சொல்லமுடியாத தோற்றம். வயிற்றிலிருந்து கீழே உடலுறுப்பு என்று சொல்வதற்கு எதுவுமில்லை. வயிற்றிலிருந்து நரம்புகள் தசைநார்களோடு கால்களின் அடையாளமாக எலும்பும் தசையும் திரண்டு தொங்கிக்கொண்டிருந்தன. சைக்கிள் 'பெடலோடு' அவரது வயிற்றின் குடல்கள் சுற்றிச்சிக்குண்டு கிடந்தன.

பிரதீஸ் அவருக்குப்பின்னால் சுமார் ஆறடி தொலைவில் சைக்கிளோடு கிடந்தான். அவனது கழுத்துக்குமேலே இருப்பது தலைதானா ஆம் தலைதான்... ஆனால் முகமெங்கே...? மண்வெட்டி கொண்டு சீவி எறிந்தது போன்று தலையின் முன்பகுதியான முகப்பகுதி சீவிவிடப்பட்டிருந்தது. அவனுக்குப் பக்கத்தில் சுற்றிவரப் பிணம்... பிணம்... பிணங்கள்... கைகள்... கால்கள்... தலைகள்... தசைகள்... குடல்கள்... அப்பப்பா...!

வீட்டிலிருந்து டொக்ரர் சிவனடியான் தனது வைத்தியசாலைக்கு வந்துகொண்டிருந்த நேரமது. அவர் அவ்விடத்துக்கு வருவதற்குள் அந்தப் பயங்கரம் அங்கு நிகழ்ந்துவிட்டது. பிணங்களும் மரங்களும் கட்டடங்களின் இடிபாடுகளும் வீதியை நிறைத்திருந்தன. மோட்டார் சைக்கிளில் அவ்வழியால் செல்லமுடியாது எனக்கண்ட அவர் தனது மோட்டார் சைக்கிளை மீண்டும் திருப்பியபோது, துண்டிக்கப்பட்ட மனிதக்கால் ஒன்றின்மீதே தனது வாகனத்தின் முன் சில்லு ஏறி இறங்கியதை பின்னர்தான் அவதானிக்க முடிந்தது.

ஹேமலதா வீட்டில் இருந்து விடைபெற்று ஆசிரியர் ஜெயக்குமாரின் வீட்டிற்கு வருகின்றோம். ஆசிரியர் அங்குநின்ற முப்பத்தைந்து வயதான தேவகுமாரை எங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார்.

'இவரைக் குமார் என்றுதான் எல்லோரும் அழைப்பது வழக்கம். எங்கடை வீட்டிலிருந்து மூன்றாவது வீடுதான் இவருடைய வீடு. கடை வைச்சிருந்தவர். குமார்கடை என்றால் எல்லாருக்கும் தெரியும். முகத்துக்கு நேர சொல்லக்கூடாது. நல்ல பிள்ளை, கொள்ளை இலாபம் அடிக்காமல் நியாயமான விலைக்குத்தான் வியாபாரம் செய்துவந்தவர். இவருடைய அனுபவங்களைக் கேட்டுப்பாருங்கோ' என்றார்.

9ஆம் திகதி அன்று ஞாயிற்றுக்கிழமை ஆதலால் கடை பூட்டு. என்றாலும் பூட்டிய கடைவராந்தாவில் ஏகப்பட்ட சனம். வழக்கமாகவே கடை பூட்டப்படும் நாட்களில் ஊரவர்கள் அதில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பது வழக்கம். அன்றைக்கு இடம்பெயர்ந்து வந்தவர்களும் நிழலுக்காக அந்த வராந்தாவில் ஆறிக்கொண்டிருந்தார்கள்.

குமார் வீட்டின் பின்புறத்தில் கிணற்றுக்குப்பக்கத்தில் நின்று கருக்குமட்டைகளை எடுத்து ஒழுங்காக அடுக்கிக்கொண்டிருந்தார். கிணற்றடியில் நின்றுபார்த்தால் கோவில் வளவில் நடப்பது அனைத்தும் நன்கு தெரியும். கோவில் வளவையும் குமாரின் காணியையும் பிரித்து நிற்பது மதிலொன்றுதான். பொன்னரியம் வீட்டுக்குப்பக்கத்து வீடு அது.


குமாரின் அக்கா கிணற்றுக்குப்பக்கத்தில் உள்ள தண்ணீர் தாங்கியின் கீழே உள்ள குளியலறையில் நின்று பாத்திரங்கள் கழுவிக்கொண்டிருந்தாள். குமாரின் பையன்கள் இருவரும் பின்புறத்திலிருந்து விளையாடிக்கொண்டிருந்தனர். அவரது தாயாரும், மனைவியும் வீட்டுக்குள்ளே இருந்தனர்.

குமார் வேலையிலே கண்ணாயிருந்ததால் 'புக்காரா' வந்ததைக் கவனித்திருந்தாலும், அது குண்டு வீசியதைக் கவனிக்கவில்லை. கிணற்றுக்கு மறுபக்கத்தில் திவ்யராணி என்ற இளம் பெண்ணும் அவள் தங்கை சித்திராவும் பாத்திரங்கள் கழுவிக்கொண்டிருந்தார்கள். குமார் எதிர்பாராத வேளையில் 'கும்' என்று ஒருசத்தம். அது வெடிச்சத்தம் போல் இல்லை. அது என்னசத்தம் என்று உணருமுன்னே, குமார் அந்தரத்தில் பறந்து ஏதோ ஒரு குழிக்குள் குந்தியிருக்கும் பாவனையில் விழுந்ததுதான் தெரியும். பின்பக்கம் இருக்கைப்பகுதியில் பலமான அடி. தலையில் வேறு இடிபட்டு இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. தான் எங்கே இருக்கின்றேன் என்பதை அவரால் அனுமானிக்கக்கூட முடியவில்லை. எங்கும் புகைமண்டலமும் தூசும். ஏதோஒரு குழிக்குள் தான் கிடப்பது மட்டும் தெரியவே எப்படியும் வெளியேற வேண்டும் என்ற துடிப்பில் தட்டித்தடவி வெளியேறினார். அப்படி வெளியேறுவது கூடச்சிரமமாயில்லை. உடல் முழுவதும் மண் அப்பிக்கிடந்தது. கோவில் வளவிலும் சுற்றாடலிலும் அவலக்குரல்கள் ஒலித்தவண்ணம் இருந்தது. வெளியே வந்து பார்த்த பின்னர்தான் குமாருக்கு நிலைமை புரிந்தது, தான் கிணற்றுக்குள்ளிருந்து வெளியேறி இருப்பது. அவருக்கே ஆச்சரியமாக இருந்தது. சீமெந்துக்கற்களினால் சுற்றிவளைத்து சுவர் எழுப்பப்பட்டிருந்த கிணறு எங்கே? எதுவுமே அற்ற ஆழமில்லாத வெறும் குழிமட்டுமே தற்பொழுது அங்கு காணப்பட்டது. பக்கத்தே இருந்த தண்ணீர் தாங்கி நாற்பத்தைந்து பாகை சரிவில் நின்றது. அதன் கீழ் குளியலறையினுள் நின்று வெளியே வரமுடியாமல் அவரது அக்கா அலறிக்கொண்டிருப்பது கூடக் குமாருக்குக் கேட்கவில்லை.

நடந்தது இதுதான். விமானத்தில் இருந்து வீசப்பட்ட குண்டுகளில் ஒன்று நேராக குமார் வீட்டு ஆழக்கிணற்றினுள்ளே விழுந்து வெடித்தது. கிணற்றுக்குப்பக்கத்தில் சற்றுத்தள்ளிக் கருக்குமட்டைகளை அடுக்கிக்கொண்டிருந்த குமார், குண்டு வீச்சினால் அந்தரத்தில் தூக்கிவீசப்பட்டார். அவர் மேலே வீசி எறியப்பட்டு நிலத்தில் விழுவதற்குள் கிணறு முழுவதும் இடிந்து மூடப்பட்டுவிட்டது. குமார் நேராக மண்ணால் நிரவப்பட்டுவிட்ட கிணற்றுக்குழிக்குள்ளே விழுந்தார். அப்படி வீசி எறியப்பட்டுக் கிணற்றுக்குழிக்குள்ளே விழுந்தது குமார் மட்டுமன்று, கிணற்றின் மறுபுறத்தில் நின்ற திவ்யராணி என்ற இளம்பெண்ணும்தான் என்பது பின்னரே தெரியவந்தது. திவ்யராணி நீரும் மண்ணும் கலந்த களியால் மூடப்பட்டுவிட்டாள். மூச்சுத்திணறவே தட்டுத்தடுமாறி எழுந்தாள். நல்லகாலம் களி அவளை மூடி இருந்தாலும் அதிகமாக இல்லாதபடியால் தட்டுத்தடுமாறி எழுந்து எப்படியோ மேலே வந்துவிட்டாள்–தொடையிற் பெரும் உராய்வுக்காயம் ஏற்பட்டு இரத்தம் கொட்டிக்கொண்டிருந்தது.

திவ்யராணி தங்கை சித்திரா, நின்ற இடத்தில் இருந்து தூக்கி எறியப்பட்ட அவளுக்குச் சிறு உராய்வுகளே தவிரப் பெருங்காயம் எதுவுமில்லை.

நிலைமை இயல்பானதும் குமாருக்கு முதல் நினைவுக்கு வந்தது, பின்புறத்தில் விளையாடிக்கொண்டிருந்த தன் பிள்ளைகள் இருவரும்தான். இவர்களைத் தேட முனைந்த போது, மூத்தவன் அப்பா என்று அழைத்துக்கொண்டு ஓடி வந்தான். இவன் வாயில் இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. பாரியகாயம் எதுவுமில்லை, 'தம்பி எங்கே?' அவனைக் கேட்டபோது, சகோதரி முறையானவர்களுடன் அவன் நிற்பதாக மூத்தவன் கூறினான். பிள்ளைகளுக்கு உயிராபத்து இல்லை என்ற நிம்மதியில் மனைவியையும் தாயையும் தேடி வீட்டிற்குள்



தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

www.tamilarangam.net



என்ற கோசத்தை முன்வைத்து 1977 ம் ஆண்டு பொதுத்தேர்தலில் மக்களின் ஏகோபித்த ஆணையைப் பெற்றுப் பாராளுமன்றம் சென்ற அமிர்தலிங்கம் தலைமையிலான கூட்டணியினர், தமிழ் மக்களுக்குத் தாம் கொடுத்த வாக்கைக் கைவிட்டு, தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு மாவட்ட சபைக்கும், அபிவிருத்திச் சபைக்கும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவிடம் கை யேந்தினர். இதனால் தமிழ் மக்களின் வெறுப்பையும், தமிழ் இளம் சமூகத்தின் எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொண்டார்.

இதனால் தமிழ் மக்களின் முன்செல்ல முடியாத நிலை அமிர்தலிங்கத்திற்கும் கூட்டணியினருக்கும் ஏற்பட்ட போது போராளிகளைப் பயங்கரவாதிகள், படிப்பறிவற்றவர்கள், சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது என்று அவதூறாகப் பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்து வந்தார் அமிர்தலிங்கம்.

1983 ஆடிக் கலவரத்தின் பின், ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசினால் யாப்புக்கு வேது திருத்தம் கொண்டு வந்த போது பாராளுமன்றத்தில் இருக்க முடியாத நிலை ஏற்பட்டதனால் இந்தியாவிற்கு ஓடினார். 1987 ஆடி 'இந்திய சிறிலங்கா' ஒப்பந்தத்துடன் மீண்டும் கொழும்பு வந்து இந்திய அரசின் இராணுவ வெறியாட்டத்தை நியாயப்படுத்திப் பிரசாரம் செய்துவந்தார்.

இதன் மூலம், தான் ஒரு பதவி வெறி கொண்ட, தமிழீழ விடுதலைக்கு எதிரான, தமிழ் இனத் துரோகி என்பதனை அப்பட்டமாக வெளிப்படுத்தினார்.

## திரு. வே. பிரபாகரன்

பாராளுமன்ற அரசியல்வாதிகளின் அகிம்சை ரீதியான போராட்டங்கள் தோல்வியடைந்ததையும் இத்தோல்விக்கு மாற்றீடான பொருத்தமான வேலைத் திட்டங்களில் அரசியல்வாதிகள் ஈடுபடாது பாராளுமன்றக் கதிரைகளைக் கட்டிப் பிடித்தபடி காலம் கடத்தி வந்ததையும் சகிக்க முடியாத இளைய தலைமுறையின் 'புரட்சிச் சின்னமாக' 1972ம் ஆண்டின் பின்னரான காலங்களில் தோற்றம் பெற்ற திரு.வேபிரபாகரன், 1983 ஆம் ஆண்டு ஆடியில் நடைபெற்ற தமிழின அழிப்பின் பின், தமிழ் இளம் சமுதாயத்தின் மட்டுமல்ல, முழுத் தமிழ் மக்களின் ஏகோபித்த தலைமைச் சக்தியாகத் தோற்றம் பெற்றார்.

ஆயிரக்கணக்கான போராளிகள், 1983 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தில் உள்வாங்கப்பட்டபோது, பெரும்பாலான இளைஞர்கள் தலைவர் பிரபாகரனின் வழிநடத்தலிலும், ஆளுமையிலும், இலட்சிய உறுதியிலும்



உண்ணா நோன்பின் பின்பு திரு. வீரமணி திரு. இராமதாஸ் போன்றோருடன்

நம்பிக்கை கொண்டே இயக்கத்திற் சேர்ந்தனர். இவ்வேளையில் பலர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் என்று நினைத்து மாற்று இயக்கங்களிற் தவறுதலாகச் சேர்ந்து அல்லது சேர்க்கப்பட்டு மாற்று இயக்கங்களின் தவறான தலைமைகளால் வழிநடத்தப்பட்டு அழிந்து போனதும், இன்று தமிழீழ விடுதலைக்கு எதிரான துரோகவேலையில் ஈடுபட்டு வருவதும் நாம் காணும் காட்சிகளாகும்.

## திம்பு பேச்சு வார்த்தை

1985 ஆடியில் திம்புப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன், சிறிலங்கா ஆயுதப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இந்திய மத்திய அரசின் தலையீட்டால் போர் நிறுத்தம் ஒன்று ஏற்பட்டது. இது விடயமாகத் தமிழீழ மக்களுக்குத் தலைவர் பிரபாகரன் விடுத்த அறிக்கையில், 'தமிழ் மக்களை ஏமாற்றும் ஒரு தந்திரோபாயமாகச் சிங்கள அரசு பேச்சுவார்த்தை என்ற அரசியல் நாடகத்தை இந்திய மத்திய அரசின் துணையோடு பூட்டான் தலைநகர் திம்புவில் எம்மோடு நடாத்துகிறது.

இந்த யுத்த நிறுத்தம், சமாதானப் பேச்சுக்கள், சமாதானத் திட்டங்கள் என்ற மாயைகளில் மயங்கிவிட வேண்டாம் என நான் மக்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்திய அரசின் நல்லெண்ண முயற்சிக்கு நாம் ஒத்துப்போகும் அதே வேளையில், தமிழீழ இலட்சியத்திலிருந்து நாம் ஒருபோதும் வழிதவறப்போவதில்லை என்பதை நான் தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறவிரும்புகிறேன்.

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழரின் தேசியப் பிரச்சனைக்கு ஒரு நேர்மையான, நீதியான, கௌரவமான தீர்வை வழங்கப்போவதில்லை என்பதை இந்திய அரசு உணர்ந்து கொள்ளும்போது, தமிழீழ இலட்சியத்திற்கு மதிப்பளித்து எமது மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை ஆதரிக்க வேண்டும் என்பதே எமது அவா' என்று கூறப்பட்டிருந்தது. தலைவரின் தீர்க்கதரிசன அறிக்கையின் படியே சிங்கள அரச படைகள் போர் நிறுத்தக் காலத்தில் திருகோணமலையிலும் வவுனியாவிலும் நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்தனர்.

இந்திய மத்திய அரசு பேச்சுவார்த்தைக்கு இரு பகுதியினரையும் இணங்க வைக்க எடுத்த முயற்சியின் கடுகளவு முயற்சியைக்கூட, தமிழ் மக்களை இனப் படுகொலைகளில் இருந்து காப்பாற்ற எடுக்கவில்லை. தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை என்ற தமிழீழ மக்களின் அடிப்படை உரிமைகளைச் சிறிலங்கா அரசு ஏற்க மறுத்தது. இதனாற் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது. தமிழீழ விடுதலைப் போர் தீவிரம் பெற்றது. தலைவர் பிரபாகரனின் தலைமையில் மக்கள், விடுதலைக்காகப் போராடத் தயாராகினார்கள்.

## சாகும் வரை உண்ணா நோன்பு

விடுதலைப் புலிகளுக்கு அழுத்தங்களைக் கொடுத்துத் தமது விருப்பத்திற்குச் செயற்பட வைக்க முடியாமல் இருப்பதை உணர்ந்த இந்திய அரசு, அப்போதைய தமிழக அரசு மூலம் தமிழகப் பொலிசாரை ஏவிவிட்டு ஆயுத முனையிற் போராளிகளிடமிருந்த ஆயுதங்களைப் பறித்தது. விடுதலைப் புலிகளிடமிருந்து தகவல் தொடர்புச் சாதனங்களையும் ஆயுதங்களையும் பறித்தது. ஆனால் தலைவர் பிரபாகரனோ தம்மிடம் பறிக்கப்பட்ட தொலைத் தொடர்புச் சாதனங்கள், ஆயுதங்கள் ஆகியவற்றை ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து சாகும் வரை உண்ணாவிரதப்



"பொன்மனச் செம்மலும்" "திண்மனச் செம்மலும்"

போரில் ஈடுபட்டார்.

'தமிழீழ மக்களைப் பாதுகாக்க இந்திய அரசின் அனுமதியுடன்தான் நாம் ஆயுதங்களை இங்கே வைத்திருந்தோமே தவிர தமிழகப் பொலிசாரோடு போராடவல்ல. எனவே எமது மக்களின் பாதுகாப்புக் கவசங்களை எம்மிடம் மீள ஒப்படைக்க வேண்டும்' என, உண்ணா விரதத்தைக் கைவிடும்படி கூறிய அனைவருக்கும் தலைவர் பிரபாகரன் தெளிவாக எடுத்துக் கூறினார்.

தமிழீழ மக்களின் விடுதலையில், பாதுகாப்பில் தலைவர் பிரபாகரன் எவ்வளவு உறுதியாக இருக்கிறார் என்பதை உலகம் கண்டு வியந்தது. தமிழீழ மக்களின் நிராகரிக்கப்பட முடியாத தலைமைச் சக்தி எனச் சர்வதேசப் பத்திரிகைகள் அனைத்தும் செய்தி வெளியிட்டன.

தலைவரின் உண்ணாவிரதப் போர் வெற்றி பெற்றது. பறிக்கப்பட்ட அனைத்துக் கருவிகளும் பின் ஒப்படைக்கப்பட்டன. தமிழீழ மக்களின் உள்ளம் குளிர்ந்தது. 'தலைவர் பிரபாகரன் இருக்கும் வரை தமக்குத் தலைகுனிவு இல்லை. மானமுள்ள மக்களாக நாம் வாழ்வோம்' என்ற நம்பிக்கை மக்கள் மனதில் ஆழமாக வேர்விடத் தொடங்கியது.

## பெங்களூரில் பேச்சுவார்த்தை இலட்சியத்தை எள்ளளவும் விட்டுக் கொடுக்காத தலைவர்.

கார்த்திகை 16, 1986 இல் பெங்களூரில் நடைபெற்ற சார்க் மகாநாட்டிற் கலந்து கொள்ள வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடும்படி வற்புறுத்திய இந்திய அரசால், தலைவர் பிரபாகரன் பெங்களூருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

வட மாகாணத்தின் முதலமைச்சர் பதவியை இப்போதைக்கு ஏற்றுக் கொண்டு, சிங்கள அரசுடன் ஓர் உடன்பாட்டிற்குத் தலைவர் பிரபாகரன் ஒப்புக்கொண்டால், பின்னர் அவருக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்வதாக இந்திய அரசின் சார்பில் ஆசை வார்த்தை கூறப்பட்டது. இதில் எப்படியும் தலைவர் பிரபாகரனை இணங்க வைக்க வேண்டும் என இந்திய அரசு உறுதியுடன் செயற்பட்டது.

சார்க் மாநாடு முடிந்து சிறிலங்கா புறப்படவிருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை 9 மணி நேரம் தாமதிக்கும்படி அப்போதைய பிரதமர் ராஜீவ் கேட்டுக் கொண்டார். அவரும் தன் பயணத்தை ஒத்தி வைத்து விட்டு அங்கு தங்கினார்.

அந்த 9 மணி நேரமும் தலைவர் பிரபாகரனுக்குக் கடும் சோதனையாக இருந்தது. தமிழீழ மக்களின் அரசியற் தலைவிதியை ஆட்டம் காண வைக்கப் பதவியாசை, சொகுசான வாழ்க்கைக்குரிய வசதி வாய்ப்புக்கள் தரப்படும் என்ற பொருளாசை என்பன தலைவரின் முன் வைக்கப்பட்டன.

ஆனால் தலைவர் பிரபாகரனோ, 'எமது மண்ணின் விடிவுக்காகத்தான் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். சலுகைகளுக்காகக் கைநீட்டி, ஆசைவார்த்தைகளை நம்பி மோசம் போய், கடந்த காலத் தலைமைகள் விட்ட தவறை நான் விடத்தயாராக இல்லை' என்பதைத் தன்னை வற்புறுத்திய சகலருக்கும் குறிப்பாக அப்போதைய முதலமைச்சர் எம். ஜி. ஆருக்கும் திட்டவட்டமாகக் கூறினார். இந்தியாவின் இந்த வற்புறுத்தல் நாடகம் தலைவர் பிரபாகரனின் உறுதியினால் வெற்றி பெறவில்லை.

அதே நேரத்தில் விடுதலைப் புலிகள் சிங்களப் படைகளுடன் மோதி அழிந்தபின், தமிழ்ப் பகுதிகளிற் தமக்கு என்று ஒரு கூலிப் படையை வைத்துக் கொள்ளும் முன் யோசனையுடன் இந்திய அரசு தனது உளவு நிறுவனமான 'றோ' மூலம் நவீன ஆயுதங்களைப் பிற இயக்கங்களுக்குக் கொடுத்து அவர்களை ஆயுதபாணிகளாக்கியது. அத்துடன் தேவையேற்படின் விடுதலைப் புலிகளுடன் மற்றைய இயக்கங்களை மோதவிட்டு இலாபம் தேடவும் இந்திய அரசு தயாராக இருந்தது.

## தமிழீழம் திரும்பிய பிரபாகரன்

பெங்களூர் மாநாட்டின் பின் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, விடுதலைப் புலிகள் மீது குறிப்பாகத் தன் மீது கோபமாக இருப்பதைத் தலைவர் பிரபாகரன் உணர்ந்து கொண்டார்.

தமிழகத்தில் இருக்கும் வரை இந்திய மத்திய அரசு நெருக்கடிகளைக் கொடுத்து, அரை குறைத் தீர்வுகளை ஏற்கும்படி நிர்ப்பந்திக்கும். பிற இயக்கங்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்துத் தம்மை அழிக்க இந்திய அரசு முற்படும். தமிழீழ மக்களின் விடுதலை வேட்கையை ஆயுத பலத்தாலும், நாச வேலைகள், நெருக்கடிகள் மூலம் இந்திய அரசு நசுக்கத்துணியும்.

எனவே இந்திய அரசின் அழைப்பின் பேரில் தமிழகம் சென்று தங்கியிருந்த தலைவர், தமிழீழ மக்களின் அரசியல் இலட்சியத்தைக் காக்க ஒரே வழி தமிழீழம் திரும்புவதுதான் என முடிவெடுத்து இந்திய வீட்டுக் காவலையும் கடந்து பாதுகாப்பாகத் தமிழீழம் வந்து சேர்ந்தார்.

## இந்திய அரசின் அழைப்பின் பேரில் தலைவர் டில்லி பயணம்

தமது மறைமுக அழுங்குப் பிடியிலிருந்து

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





மக்களைக் காணவந்த தலைவன்

விடுபட்டுத் தலைவர் பிரபாகரன் தமிழீழம் வந்து சேர்ந்தது இந்திய அரசுக்குப் பெரும் கவலையைக் கொடுத்தது.

தனக்கெதிரான நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து செயற்பட்ட சிறிலங்கா அரசைத் தன்காலடியில் விழவைக்கத், தமிழீழ மக்களின் மீட்பர் போலத் தான் போட்ட வேடத்தை விடுதலைப் புலிகள் புரிந்து கொண்டு செயற்படுகிறார்கள். இதனால் தனது அரசியல் இராணுவ நலன்களுக்கு ஏற்ற முறையில் விடுதலைப் புலிகளைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதனால் இந்திய அரசு, நேரடியாக இலங்கைத் தீவின் இனப்பிரச்சனையிற் தலையீடு செய்யத் திட்டம் தீட்டியது.

இதற்காகச் சிறிலங்கா அரசுடன் ஓர் ஒப்பந்தம் போட இரகசியமாகத் தன்னைத் தயார்ப்படுத்தினார் ராஜீவ் காந்தி.

தலைவர் பிரபாகரனுடன் முக்கியமான விடயமாகப் பேச விரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டது. சிறிலங்கா தூதரக அதிகாரிகளில் ஒருவர் தலைவரிடம் ஒரு முறை, 'நீங்கள் பிரதமர் ராஜீவ் காந்தியை நான்கு முறை ஏமாற்றியுள்ளீர்கள்' என்று கூறினார்.

அதற்கு உடனடியாகப் பதிலளித்த தலைவர் 'நான் நான்கு முறை எனது மக்களின் அரசியற் தலைவிதியைக் காப்பாற்றியுள்ளேன்' என்றார். இதனால் திகைப்படைந்த இந்திய அதிகாரிகள் மௌனமாகினர்.

ராஜீவ் காந்தியின் அழைப்பை ஏற்று இந்தியா செல்லுமுன் தலைவர் பிரபாகரன், தமிழீழ மக்களுக்கு விடுத்த அறிக்கையில் 'தமிழ் மக்கள் எம்மீதும் எமது விடுதலை இயக்கத்தின் மீதும் கொண்டுள்ள நம்பிக்கையை நாம் என்றும் மறந்துவிடப் போவதில்லை. அனைத்தையும் உணர்ந்து இராசதந்திர ரீதியிலேயே இன்று செயற்பட்டு வருகிறோம். சிங்கள அரசுகளை நம்பித் தமிழ் மக்கள் 30 வருடகாலமாக ஏமாந்திருப்பது உலகறிந்த விடயம். இன்று தமிழ் மக்கள் தங்கள் இலட்சியத்தை வென்றெடுக்கும் ஒரு தலைமையைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறுதியிட்டுக் கூறுகிறேன். நீங்கள் எனக்கு அளித்துவரும் கடமையை நான் நேர்மையாகவும், உண்மையாகவும், உறுதியுடனும் செய்வேன் என நம்புகிறேன்.

தற்காலத்தில் காணப்படும் இடைக்காலத் தீர்வுகள் எமது பிரச்சனையின் தீர்வாக அமையாது. எனவே தமிழ் மக்களின் நிரந்தரமான, நிம்மதியான, சுபீட்சமான எதிர்காலத்தை உறுதிப் படுத்தும் நிரந்தரத் தீர்வுக்காகவே நான் பாடுபடுகின்றேன். இத்தீர்வு தமிழீழம் என்றே நம்புகிறேன்' எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தியத் தலைநகர் டில்லி சென்ற தலைவருக்கு ராஜீவ் – ஜே. ஆர். செய்யவிருந்த 'இந்திய–சிறிலங்கா' ஒப்பந்த விடயங்கள் பற்றிக் கூறப்பட்டன. இந்த அரைகுறை ஒப்பந்தத்தை ஏற்க முடியாது எனத் தலைவர் உடனடியாகப் பதிலளித்து விட்டார். இதன் பின் தலைவரைச் சந்தித்த ராஜீவ் காந்தி கொடுத்த வாக்குறுதிகளுக்கு மதிப்பளித்து, இந்திய அரசுக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கும் முகமாக ஒப்பந்த அமுலாக்கத்துக்கு தாம் எதிர்ப்பில்லை என்று ராஜீவ் காந்தியிடம் கூறினார்.

தலைவரை டில்லியில் விடுதி ஒன்றில் தங்க வைத்துக் காவல் போட்டுவிட்டுக் கொழும்பு வந்த ராஜீவ் காந்தி, தமிழீழ மக்களின் அரசியற் தலைவிதியை வலுக்கட்டாயமாகத் தன்கையில் எடுத்துக் கொண்டு, ஜே.ஆருடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

## சுதுமலைப் பிரகடனம்

ஒப்பந்தம் போட்டுவிட்டு டில்லி திரும்பிய ராஜீவ் காந்தியை மீண்டும் சந்தித்த தலைவர், தமிழீழம் வந்து சேர்ந்தார்.

ஒப்பந்தம் தொடர்பான விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தச் சுதுமலையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. அக்கூட்டத்தில் இலட்சக்கணக்கான தமிழ் மக்களும், இந்தியப் படைத்தளபதிகளும், சர்வதேசப் பத்திரிகையாளர்களும் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய தலைவர் பின்வருமாறு கூறினார்:

'இந்த ஒப்பந்தம் நேரடியாக எமது இயக்கத்தைப் பாதிக்கிறது: எமது ஆயுதப் போராட்டத்திற்கு ஆப்புவைப்பதாகவும் அமைகிறது. பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி எமக்குச் சில வாக்குறுதிகளை அளித்தார். எமது மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்தார்.

சிங்கள இனவாத அரசு மீண்டும் தமிழர் இன அழிப்பு நடவடிக்கையில் இறங்க இந்தியா அனுமதிக்காது என நம்புகிறோம். இந்த நம்பிக்கையிற்றான் நாம் இந்திய சமாதானப் படையிடம் ஆயுதங்களை ஒப்படைக்க முடிவு செய்தோம்.

நாம் இந்த ஆயுதங்களை ஒப்படைக்கும் கணத்திலிருந்து, எமது மக்களாகிய உங்களின் பாதுகாப்புப் பொறுப்பையும் இந்தியாவிடம் ஒப்படைக்கிறோம்.

இந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடத்திலிருந்து பெற்றுக்கொள்கிறது. ஆயுதக் கையளிப்பு என்பது இந்தப் பொறுப்பு மாற்றத்தைக் குறிக்கிறது.

தமிழீழத் தனியரசே தமிழீழ மக்களின் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கையுண்டு. தமிழீழ இலட்சியத்திற்காக நான் தொடர்ந்தும் போராடுவேன் என்பதை இங்கு தெட்டத் தெளிவாக எடுத்துக் கூற விரும்புகிறேன்.

போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை.

நான் எந்தக் காலகட்டத்திலும் தேர்தலில் பங்கு பற்றப் போவதில்லை. முதலமைச்சர் பதவியையும் ஏற்கப் போவதில்லை. இதை நான் மிகவும் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்'.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரகடனத்தின் பின், இந்திய அரசு, குறிப்பாக ராஜீவ் காந்தி, தலைவருக்குக் கொடுத்த எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை.

கொடுத்த வாக்குறுதிகளில் ஐந்தை நிறைவேற்றும்படி கோரிச் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த லெப். கேணல் திலீபன், இந்திய அரசின் அலட்சியப்போக்கால் 1987 புரட்டாதி 26 இல் வீரச்சாவடைந்தார்.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்



தலைவனைக் காணவந்த மக்கள்

www.tamilarangam.net



**தமிழீழ மக்களின் அரசியற் தலைவிதியை ஆட்டம் காண வைக்கப் பதவியாசை, சொகுசான வாழ்க்கைக்குரிய வசதி வாய்ப்புக்கள் தரப்படும் என்ற பொருளாசை என்பன தலைவரின்முன் வைக்கப்பட்டன. ஆனால் தலைவர் பிரபாகரனோ, 'எமது மண்ணின் விடிவுக்காகத்தான் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். சலுகைகளுக்காகக் கை நீட்டி, ஆசைவார்த்தைகளை நம்பி மோசம்போய், கடந்த காலத் தலைமைகள் விட்ட தவறை நான் விடத்தயாராக இல்லை' என்பதைத் தன்னை வற்புறுத்திய சகலருக்கும் குறிப்பாக அப்போதைய முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்கும் திட்டவட்டமாகக் கூறினார்.**

1987 ஐப்பசி 3 இல் விடுதலைப் புலிகளின் இரண்டு மூத்த தளபதிகள் உள்ளிட்ட 17 போராளிகள், தமிழீழக் கடலில் வைத்துச் சிங்களக் கடற்படையாற் கைது செய்யப்பட்டனர்.

இக்கைது இந்திய–சிறிலங்கா ஒப்பந்த விதிகளுக்கு முரணானது என எடுத்துக் கூறப்பட்டபோதும், இந்தியா அதனையும் அலட்சியப்படுத்தியதால் கைது செய்யப்பட்டோர் கொழும்பு கொண்டு செல்லப்பட இருந்த நேரத்தில், ராஜீவ் காந்தி கைது செய்யப்பட்டோரின் விடுதலைக்காகத் தலைவர் பிரபாகரன் தமிழீழ இலட்சியத்தை கைவிட்டு இந்திய – சிறிலங்கா ஒப்பந்தத்தை ஏற்றுக் கையெழுத்திட வேண்டும், என்ற பேரம் பேசும் நிர்ப்பந்தத்தைத் தலைவர் பிரபாகரனுக்கு ஏற்படுத்தினார்.

ஆனால், தலைவரோ 'போராளிகளை இழந்தாலும் எமது மக்களின் தமிழீழ இலட்சியத்துக்குத் துரோகம் செய்யேன்' எனத் திட்டவட்டமாகக் கூறினார்.

இதனால் ராஜீவ் காந்தி அதிர்ந்து போனார். போராளிகளின் தற்கொடைச் சாவுக்கான சூழலை ராஜீவ் தானே ஏற்படுத்தி அவர்களைச் சாகடித்தார்.

## இந்திய - தமிழீழப் போர்

தளபதிகளை அடுக்கடுக்காக இழந்த போதும் கலங்காது நின்ற தலைவரை அழிக்க, விடுதலைப் புலிகளை அழிக்க, மக்களின் எழுச்சியை அடக்கத் தமிழீழம் மீதான போரை ஐப்பசி 10, 1987 இல் இந்திய அரசு ஆரம்பித்தது.

இந்திய அரசு பல்வேறு அழுத்தங்களை, நெருக்கடிகளை விடுதலைப் புலிகளுக்கு ஏற்படுத்தியது. எல்லாம் முடிந்தது என்று உலகமே முடிவு எடுத்த சந்தர்ப்பங்களின் போது, தலைவரின் தீர்க்கதரிசனமான செயல்களால் எல்லாமே பெரும் வியப்பாகப்போனது.

விழவிழப் புதிய புதிய விடுதலைப் புலிகள், தலைவர் பிரபா–கரனின் இலட்சிய உறுதியிலும், வழிநடத்தலிலும், நம்பிக்கைகொண்டு போர்க்களம் விரைந்தார்கள். இரண்டு வருடப் போரின் பின், பலத்த இழப்புக்களுடன் தமிழீழ மண்ணில் விடுதலைப் புலிகளிடம் தோல்வி கண்ட படையாக இந்தியப்படை தமிழீழ மண்ணை விட்டு வெளியேறியது.

தலைவர் பிரபாகரனின் இலட்சிய உறுதியை அழிப்பதற்குத் தலைவரைக் கொலை செய்வதே ஒரே வழியென முடிவு எடுத்து இந்திய அரசும், சிறிலங்கா அரசும் அவற்றின் உளவுப் படைகளும், கூலிக் குழுக்களும் பலவித முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. இதற்காக விடுதலைப் புலிகள் இயக்கத்தினுள்ளேயே இந்திய உளவு நிறுவனமான 'றோ' ஒரு துரோகக் குழுவை உருவாக்கியது. ஆனால் இச்சதி முயற்சி இடையில் கண்டுபிடிக்கப்பட்டதால் தலைவரின் உயிருக்கு ஏற்படவிருந்த ஆபத்துத் தற்காலிகமாக விலகியது.

## பிரேமதாசா காலம்

இந்தியப் படைகளைத் தமிழீழத்திலிருந்து வெளியேற்ற இராசதந்திர ரீதியிலான ஒரு அணுகுமுறையையும் பிரேமதாசா சனாதிபதியாக இருந்த காலத்தில் தலைவர் பிரபாகரன் மேற்கொண்டார்.


ஆனால் இந்தியப் படையின் வெளியேற்றத்துக்கு முன்னான காலத்தில் பிரேமதாசா கொடுத்த வாக்குறுதிகளை, இந்தியப் படையின் வெளியேற்றத்தின் பின் நிறைவேற்றத் தவறியதால் 'ஈழப்போர் 2' 1990 ஆனி 10 இல் ஆரம்பமாகியது. இப்போர் கிட்டத்தட்ட நாலரை வருடமாக நடைபெற்றது.

## சந்திரிகா காலம்

சமாதான வேடத்துடன் சனாதிபதிப் பதவியைக் கைப்பற்றிய சந்திரிகா, மக்களுக்குக் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. விடுதலைப் புலிகளுடன் உடன்பட்ட எந்தவிடயத்தையும் அமுலாக்கவில்லை.

சந்திரிகாவின் இந்த அசமந்தப் போக்கால் 'ஈழப்போர் 3' 1995, சித்திரை 19 இல் ஆரம்பமாகியது.

'இப்போர் விடுதலைப் புலிகளால் அவசரப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. இதற்குத் தலைவரின் தவறான கணிப்பே காரணம்' என்ற பிரச்சாரங்கள் தமிழீழ விடுதலைக்கு எதிரான அனைத்துச் சக்திகளாலும் முன் வைக்கப்படுகிறது. இதேபோலவே முன்னைய கால கட்டங்களிலும் தலைவர் பிரபாகரன் எடுத்த முடிவுகளை எல்லாம் பிழையென விமர்சித்தவர்கள், பின்னர் அம் முடிவுகள் எல்லாம் தீர்க்கதரிசனமானவை எனப் புகழ்ந்தமை கடந்த கால வரலாறு. இதுவே தலைவரின் இன்றைய முடிவு பற்றிய எதிர்காலக் கணிப்பாகவும் இருக்கப்போகிறது.



'தமிழீழ மக்களுக்கு உரிமைகள் கிடைக்கத் தடையாக இருப்பது தலைவர் பிரபாகரனே: அவரை விடுதலைப் புலிகளின் தலைமைப் பொறுப்பில் இருந்து அகற்றுவதே சிறந்த வழி' என்ற ரீதியில் எல்லாம் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் தமிழ் மக்களாகிய அனைவருக்கும் உண்மை நிலை தெரியும். மேற்கூறப்பட்ட

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

**தமிழீழம் பிரசவ வேதனைக்கால நிலையில் இன்றுள்ளது. இதன் தலைமை மருத்துவராக இருப்பவர் தலைவர் பிரபாகரன். இவரை அழிப்பதன் மூலம் அல்லது போராட்டக் களத்திலிருந்து அகற்றுவதன் மூலம்தான் தமிழீழத்தின் பிரசவத்தைத் தடுக்கமுடியும் எனச் சகல எதிர்ப்புச் சக்திகளும் தற்போது உணர்ந்து செயற்படுகின்றன. எனவே தமிழீழ மக்களால் மட்டும் அல்ல உலகில் வாழும் அனைத்துத் தமிழராலும், தமிழீழ விடுதலைப் போரின் தலைமைச் சக்தியான வே. பிரபாகரனின் தலைமைத்துவம் பாதுகாக்கப்பட வேண்டும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் மக்களால்...

14 ஆம் பக்கத் தொடர்ச்சி....

அனைத்துச் சம்பவங்கள் மூலம், எவ்வாறு தமிழீழத் தேசிய இனம் கிட்டத்தட்ட 400 ஆண்டுகளாகத் தீர்க்க தரிசனமான தலைமை அற்று, சுயநலமற்ற, இலட்சியப் பற்றுள்ள தலைமையின்றி அடிமைப்பட்டிருந்தது என்பதை அறிந்திருப்பீர்கள்.

தலைவர் பிரபாகரனின் காலத்திற்றான், முன்பு 'தமிழர்' என்றால் 'கூலி' என இகழ்ந்தவர் எல்லாம் தமிழர் என்றால் 'விடுதலைப்புலி' எனச் சொல்லிக் கிலி கொள்ளும் காலம் உருவாக்கப்பட்டது. மானம் உள்ள மக்களாக உலாவ வழி ஏற்பட்டது.

தமிழீழம் பிரசவ வேதனைக்கால நிலையில் இன்றுள்ளது. இதன் தலைமை மருத்துவராக இருப்பவர் தலைவர் பிரபாகரன். இவரை அழிப்பதன் மூலம் அல்லது போராட்டக் களத்திலிருந்து அகற்றுவதன் மூலம்தான் தமிழீழத்தின் பிரசவத்தைத் தடுக்கமுடியும் எனச் சகல எதிர்ப் புரட்சிச் சக்திகளும் தற்போது உணர்ந்து செயற்படுகின்றன.

எனவே தமிழீழ மக்களால் மட்டும் அல்ல உலகில் வாழும் அனைத்துத் தமிழராலும், தமிழீழ விடுதலைப் போரின் தலைமைச் சக்தியான வே. பிரபாகரனின் தலைமைத்துவம் பாதுகாக்கப்பட வேண்டும்.

விடுதலைப் போராட்டங்களை நடாத்திச் சுதந்திரம் பெற்ற வியட்நாம், கியூபா, சீனா, எரித்திரியா, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளின் தலைமைச் சக்திகள் இன்றும் எதிர்ப்புரட்சிச் சக்திகளின் அச்சுறுத்தலை எதிர்நோக்கியே உள்ளனர். ஆனால் அத் தலைவர்களை அகற்ற முடியாமல் இருப்பதற்குக் காரணம் அந்நாட்டு மக்களின் ஆதரவுதான்.

உதாரணமாக, கியூபாத் தலைவர் பிடல் கஸ்ரோ மிகப்பெரும் நெருக்கடியான, உயிராபத்தான நிலையிலும் கியூபா நாட்டை வழிநடத்தி வருகிறார் என்றால் அதற்குக் காரணம், அந்நாட்டு மக்கள் அவர் மீது கொண்ட நம்பிக்கையும் அம்மக்கள் கொடுக்கும் ஆதரவுந்தான்.

அவருக்கு எதிரான சக்திகளால் உலகம் பூராகவும் பெருமளவிலான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் தன்னிலை தாளாது, கியூபா நாட்டின் சனாதிபதியாக அமெரிக்க மண்ணில் நடைபெற்ற ஐ.நா. சபையின் 50 வது நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். அவ்விழாவில் கலந்து கொண்ட எந்நாட்டின் தலைவருக்கும் இல்லாத முக்கியத்துவம் பிடல் கஸ்ரோ அவர்களுக்கே கொடுக்கப்பட்டது.

அவரைப் பேட்டி கண்ட அமெரிக்க தொலைக்காட்சி நிருபர்களே வியக்கும் வண்ணம், கியூபா மக்களின் உள்ளக் கிடக்கைகளை அவர் வெளிப்படுத்தினார். தன் தலைமையில் கியூபாவில் நடைபெறும் செயற்பாடுகளின் நியாயத்தன்மைகளை எடுத்தியம்பினார்.

இதேபோன்றுதான், தமிழீழ விடுதலைக்கு முன்னான காலத்தில், தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் இருப்பிற்கு ஏற்படுத்தப்படும் ஆபத்துக்கள் அனைத்தையும், தமிழர்கள் அனைவரும் எதிர்கொண்டு தலைவரைப் பாதுகாக்க உறுதி பூண வேண்டும்.

முன்பு தலைவர் பிரபாகரனின் தலைக்கு 10 இலட்சம் ரூபா விலை பேசிய சிறிலங்கா அரசு, இன்று இரண்டரைக் கோடி ரூபா விலை கூறியுள்ளது. இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளக் கூடியது என்னவென்னில், தலைவர் பிரபாகரனின் தலைமைத்துவம் இன்று தமிழினத்துக்கு எவ்வளவு பெறுமதியானது என்பதாகும்.

# தனிநாடு, தனியரசு..

7 ஆம் பக்கத் தொடர்ச்சி...

இதுகாலவரை இணைந்து வருகின்றன.

கனேடிய அரசியல் யாப்போடு, சனாதிபதி சந்திரிகாவின் இனப்பிரச்சனைக்கான தீர்வு யோசனைகளை ஒப்பிட்டுப் பார்த்தால், அது உறை போடக்கூடப் போதாது.

பொஸ்னியாவின் மூன்று ஆண்டு காலப் போர், மேற்கு நாடுகளின் அரசியல்–இராணுவ இராஜதந்திர தலைமீடு காரணமாக முடிவுக்குக் கொண்டு வர முயற்சிக்கப்பட்டுள்ளது. சேபியர், குரேசியர், முஸ்லிம் இவர்களுக்கிடையில் . கைச்சாத்திடப்பட்டுள்ள சமாதான உடன்படிக்கையின் பிரகாரம் பொஸ்னியா–கேர்சுகொவினா (Bosnia - Herzegovina) இரண்டு நாடுகளாகப் பிரிக்கப்பட்டு அதிகாரம் குறைந்த மத்திய அரசு ஆட்சியின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

மொத்த நிலப்பரப்பில் 49 வீதம் சேபியர்களுக்கு–இதிற் சேபியக் குடியரசு. மீதி 51 வீதம் குரோசியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும். இதில் ஒரு இணைப்பாட்சி அரசு. மத்திய அரசு வெளியுறவு, சர்வதேச வர்த்தகம் நீதித்துறை ஆகியவற்றிற்குப் பொறுப்பாக இருக்கும்

மத்திய அரசில் சேபியர், குரோசியர், முஸ்லிம்கள் இடம்பெறுவார்கள் சேபியருக்கு மூன்றில் ஒரு பங்கு இடம் ஒதுக்கப்படும்.

இன்னொரு முக்கிய அம்சம் என்னவென்றால், 49 வீதம் சேபியக்குடியரசுப்பிரதேசம் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இல்லை.

விரைவில், தேர்தல் நடைபெறவிருக்கிறது. கனடா உட்பட ஏழு நாடுகள் கொண்ட ஆணையம் அத்தேர்தலைக் கண்காணிக்கும்.

இரத்தம் ஆறாக ஓடிய பொஸ்னியாவில் யுத்தமேகங்கள் விலகிச் சமாதான வெண்புறாக்கள் வானவெளியிற் பறக்க ஆரம்பித்துள்ளன.

ஆனால் இலங்கையில் இடம் பெறும் உள்நாட்டுப் போரில் மேற்குநாடுகள் மத்தியத்தம் வகிப்பதற்குக் கூடச் சிங்கள அரசு இதுவரை அனுமதி வழங்கவில்லை.

தமிழர்களுக்கு வடக்கு – கிழக்கை இணைத்த தமிழீழக் குடியரசு. சிங்களவர்களுக்கு மீதி தெற்கும் மேற்கும் இணைந்த சிறிலங்காக் குடியரசு. இதனையே மத்தியத்தம் வகிக்க விரும்பும் நாடுகள் தீர்வாக முன் வைக்க வேண்டும். இலங்கைப்பிரச்சனைக்குத் தேவைப்படுவது, அறுவை வைத்தியம். சந்திரிகாவின் அரசியற் தீர்வுயோசனை, புற்று நோய்க்குப் பனடோல் எழுதிக் கொடுத்த வைத்தியரின் புத்திசாலித்தனம் போன்றது.

# வட்டம் விரிகிறது...

17 ஆம் பக்கத் தொடர்ச்சி...

"விநாயகம்!...... இதுக்கு மேலேயும் நாங்கள் அடிமையாகவும், சோற்று மாடுகளாகவும் இருக்கிறதை விட, நஞ்சைக் குடிச்சுச் சாகலாம். சாதாரண காடையனே இப்படியெண்டால், ஆமி வந்தால் எப்படியிருக்கும்....?"

"எடேய்...என்னடா சொல்லுறாய்?" அவனை வியப்புடன் பார்த்த விநாயகத்துக்கு அவனுடைய போக்குப் புரியவி ல்லை! விநாயகம் எங்கட மண்ணிலை வேரூன்றி இருக்கிற சிங்கள இராணுவத்தை அழிக்காமல் இங்க நாங்கள் சுதந்திரமாகவும், தன்மானத்துடனும் வாழமுடியாது. இவ்வளவு நாளும் பள்ளிக்கூடப் பெடியன்களும், பொம்பிளை ப்பிள்ளைகளும் சண்டை பிடித்து எங்கட மண்ணையும், எங்களையும் காப்பாற்றி வருவதை நினைக்க வெட்கமாக இருக்குது...... எங்களைப் போல உரமேறிய உடல்படைத்த தொழிலாளர்களும் ஆயுதம் ஏந்த வேண்டும்...... அப்பத்தான் விடிவு வரும்...... விரும்பினால் எனக்குப் பிறகாலும் நீயும் வா.....? சண்முகசுந்தரம் முனைப்போடு கூறிவிட்டு புதிய போராளிகள் இணையும் செயலகத்தை நோக்கி விரைந்தான்.

# எத்தனை எத்தனை ...

நடுப்பக்கத் தொடர்ச்சி...

சென்றார். வீடா அது? எது எந்த இடம் என்று, தனதுவீட்டின் பகுதிகளையே குமாரால்கண்டு பிடிக்க முடியவில்லை. வீட்டின் கூரை இடிந்து விழுந்திருந்தது. சுவர்கள் தகர்ந்து விழுந்திருந்தன. எந்தப்பக்கத்தால் வீட்டின் உள்ளே நுழைவது என்று குமாருக்குப் புரியவில்லை. தட்டுத் தடுமாறிப் பின்புறத்து இடிபாடுகளைத் தாண்டி வீட்டின் உள்ளே பிரவேசித்தபோது மேசையொன்று கவிழ்ந்திருந்தது, அந்த மேசையின் அடியில் அவரது மனைவி: ஆனால் உயிரோடு இருந்தாள். மேசையை அழுத்திக்கொண்டிருந்த கற்களையும் மரங்களையும் அகற்றித் தன் மனைவியை மீட்டெடுத்தார். பலமான அடி ஒன்றும் அவளுக்கு இல்லை.

அடுத்தது அம்மா.........

அம்மாவைக் காணவில்லை. தேடிய பொழுது இடிபாடுகளுக்கிடையே இரண்டு கால்கள் மட்டும் தெரிந்தன. கற்களைச் சற்று விலக்கிப் பார்த்தபோது தெரிந்த அந்தச் சேலை அம்மாவுடையதுதான். இதற்குள் யாரோ ஒருவர் உதவிக்கு வந்தார். வந்தவர் அம்மா மீதிருக்கும் மண்குவியலை –இடிபாடுகளை அகற்ற உதவியபோது, இன்னொருவர் அவரைத்தேடி வந்து அவரது நெருங்கிய உறவினர் ஒருவர் இறந்தவிட்ட செய்தியைக் கூறவே, உதவிக்கொண்டிருந்தவர் சென்றுவிட்டார். வந்தவர் உதவினார். ஒருவாறாக அம்மாவின் மீதிருந்த இடிபாடுகளை– மண்ணை அகற்றி வெளியே எடுத்தனர். அம்மாவின் உயிர் பிரிந்துவிட்டிருந்தது. பாரிய ஏதோ ஒன்று அவரது உச்சந்தலையைப் பிளந்துவிட்டிருந்தது.

பின் விறாந்தையின் ஒரு பகுதியில் நீள வாங்கு ஒன்றைப் போட்டு, அவரது உடலைக் கிடத்தினார்கள். இதற்கிடையில், பின் குளியலறையில் சிக்கிக் கொண்டிருந்த அக்காவும் ஒருவாறாக அடிபாடுகளை நீக்கி வெளியே வந்துவிட்டார்.

குமாருக்கு இடுப்புப் பகுதி பயங்கரமாக வலித்தது. தலையிலிருந்து இரத்தம் வேறு வழிந்து கொண்டிருந்தது. உதவி செய்ய வந்தவர்கள் குமாரின் நிலையைக்கண்டு, அவரை முதலில் வைத்திய சாலைக்குச் செல்லுமாறு கட்டாயப்படுத்தினர். ஏனெனில், தலையில் ஏற்பட்டிருக்கும் இரத்தப்போக்கைக் கட்டுப்படுத்தாவிடில் விபரீதமாக முடியும் என்று எச்சரித்தனர். தாயின் உடலை அந்நிலையில் விட்டுச்செல்ல குமாருக்கு விருப்பமில்லை. என்றாலும் எல்லாரும் சேர்ந்து வற்புறுத்தவே, மறுக்க முடியாதவராக, காயமுற்றோர் ஏற்றப்பட்ட வாகனமொன்றில் ஏறி யாழ். வைத்தியசாலை சென்றார்.

தலைக்கு மருந்து கட்டி முடிந்தது. தாயாரின் நினைவுதான். இடுப்பு வேறு நடக்க முடியாது வலித்தது. என்றாலும் செய்ய வேண்டிய கடமையின் முன்னால் உடல்வலி ஒரு பொருட்டாகத் தோற்றவில்லை. வைத்தியசாலையிலிருந்து புறப்பட்டார். அடுத்த பிரச்சனை அங்கிருந்து எப்படிச்செல்வது? நவாலிக்கு ஒரு வாகனமும் இல்லை. அதே வேளை கையில் ஒரு சதமும் இல்லை.

'ஓட்டோ' அல்லது மூன்று சில்லு சைக்கிள் வண்டி எதையாவது வாடகைக்கு அமர்த்தி நவாலிக்குப் போய்விட்டால், யாரிடமாவது பணத்தை வாங்கிக் கொடுத்துவிடலாம் என்று நினைத்தார். ஆனால் நவாலிக்கு எந்த வாகனக்காரரும் வர மறுத்துவிட்டனர். அதற்கு ஒரு காரணம், குமார் அப்பொழுது புழுதி மண்டிய உடலுடன் விசரன்போல் நின்றதாகவும் இருக்கலாம்.

இனி என்ன செய்வது? நடந்தாவது நவாலி போய்ச் சேருவோம் என்ற முடிவோடு, மானிப்பாய் வீதியால் நடக்கத் தொடங்கினார். ஐந்து சந்தியைத் தாண்டி முஸ்லிம் தெருவால் வந்துகொண்டிருந்தார். கடைக்கு வேண்டிய பொருட்களைக் கொள்வனவு செய்து சைக்கிளில் கட்டிக்கொண்டு குமார் அந்த வழியால் போய்வருவது வழக்கம். அந்த வீதிக்கு அருகில் ஒரு வீட்டில்தான் பாமா அக்கா என்பவருடைய மருமகன் வசித்து வந்தான். அடிக்கடி அந்த வீதியால் செல்லும்போது அந்த வீட்டடியில் அவர் மருமகனை எப்போதாவது பார்த்துச் சிரித்துப் பழக்கமே தவிர, அவர்களோடு அதிக நட்பும் கிடையாது. ஆனால் இந்த வேளையில் அவர்களிடம் உதவி கோரலாம் என்று குமாருக்குத் தோன்றியது. அதைத் தவிரச் செய்யக்கூடியது வேறு எதுவும் தோன்றவில்லை.

அவர்கள் வீட்டை அடைந்தபோது, அவர் கண்டு பழக்கமான பாமா அக்காவின் மருமகன் அங்கு இருக்கவில்லை. என்றாலும் அங்கு நின்றவர்களிடம் தன் நிலைமையை விளக்கினார். "நான் போய் அம்மாவின்ரை அலுவல்களைப் பாக்கவேணும், இந்தாங்கோ இதை வைச்சுக்கொண்டு இப்ப எனக்கு ஒரு சைக்கிள் ஒழுங்கு பண்ணித்தாங்கோ" என்று தனது கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தார். குமாரின் நிலை மிகவும் பரிதாபமாக இருந்தது.

"நாங்கள் சைக்கிளில் உங்களைக் கொண்டுபோய்விட ஒழுங்கு செய்யிறம். நீங்க முதலில் உள்ள வந்து இருங்கோ, தேத்தண்ணி குடிச்சிட்டுப் போகலாம்". என்று அவர்கள் அழைத்தனர். தேநீர் குடிக்கும் நிலையிலா குமார் இருந்தார்! என்றாலும் அவர்களை விட்டால் அந்த இடத்தில் உதவக்கூடியவர்கள் யாருமில்லாமையால் இருந்தார்.

அன்று பின்னேரம் தொடக்கம் உழவு இயந்திரங்களிலும், சைக்கிள், ஓட்டோக்களிலும், அம்புலன்ஸ்களிலும் கொண்டு செல்லப்படும் பிணங்களையும், காயப்பட்டவர்களையும் அந்த வீட்டு வாசலில் நின்று பார்த்துக் கண்ணீர்விட்டுக்கொண்டிருக்கும் அவர்கள், குமாரின் நிலையைக் கண்டு இரங்கியதில் வியப்பில்லை. மனித நேயம் நமக்குள் செத்துவிடவில்லை.

தேநீர் கொடுக்கப்பட்டது. பாமா அக்காவின் மருமகனும் இன்னுமொருவரும் 'சாளி' மோட்டார்ச் சைக்கிளில் அங்குவந்து சேர்ந்தனர். குமாரையும் அவர் வேண்டிநிற்கும் உதவியையும் அவர்கள் மறுக்கவில்லை. அந்த மோட்டார் சைக்கிளிலேயே குமாரை ஏற்றி நவாலிக்குக் கொண்டு செல்ல முடிவெடுத்தனர். அந்த உதவியை அவ்விடத்தில் செய்ய முன்வந்த அவர்கள், குமாரின் கண்களுக்குத் தேவதூதர்கள்போல் தோன்றியதில் வியப்பில்லை.

இவர்கள் நவாலியை வந்தடைந்தபோது இருட்டிவிட்டது. பிணங்கள் பெரும்பாலும் அகற்றப்பட்டுவிட்டன. பின் இணைப்புப் பெட்டி ஒன்றில் பிணங்கள் குவித்து அடுக்கப்பட்ட நிலையில் உழவியந்திரம் ஒன்று புறப்படுவதற்குத் தயார் நிலையில் நின்றது.

அம்மாவின் உடல் வைத்த இடத்திலேயே அப்படியே இருந்தது. மனைவி பிள்ளைகளையோ, சகோதரர்களையொ அங்கு காணவில்லை. நேரம் போய்க்கொண்டிருந்தது. பிணத்தை என்ன செய்வது? அவர்களை எங்கெ தேடுவது? குமாருக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

வந்து அரை மணிநேரமாவது இருக்கும். மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் குமார் மீண்டும் வரக்கூடும் என்று எண்ணியவர்களாக, காத்துக்கொண்டு நின்றார்கள். தாயின் உடலுக்கு ஒரு வழி செய்துவிட்டு, பின்னர் மனைவி பிள்ளைகளைத் தேட வேண்டும். அவர்களை ஏன் வீணாக மறித்துவைத்திருக்க வேண்டும் என்று முடிவெடுத்தவராக, அவர்களுக்கு நன்றி கூறி விடை கொடுத்தார். அப்பொழுது குமார் அவர்களுக்குத் தெரிவித்த நன்றிகள் வெறும் வார்த்தைகள் அல்ல: "என் வாழ்நாள் முழுவதும் உங்கள் உதவிக்கு நன்றிக்கடன் பட்டவன்" என்பதாக அழுகை வெளிவந்தது.

மிகுதி அடுத்த இதழில்....

www.tamilarangam.net



# கண்ணீர் உப்பிட்டு!

— இனியவன்

பாண்டிருப்பில், புலிகளுக்குத் துணைநின்ற தமிழ்க் குடிமக்களில் அவனும் ஒருவன். அது அம்பாறைக் கிராமங்களில் ஒன்று. காலங்காலமாக ஆக்கிரமிப்பாளர்களின் கோரப்பற்களாற் கிழியுண்டு இரத்தத்தால் ஊறிப்போன நிலம்.

வீட்டில் அம்மாவும் அவனும் இன்னும் இரண்டு இளைய சகோதரர்களும் ஊருக்குள் புலிகளுக்கு இரத்த நாளமாக, உணவுக் கால்வாயாக இருந்தார்கள். அம்மா எப்போதும் உணவு சமைத்துக் கொண்டேயிருப்பாள். அவன் எடுத்துச் சென்று கொடுத்துக் கொண்டேயிருப்பான்.

அது எல்லாருக்கும் தெரிந்த "ரகசியம்." தேசத் துரோகிளுக்கும் கூட.

துரோக அமைப்பினர் வீட்டுக்குள் பாய்ந்த பல சந்தர்ப்பங்களில் நல்ல வேளையாக அசம்பாவிதங்களின்றி வீடு தப்பிக் கொண்டது.

ஆனால், அன்றைய காலை அரக்கத்தனமாக இருந்தது.

சமயலறைக்குள் இருந்தவனைக் கொர கொரவென்று முற்றத்துக்கு இழுத்து வந்து, முரட்டுத்தனமாக அவனது நெற்றிப்பொட்டிற் சுட்டுத்தள்ளினார்கள்.

குருதி தெறித்து, தேசத்தை இன்னொரு தடவை நனைத்தது.

பெற்றெடுத்த தாயவளின் கண்களுக்கு முன்னாலேயே தாயகத்தின் மடியில் அந்தப் பிள்ளை செத்து விழுந்தான்.

"மதியத்துள் சடலத்தை அப்புறப்படுத்த வேண்டும்: இல்லையெண்டால் இங்க இன்னொரு ஆளை அப்புறப்படுத்துவோம்." உத்தரவைப் பிறப்பித்து விட்டு அரக்கர்கள் போய்விட்டார்கள்.

அவர்கள் சொன்னபடி செய்யத்தான் வேண்டும். இல்லையேல் தாங்கள் சொன்னபடி அவர்கள் செய்து முடிப்பார்கள்.

எல்லாம் முடிந்தது.

ஊர் கூடுவது முழுமையாகத் தடை செய்யப்பட்டது.

குழந்தைகளோடு அம்மா தனியாகக் குந்திக் கொண்டிருந்தாள். தேம்பித்தேம்பி அழுதாள். பாவம் அவளால் வேறு என்னதான் செய்ய முடியும்? திடீரென......

அவர்கள் திரும்பவும் வந்தார்கள்.

காலையில் அம்மாவின் பிள்ளையைக் கொன்றொழித்து விட்டுப்போனார்களே, அதே முகங்கள்....... அதே துப்பாக்கிகளோடு......

"இரவு 8மணிக்குள்ள எங்களுக்கு 30 பேருக்குச் சாப்பாடு வேணும்: நீ தான் செய்து தாராய்."

என்ன அசுரத்தனமான நடத்தை. அது அவர்களுக்கே உரிய தனித்துவம்.

அம்மா என்ன செய்வாள்? ஆற்றாமையால் அழுதாள். அவர்கள் சொன்ன படியே செய்தாள்.

புலிகளுக்கு உணவு வெந்த அடுப்பில், துரோகிகளுக்கு உணவு சமைக்க வேண்டிய நிலை.

சரியான நேரத்தில் அவர்கள் வந்து எடுத்துச் சென்றார்கள். முகங்களில் "வில்லத்தனமான விசமச் சிரிப்பு."

கலங்கிய விழிகளோடு அம்மா இப்போதும் சொல்கிறாள்.......

அந்தச் சாப்பாட்டிற்கு உப்பு விட்டுச் சமைக்கேல. என்ர கண்ணீரைத்தான் விட்டனான் என்று.

# படையினரின் மனத்தளர்வு

விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பையடுத்துச் சூரியக்கதிர் இராணுவத் தாக்குதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அதற்குக் காரணம், இராணுவம் கைப்பற்றிய பிரதேசங்களைப் பலப்படுத்தாது விட்டால், விடுதலைப் புலிகள் அவற்றினுள் ஊடுருவித் தாக்கிப் படையினருக்குச் சேதமேற்படுத்தி விடுவார்கள் என்று கூறப்பட்டது. ஆனால் உண்மைக் காரணம், விடுதலைப் புலிகளின் உக்கிரத் தாக்குதலால் இராணுவம் மனந்தளர்ந்துபோயுள்ளமையேயாகும். ஆயுதங்களைப் பெருமளவில் குவித்து வைத்தாலும், யாழ்ப்பாணத்திலுள்ள படையினர் மனோபலம் அற்றவர்களாகியே வருகின்றனர்.இதற்குக் காரணமும் உண்டு. ஒரு குறிக்கோளும் இல்லாமல் வெறுமையான யாழ்ப்பாண நகரில் முன்னேறுவது என்பது தேவையற்ற ஒரு செயல் என்பது சாதாரண சிப்பாய்க்கும் தெரியும். தேவையற்ற செயலுக்குத் தங்கள் இன்னுயிரைப் பறிகொடுக்க எந்த முட்டாளும் ஒத்துக் கொள்ளமாட்டான். இதை, விமானப் படை முன்னாள்த் தளபதியான எயர் மார்ஷல் ஹரி குணதிலகா, 'யாழ்ப்பாணம் தமிழர்களின் பாரம்பரிய பூமி அவர்களின் மையப்பகுதி. அங்கு படைமினர் பிரவேசிக்க முன்னரே மக்கள் அகதி முகாம்களுக்குப் போய்விட்டனர். ஆகவே வெறுமையான நகருக்குள் படைமினர் பிரவேசிப்பது அரசின் பிரசன்னத்தைப் பிரதிபலிக்காது' என்று கூறியுள்ளார். இதுதான் யதார்த்தம். இந்நிலையில் இராணுவத்தினர் மனம் தளர்வடைவது ஆச்சரியமான விடயமல்ல.மேலும் படைமி–னர் முன்னேறும் போது விடுதலைப் புலிகள் கைகட்டிக் கொண்டு நிற்பார்கள் என்று அரசு எதிர்பார்க்கிறதா? வீடுகள், கட்டடங்கள் என்பவற்றை இடித்துத் தரை மட்டமாக்கி விட்டு முன்னேற எத்தனிக்கும் படையினரை விடுதலைப் புலிகள் வியூகம் அமைத்து நேருக்கு நேர் மோதி வருகிறார்கள். ஆயிரக்கணக்கான படைமினர், டாங்கிகள், கனரக வாகனங்கள் சகிதம் ஷெல் அடித்துக்கொண்டு முன்னேறி வந்தபோது, விடுதலைப் புலிகளின் கடுமையான உக்கிரத் தாக்குதலுக்குப் படைமினர் முகம்கொடுக்க வேண்டியதாயிற்று. அத்துடன், பெருமளவில் உயிர்ச்சேதமும் ஏற்பட்டதாக யுத்தக்களச் செய்திகள் கூறுகின்றன. ஆனால் அரசு தன்பக்க உயிர், உடமைச் சேதங்களை மூடிமறைத்துச் சிங்கள மக்களின் ஆத்திரத்திலிருந்து தப்பிக் கொள்ளமுனைகிறது. அதற்கிடையில் பெரும் உயிர் அழிவையும் உடமை அழிவுகளையும் செய்து வரும் சிறீலங்கா அரசு, தமிழ் மக்களுக்கு உணவுப் பொருட்கள் உட்பட அத்தியாவசிய பொருட்களை அனுப்பாது, அவர்களைப் பட்டினிச் சாவுக்கு உள்ளாக்க எத்தனிக்கிறது. எனினும் வெளிஉலகை ஏமாற்றுவதற்குப் பொருட்கள் பெருமளவில் வடபகுதிக்கு அனுப்பப்பட்டுள்ள தாகப் பிரச்சாரங்களைச் செய்கிறது. உதாரணத்துக்கு, இலங்கை ஒளிபரப்புச் சேவையில், கார்த்திகை மாதம் வடபகுதிக்குப் பத்தாயிரம் தொன் உணவுப்பொருட்கள் அனுப்பியிருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் உண்மை நிலைப்படியும், யாழ் வட்டாரங்களின் தகவலின்படியும், யாழ் குடாநாட்டிற்கு அம்மாதம் ஆயிரத்து ஐந்நூறு மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளது. அரசு, தான் தாராளமாக உணவுப் பொருட்களை வடபகுதிக்கு அனுப்புவதாகப் பொய்க் கூற்றுக்களைக் கூறிக்கொண்டு ஐ. நா செயலரின் வேண்டுகோளின்படி, நேரடியாக உதவிகளைச் செய்ய முன்வந்த வெளிநாடுகளையும், அரசசார்பற்ற நிறுவனங்களையும், உதவிகள் வழங்குவதானால் அரசாங்கத்தின் ஊடாகத்தான் செய்ய வேண்டு மென்று கூறித்தடை செய்துள்ளது.ஆனால் உண்மை நிலையை அறிந்துள்ள தொண்டரமைப்புக்கள், வடக்கில் அவதியுறும் மக்களுக்கு நேரடியாக நிவாரணப் பொருட்களை அனுப்ப விதித்துள்ள தடையை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தியுள்ளன. யாழ்ப்பாணத்தில் உள்ள தமது அமைப்புக்கள் ஊடாகவே தமது நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவேண்டியிருப்பதால் நிவாரணப் பொருட்களை நேரடியாக எடுத்துச் சென்று விநியோகிக்க அனுமதிக்குமாறு தொண்டர் அமைப்புக்கள் அரசைக் கோரியுள்ளன. அவ்விதம் அனுமதி வழங்கப்படாத பட்சத்தில் சர்வதேச அமைப்புக்கள் மூலமும் ஐ.நா சபை மூலமும் சிறிலங்கா அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க விருப்பதாக இவ்வமைப்புக்கள் கூறுகின்றன. சிங்கள அரசாலும், படையினராலும் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரணப் பணியில் ஈடுபட்டு வரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புக்களைச் சிங்கள அரசும் சிங்களப் பேரினவாதிகளும் கோபக்கண்ணுடன் பார்த்து வருவது தெரிந்ததே. அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்துள்ள பெருவாரியான மக்களின் நிலைபரம் மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்கு வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புக்கள் முதலிற் பெந்தோட்டைமிலுள்ள ஹோட்டல் ஒன்றிற் கூடுவதற்கு முற்பட்டபோது, சிங்கள இனவாதக் கும்பல் ஒன்றால் அக் கூட்டம் நடைபெறாது நிறுத்தப்பட்டது. பின்னர் அக்கூட்டத்தை இரத்மலானைத் தொழிலாளர் கட்டடத்தில் நடத்த எத்தனித்தபோது, பொலிசார் அவசர காலச் சட்டத்தைக் கொண்டு தடை செய்துள்ளனர். ஆகவே சிங்களப் பேரினவாத அரசு, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரணத்தைத் தானும் வழங்காது பிறர் வழங்குவதையும் தடைசெய்கிறது.ஆனால் சர்வதேச அமைப்புகளுடன் நியாயமற்ற முறையில் முரண்படுவது, பல துர்ப்பாக்கியமான பின் விளைவுகளை உருவாக்கும் என்பதை அரசு தனது மதி கெட்ட நிலையில் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

# இடப்பெயர்ச்சி வரிசையில் தமிழீழ மக்களின் இடப்பெயர்வு

வரலாற்றில் மக்கள் இடப்பெயர்ச்சிகள் பல நடந்துள்ளன. யூதர்களின் இடப்பெயர்ச்சி, யூதர்களுக்குப் பயந்த அரேபியர் களின் இடப்பெயர்ச்சி போன்றவையை நாம் அறிவோம். அந்த வகையில் சீனாவின் பெருந்தலைவர் மா ஓ சேதுங் அவர்களின் தலைமையில் நடந்த நீண்ட படைநடப்பும் இதில் அடங்கும். மா ஓ சேதுங்கின் நீண்ட படை நடப்பு 1934 இல் நடந்தது. இது அவருடைய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அதற் கெதிரான கோமின்டாங் கட்சிக்கும் இடையேயான முரண்பாடு களின் காரணமாக நடத்தப்பட்டது. 1931ல் மா ஓ சேதுங் சீனா விலுள்ள கியாங்கி மாகாணத்தில் சீன சோசலிசக் குடியரசை உருவாக்கியிருந்தார். மா ஓ வின் இத் தளப் பிரதேசத்துக்கு எதிராகச் சியாங்கைஷேக்கின் விடாப்பிடியான மூன்று வருட காலக் கடும் இராணுவ நடவடிக்கையின் காரணமாகக் கம்யூனிஸ்ட்டுக்களின் நிலை பாதிக்கப்பட்டது. இதன் காரணமாகத்தான், மா ஓ சேதுங் கியாங்கி பிரதேசத்தைக் கைவிட்டு, 8000 மைல் தூர நீண்ட படை நடப்பை மேற்கொண்டார். படைநடப்பின்போது அவருடன் அப்பிரதேச மக்களும் இயக்க ஊறுப்பினர்களும் அவரைப் பின்தொடர்ந்து சென்றனர். அவர்கள் யெனான் பிரதேசத்தை அடைந்ததும், நீண்ட படை நடப்பில் எஞ்சியிருந்தோர், அங்கு மிகவும் பலம் வாய்ந்த பாதுகாப்புப் பிரதேசமென்றை உருவாக்கினார்கள். அங்கிருந்து கொண்டு சியாங்கை ஷேக்கின் கோமின்ராங்கிற்கு எதிராகப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினார்கள். பின்னர் யப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிராக ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு யப்பானியர் தோற்கடிக்கப் பட்டமையும் அதன் பின்னர் சியாங்கை ஷேக்கின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைக்கு எதிராக, மீண்டும் போராட்டத்தைத் தொடர்ந்து வெற்றிக்கு மேல் வெற்றியீட்டி 1948 இல் பீக்கிங் மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஒரு கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை மா ஓ சேதுங் உருவாக்கியதும் வரலாறு. நீண்ட படை நடப்பின் போது, மா ஓ சேதுங்கின் பின்னால் மக்களும் படையினரும் சேர்ந்து சென்றதும் 8000 மைல்கள் செங்குத்தான மலைகள், பனிப் பிரதேசங்கள், பயங்கர ஆறுகள் போன்றவற்றைக் கடந்து கால்நடையாகவே சென்றமை இன்றும் வியப்புக்குரியதாகும். சந்தர்ப்பச் சூழ்நிலை முறையாக அமையாவிடின், பின்வாங்கிச் செல்லுதலும் ஒரு யுத்த மூலோபாயமாகும். மா ஓ அவர்கள் தனது படைகளையும் மக்களையும் வீண் அழிவுகளுக்கு உட்படுத்தாது பாதுகாப்பதற்காகத்தான், இந்த நீண்ட படை நடப்பை நடத்தினார். இதிலுள்ள விசேட அம்சம் என்னவென்றால், மா ஓவினது கம்யூனிஸ்ட் கட்சியினது விசுவாசிகளும் இப் படை நடப்பில் அவரைப் பின் தொடர்ந்து சென்றமையாகும். இப்படைநடப்பிலிருந்து இன்னொரு பாடத்தையும் நாம் கற்றுக் கொள்ளலாம். எதிரி பலமான நிலைமிலுள்ள போது சற்று விலகித் தேவையான தயாரிப்புக்களைச் செய்து கொண்டு, மீண்டும் எதிரியை முழு மூச்சுடன் எதிர்த்து வெற்றி காணலாம் என்பதாகும். மா ஓவின் பின்னால் மக்கள் சென்றமை இன்னொரு விடயத்தையும் ஞாபகப்படுத்துகிறது. கைகேகியின் வற்புறுத்தலின் பேரில், தசரதன் இராமனைப் 14 வருடம் காடு செல்லுமாறு பணித்தார். அவர் சொற்படி இராமனும் நாட்டைவிட்டுக் காடேகினான். அவன் அவ்விதம் செல்லும் போது அயோத்தி நாட்டு மக்களும் அவன் பின்னால் சென்றார்களாம். வசதியுள்ள அயோத்தி மாநகரில் வாழ்வதை விட்டு, ஏன் காடு செல்கிறீர்கள் என்று கேட்ட போது அவர்கள், 'இராமன் இருக்கும் இடந்தான் எங்களுக்கு அயோத்தி என்றார்களாம். மா ஓவின் நீண்ட படை நடப்பு மூலம் நடத்தப்பட்ட இடப்பெயர்ச்சிக்கும் அவரை மக்கள் பின் தொடர்ந்தமைக்கும், அயோத்தி மக்கள் இராமன் இருக்கும் இடந்தான் காடாயிருந்தாலும் தங்களுக்கு அயோத்தி என்று கூறியதற்கும் அண்மையில் யாழ் நகரப் பகுதி மக்களும், வலிகாமப்பகுதி மக்களும் நடத்திய இடப்பெயர்ச்சிக்கும் சம்பந்தம் இருப்பதை ஊகித்து அறிந்து கொள்ளலாம்.

www.tamilarangam.net



# வட்டம் விரிகிறது

-வல்வை ந. அனந்தராஜ்

அலை கடலைக் கிழித்தபடி 'ஹபரண' கப்பல் விரைந்து கொண்டிருக்கிறது. ஓ.... அது யாழ்ப்பாண மக்களைப் பட்டினிச் சாவில் இருந்து தப்ப வைப்பதற்கான மாவை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறை நோக்கி வருகின்றது. சிறிலங்கா அரசு, யாழ்ப்பாணம் மீதான முழுமையான பொருளாதாரத் தடையை விதித்துவிட்டு யாழ்ப்பாணம் இன்னும் சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றது என்பதைக் காட்ட, இடைமிடையே எப்பொழுதாவது இருந்துவிட்டுக் கப்பல்களைப் பருத்தித்துறைக்கு வரவிடும்.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக வெறிச்சோடிப்போய் இருந்த பருத்தித்துறைத் துறைமுகம், அன்று கப்பலின் வரவை அறிந்ததும் களைகட்டத் தொடங்கிவிட்டது.

"எங்கடை கப்பல் இவைக்கு வராவிட்டால் பட்டினி கிடந்து தான் சாவினம்..... அதுக்குள்ளை இவைக்கு ஒரு தமிழீழம்...."

அந்த 'ஹபரண' கப்பலின் சிப்பந்தியாக வேலை செய்யும் சிங்களத் தொழிலாளியான அப்புஹாமியின் மனம் நகைத்துக் கொண்டிருந்தது.

தமிழர்களையும், அவர்களது சொத்துக்களையும் அழித்து, ஒழிப்பதற்கும் தமிழர் பண்பாட்டையும், பாரம்பரிய நிலத்தையும் வேரோடு பிடுங்கி எறிவதற்குமென்றே கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் சிங்களத் தேசத்தின் ஒட்டுமொத்த வடிவமாக அப்புஹாமி கப்பலின் கீழ்த்தளத்தில் நின்றபடியே பருத்தித்துறை இறங்குதுறையின் கரையையே உற்றுப்பார்த்துக் கொண்டு நின்றான்.....

அந்த அழகான கடற்கரை..... இயற்கை எழில் நிறைந்து கண்ணைக் கவர்ந்தது! அந்தக் கரையோரம் முழுக்கக் குண்டு வீசித் தகர்த்தும், எரிந்தும் சின்னாபின்னப் படுத்தப்பட்டுமுள்ள வீடுகளும் அந்த வீதிகளில் அரச பயங்கரவாதத்தின் மத்தியிலும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் யாழ்ப்பாண மக்களின் கம்பீரத்தையும் பார்த்து ரசித்துச் சிரித்தான்.

1995 ஒக்டோபர் 17ம் திகதியில் இருந்து சிறிலங்கா அரசின் மிகப் பெரிய இராணுவ நடவடிக்கையாகப் பிரகடனப்படுத்திவரும் "சூரியக்கதிர்" தாக்குதலுக்குப் பின்னர், இப்பொழுதுதான் முதற்தடவையாக அவன் யாழ்ப்பாணத்தைப் பார்க்கிறான்.

இதற்கு முன்னரும் பல தடவைகள் இப்படி வந்து போயிருக்கிறான். ஆனால் இந்தமுறை மட்டும் ஏனோ தெரியவில்லை அவனுடைய உள்ளம் குதூகலித்துக் கொண்டிருந்தது.

சிறிலங்கா அரசின் பிரச்சாரங்களும், புளுகுகளும் அவனுக்கு ஏதோ ஒரு இனம்புரியாத உற்சாகத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. முன்னரென்றால், அங்கே நிற்கிற எல்லோரையும் அவன் விடுதலைப் புலிகளாகப் பார்த்து, அவனுக்குள்ளாகவே ஒரு பயத்தை வளர்த்துக் கொண்டிருந்தான்...ஆம்! தமிழருக்கு எதிராக ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைக்கவே கூட அவனுடல் நடுங்கத் தொடங்கும்....! அந்த அளவுக்கு ஆற்றலும், தனித்துவமும் உள்ள ஒரு தலைவனின் கீழ்த் திட்டமிட்ட முறையிலான ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவ அமைப்பாகச் செயல்படுகின்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது, அவனையறியாமலேயே ஒரு அச்சம் வளர்ந்து வந்தது!

இன்று விடுதலைப் புலிகள் பலவீனப்படுத்தப் பட்டுள்ளதாகவும், யாழ்ப்பாணத்தை இன்னும் ஒரு சில மணித்தியாலம் அல்லது நாட்களுக்குள் பிடித்துச் சிங்களக் கொடியை ஏற்றப்போவதாகவும் சூழுரைத்துவந்த சனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர், தளபதிகள் கொடுத்து வந்த நம்பிக்கைகள் அவனுக்கு ஒரு பலத்தை ஏற்படுத்தி விட்டன......

"யாழ்ப்பாணத்தில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டுச் சிவில் நிர்வாகம் ஏற்படுத்த நடவடிக்கை"

"யாழ்ப்பாணத்தில் பள்ளிக்கூட மாணவர்களுக்கு இலவச உணவுகள் வழங்கப்படுகின்றன...."

"யாழ்ப்பாணத்தில் நகர மையப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மூன்று வழிகளே உள்ளன. ஒன்றில் அவர்கள் போராடிச் சாகவேண்டும் அல்லது சயனைட் அருந்தித் தற்கொலை புரியவேண்டும் அல்லது சரணடைய வேண்டும்."

இவை போன்ற செய்திகளை 'லங்காபுவத்' வானொலி மூலம் தினமும் ஒலிபரப்பும் பொய்களைப் பல தடவைகள் கேட்டுப் புளகாங்கிதம் அடைந்த அந்தச் சிங்களச் சிப்பந்தி அப்புஹாமியின் மனம், அவற்றை நம்பிக் குதூகலித்துக் கொண்டிருந்தது!

"....! பிறகென்ன? இனிமேல் முந்தி மாதிரி நாங்களும் யாழ்ப்பாணத்துக்கு வரலாம்......இருக்கலாம்...இனி இது எங்கடை நாடுதானே...."

அவனது அந்தராத்மா யாழ்ப்பாண அழகைச் சுவைக்கத் துடித்தது.

"ஹஜு... ஹஜு...ஹஜு..."

அந்தக் கப்பலின் 'சைரன்' ஒலி காதைப் பிளந்தது. பருத்தித்துறைத் துறைமுகத்தைக் கப்பல் நெருங்கி விட்டது... கப்பலின் கப்டன், நங்கூரத்தைப் போடுவதற்கான உத்தரவை வழங்கிக்கொண்டிருந்தான்...

என்ன மச்சான்...அப்புஹாமி... கரையையே பார்த்துக்கொண்டு கற்பனையில் மிதக்கிறாயே....?

அவனுடன் கூடப் பணிபுரியும் சிப்பந்தியான பியசேனா அவனுடைய தோளைத் தட்டியதும் திடுக்கிட்டுத் திரும்பிய அப்புஹாமி, பியசேனாவைக் கண்டதும் உதட்டுக்குள் சிரித்துக் கண்ணைச் சிமிட்டினான்......

ஆம்! அந்தச் சிரிப்பிலே ஓர் அர்த்தம் இருந்தது!

"மச்சான் எங்கடை ஆமி இன்னும் இரண்டு நாளிலை யாழ்ப்பாணத்தைப் பிடிச்சிடும்...! பிறகென்ன?...கொட்டியா எல்லாம் அழிந்துபோகும்..இனி எங்கடை இராச்சியம்தானே?"

அப்புஹாமி விளக்கிக் கூறியபோதுதான் பியசேனாவுக்கு அவனுடைய அர்த்தமுள்ள சிரிப்பின் பொருள் விளங்கியது. "ஓம்...மச்சான்!..பிரபாகரன்ரை பிறந்தநாளுக்கு முன்னர் யாழ்ப்பாணக் கோட்டையில எங்கடை சிங்களக் கொடியை ஏற்றுவோம் என்று அனுருத்த ரத்வத்தவும் கூறியிருக்கிறாரே"

தமிழீழத்தைக் கைப்பற்றிச் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி, தமிழ்க் கலாச்சாரத்தை அழித்துச் சிங்களமயமாக்கி விடவேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்கின்ற சிங்கள தேசம், மெல்ல மெல்ல யாழ்ப்பாணத்தை எட்டிப்பார்க்கத் தொடங்குவது அவனுடைய குதூகலத்தினூடாகத் தெரிந்தது.

"சரி...மச்சான்!...அங்கை பார்சலைக் கொண்டு வாறாங்கள்.... சாமான்களை இறக்கி அனுப்புகிற நேரம் வந்துட்டுது...பிறகு சந்திப்பம்..."

அப்புஹாமி அவனிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு அப்பாற் சென்றான்....

கப்பலிலிருந்து மாமூடைகளை இறக்கும் பணியில் நூற்றுக் கணக்கான தமிழ்த் தொழிலாளர்கள், சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர்.

பல மாதங்களாகக் கப்பல் வராததால் 'பறியல்' வேலைக்கான தொழிலாளர்கள் வேலையற்று இருந்ததாலோ என்னவோ மிகவும் உற்சாகமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

இடைமிடையே கப்பலின் தளத்திற்குச் சென்று வரும் தொழிலாளர்களில் ஒருவனாகச் சண்முகசுந்தரமும் இருந்தான்.

"எங்கடை ஊரென்ன வடிவாக இருக்குது...?

கப்பலின் கீழ்த்தளத்தில் நின்றபடியே அந்தக் கிராம எழிலையே பார்த்து அதிசயித்த சண்முகசுந்தரத்தின் இதயத்தின் மூலையில் ஒரு நெருடல் தோன்றத்தான் செய்தது...

சிங்கள அரச படைகளினால் மேற்கொள்ளப்படும் தமிழினப் படுகொலைகளும், உடைமைகள் அழிப்பும், அழிந்த வீடுகளும் அவனை அந்த நேரம் நிலை தளம்பவைத்தது?

"என்ன பார்க்கிறதுங்... மிச்சங் நல்லாயிருக்கா....?" கப்பலின் தளத்தில் நின்று கரையைப் பார்த்துக் கொண்டு நின்ற சண்முகசுந்தரத்தை நோக்கிக் கொச்சைத் தமிழிற் கூறியபடி அப்புகாமி வந்தான்....

"என்ன....!"

"ஆங்... நீங்.... இந்த ஊர் தானே!... இங்கை தங்கச்சி இருக்கா...?" இப்படி ஒரு கேள்வியை அவன், திடுதிப்பென்று கேட்பான் என்று சண்முகசுந்தரம் எதிர்பார்க்கவில்லை.....

"என்ன கேட்கிறாய் எனக்கு விளங்கேல்லை...?"

அவனுக்கு அருகில் மிக நெருக்கமாக வந்து நின்ற சண்முகசுந்தரம் சிறிது அழுத்தமாகவே கேட்டான். "யாழ்ப்பாணத்திலை குட்டி கிடைக்குமா?"

அப்புஹாமி சிறிதும் கூட அச்சமில்லாது அவனைப் பார்த்துத் திரும்பவும் ஒரு படி மேலே சென்று விளக்கமாகக் கேட்டான். அப்புஹாமியின் காரசாரமான அந்தக் குரல் சண்முகசுந்தரத்தின் இதயத்தை ஈட்டியால் பிளப்பது போல இருந்தது.

ஓ! சந்திரிகாவும், மாமன் ரத்வத்தவும், கதிர்காமரும் பிரச்சாரம் செய்து வருவது போல விடுதலைப் புலிகள் ஒழிக்கப்பட்டு விட்டார்கள், யாழ்ப்பாணம் விடுவிக்கப்பட்டுச் சிங்கள அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு விட்டது என்று கூறுவதை அவனும் நம்பி விட்டான். இனி யாழ்ப்பாணம் எங்கும் சிங்கள இராணுவமே நிற்கும்..... அதற்குப் பின் அவர்களின் உதவியுடன் எதையும் செய்ய முடியும் எனத் துடிக்கும் சிங்களக் காடையர்களில் ஒருவனாக அப்புஹாமி அங்கே நின்றான்.

பங்காளதேசத்தில் இந்திய இராணுவம், தமிழீழத்தில் இந்திய இராணுவம், வியட்நாமில் அமெரிக்க இராணுவம் செய்து முடித்த பாலியல் வன்முறைகளையும், இன ஒழிப்பையும் நினைத்துப் பார்த்த சண்முகசுந்தரத்தின் இரத்தம் ஆத்திரத்தால் கொதித்துக் கொண்டு வந்தது.

"டேய்!... ராஸ்கல்!... பொறுக்கிச் சிங்கள நாயே!... என்னடா கேட்கிறாய்?

அவன் புலிபோலப் பாய்ந்து சென்று, அப்புகாமியின் பிடரியில் ஓங்கிக் குத்திக் கீழே விழுத்தினான்...அவனுடைய கழுத்தில் காலை வைத்து நெருக்கியபடி "பொறுக்கிச் சிங்கள நாயே?" உனக்கும் உன்ரை சிங்களப்படைக்கும் ஒரு நினைப்போடா. இது விடுதலைப் புலிகள் வாழும் தேசமடா. உன்னைக் குத்திக் குதறிக் குடலை எடுத்து மாலையாய் போடுவன்... ஆனால் உன்ர சிங்களச் சனாதிபதி சந்திரிகா இதை வைத்தே பொய்ப்பிரச்சாரம் செய்வா என்றதனால் விடுறனடா....ராஸ்கல்.. இல்லையென்றால்...."

**பல்லை நெருடியபடி சண்முகசுந்தரம் மீண்டும் அவனுடைய தலையை காலால் உருட்டி உதைத்தான் ''எடேய்....! குரும்பை வெட்டி நாயே....! எங்கட பொம்பிளையள் ஏ.கே. யோடையும் ஆர். பி. ஜி. யோடையும் களத்திலை நிக்குங்கள் வந்து பாரடா"**

பல்லைநெருடியபடி சண்முகசுந்தரம் மீண்டும் அவனுடைய தலையை காலால் உருட்டி உதைத்தான் "எடேய்....!குரும்பை வெட்டி நாயே....! எங்கட பொம்பிளையள் ஏ.கே. யோடையும் ஆர். பீ. ஜீ. யோடையும் களத்திலை நிக்குங்கள் வந்து பாரடா"

அவனுடைய கோபாவேசம் அடங்கவில்லை...உதடுகள் ஆத்திரத்தாற் துடித்துக் கொண்டிருந்ததால்! தசைகள் முறுக்கேறி உரமேறிப்போன, கால்களால் திரும்பவும் அவனை உதைத்துத் தள்ளிவிட்டுக் கப்பலில் இருந்து குதித்து நீந்தியபடியே கரை சேர்ந்தான்..."சே.... பொறுக்கிச் சிங்கள நாய்கள் கூட எங்களைக் கேவலமாக்கத் தயாராகுதுகள். இதுக்கு மேலேயும் நாங்கள் மரக்கட்டையப்போல கையைக் கட்டிக்கொண்டு அடிமையாய் வாழவோ...?"

கரையை அடைந்த சண்முகசுந்தரம் அந்த இறங்கு துறையை விட்டு விறுவிறு என்று வெளியேறிக் கொண்டிருந்தான்.

"டேய்.. சண்முகம்! எங்கையடா போறாய்?.... இண்டைக்கு நல்ல பறியல் கிடக்கு...... அதை விட்டுட்டு...." அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்ற அவனுடைய கூட்டுத் தொழிலாளி விநாயகம் கத்திக் கொண்டிருந்தான்.

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## செங்கதிரும் வெள்ளி நிலவும் உள்ளவரை இவர் பேரும் நிலவும்

– பண்டிதர் வீரபத்திரன்

பூமணம் அள்ளி வந்த தென்றல் காற்று -எங்கள்
போர் மறவர் கல்லறையில் மெல்ல வீசு
மாஞ்சோலை வாழுகின்ற செல்லக்குயில்காள் - இந்த
மாமறவர் புகழினைச் சொல்லித் திரிவிர்

காலமெல்லாம் ஒலிக்கின்ற நீலக்கடலே -இவர்
கால்களிலே முத்தமிட்டுப் பாடி மகிழே
மேலோடி வெண்ணிலவை முட்டும் மலையே - தமிழ்
மானமது காத்தவரைத் தொட்டுப் பணியே

இளமைதன் இன்பங்கள் முற்றும் துறந்தார் - பெரும்
ஈகையும் மானமும் பெற்று நிமிர்ந்தார்
இனம்வாழ முன்வந்து தம்மைக் கொடுத்தார் - ஈழம்
மலர்கின்ற கனவோடு கல்லிற் படுத்தார்

வன்சமரில் வீழ்ந்து பட்டார்: குண்டாய் வெடித்தார்-தன்
மானத்தை நினைந்துமே நஞ்சைக் குடித்தார்
என்னவிலை கொடுத்திவர் ஈழம் மீட்டார் -அந்த
ஈழத்தில் வாழுதற்கும் மீள மாட்டார்

## நெகிழத் தயங்குவதேன் ? இறைவா ?

செ. நாகேந்திரம்

சூரியக்கதிர் ராணுவ அசைவால்
சோர்ந்திடா யாழ் மக்களெல்லம்
பாரிய ஏவுகுண்டுகள் சொரிந்திட
பரிதவித் தோடினர் பாவம்
சீரிய வாழ்க்கைச் சிறப்புக்க ளெல்லாம்
சுருண்டே மடிய விட்டு
நேரிய நீண்ட வீதியிலே யிறைவா
நடந்து நலிந்தேன் சோரவைத்தாய் ?

சமயத்தைப் பணிந்து சாதியைத்துறந்து
சரிநிகர் சாற்றிய மக்கள்
இமயத்தின் தமிழால் இணைபட்டு வாழ்ந்தனர்
இயற்கையின் மடியிலன்றோ!
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்திட்ட மக்களை
வல்ல கொடும்பசிக் காளாக்கி
ஐயத்திலேன்தான் அலையவைத்தா யிறைவா
அஞ்சியஞ்சியேன் துஞ்சவைத்தாய் ?

கூவிய கோழிக்குலங்க ளெல்லாம்
கூவாது மடிந்தன அங்கே
காவிய பால்மடிப் பசுக்க ளெல்லாம்
கதறித் துடித்தன அங்கே
தாவிய ஆட்டின மந்தை யெல்லாம்
தளர்ந்து தவித்தன அங்கே
ஏவிய பணிசெய் ஞமலிகளெல்லாம்
ஏங்கி மடிந்தன அங்கே.

உலர்ந்த நாவோம் உவகையுடன்
உயர்ந்த விரதங்கள் எழிலாற்றி
புலர்ந்த பொழுதோடும் புன்னகைத்து
புனிதத் தலங்களைத் தரிசித்து உன்
அலர்ந்த திருவடி போற்றும் அடியார்க்கு
அவலக்குரலையேன் கொடுக்கின்றாயிறைவா
மலர்ந்த மணம்மேவும் யாழ் நிலத்தையேன்
மடிந்தமணமாக்கிப் பார்க்கின்றாய் ?

கொஞ்சிய தமிழை நெஞ்சிலே தாங்கி
கோலங்கள் மாறக் குடிபெயர்ந்து
மஞ்சத்திலுன்னை ஏற்றிய யாழ்மக்கள்
மாநிலம் விட்டு அலைகின்றார்
பஞ்சத்தைக் காணாத பேரின்ப மக்கள்
பட்டினியாலே மடிகின்றார்
நஞ்சுண்டகண்டனே நல்லருளல்லாவே
நேசத்திறைமகனே நெகிழத்தயங்குவதேன் ?

# கவிதைக் களம்

## தம்பி, வா எனக்குன் வாழ்க்கையைச் சொல்

தம்பி, வா!
எனக்குன் வாழ்க்கையைச் சொல்!
உன் உடலில் எதிரி பதித்த
போராட்ட சின்னங்களைக் காட்டு!
வா,
"அவர்களின் உடைமையான
என் மண்ணைக் காத்ததற்காய்
அவர்கள் நெரித்த கைகள் இதோ"
என்று சொல்.
"ஆக்கிரமித்தோர் முன்
குனிய மறுத்ததால்
வதையுண்ட உடல் இதோ"
"எனது மக்களின் விடுதலையை
இசைக்கத் துணிந்ததால்
புண்ணான வாய் இதோ"
தம்பி, வா!
எனக்குன் கதையைச் சொல்.
நீயும்,
உன் தந்தையரும், முன்னோரும்
காதலுக்காய்ப் படைக்கப்பட்ட
நிழலற்ற இரவுகளில்
நிசப்தமாய்க் கண்ட
விடுதலைக் கனவுகளைச் சொல்
வா,
அந்தக் கனவுகள்
யுத்தமாய்.....
வீரர்களின் ஜனனமாய்.....
மண்ணின் மீட்சியாய்....
மைந்தரைப் போராட அனுப்ப
அஞ்சாத அன்னையராய்....
ஆகின என்று சொல்.
வா தம்பி
இதையெல்லாம் எனக்குச் சொல்.
பின்னர்தான்
குழந்தைகளும் அறியும் எளிய
சொற்களாய்
காற்றென்ன
ஒவ்வொரு வீட்டினுள்ளும்
புகுந்து
நம் மக்களது ஆன்மாக்கள்மேல்
சுடு செந்தணலென வீழும்
சொற்களால் வடிப்பேன்.
நமது மண்ணில்
துப்பாக்கிக் குண்டுகளும் மலரத்
தொடங்கும்.

–ஷோர்ஜி றெபலோ
(மொசாம்பிக் நாட்டவர்)

## உதிராதே விரைவில் உதயமெழும்

– ஜெயங்கொண்டான்

நேற்று நிகழ்ந்த நெடுந்துயரம் மனவீட்டைக்
காட்டாறாய் மோதிக் கலைக்கிறது.
வடதிசையைச் சூரியக் கதிர் சூழ்ந்து சுடுகிறது.
கண்முன்னே சீர்வரிசை எல்லாம் சிதைகிறது.
வீதியொன்றால் 'கால்நடையாய்' அன்று கடல் திரண்ட
மாதிரியாய் நாவற்குழிப் பாலம் நசியப் புலம்பெயர்ந்து
பாவச்சனம் ஓடிப் பதறியதும், பொரித்தகுஞ்சு
தாய்முலையிற் சாவைச் சுவைத்ததுவும்,
போலியோவால் கால்வழங்காச் சீவன் கையணைப்பில்
வந்ததுவும், கூட்டை விட்டோடும் குருவி
சிறகுதிர்ந்த பூட்டன் பறவையுடன் பொடிநடையாய்
புலோலிவரை நாட்கணக்காய் ஊர்ந்து நாரி
முறிந்ததுவும்,
ஆறுதலாய் வீட்டில் அடைவைத்துக் காத்திருக்கும்
பேறுகாலப் பூவும்,
பிள்ளைபெற்று 'இளங்கொடியை'
அகற்றி நடந்த அனிச்சம் பூ மகளும்,
வரும்வழியில் பிஞ்சீன்ற மல்லிகையும், தார்த்தணலில்
பாதம் பொசுங்கப் பளைதாண்டிப் போனதுவும்,
கண்முன்னே பாசம் கரைந்ததுவும்,
தந்தைதாய்க்கு
மண்போட்டவாறே மக்களிடம் பேர்ந்ததுவும்
வேர்வியர்க்கச் சேர்த்த
வீடு, கட்டில், மெத்தைவிட்டு
பாரம் சுமந்து பசிகிடந்து சைக்கிளிலே
கையில் கிடந்த கனவுகளே தஞ்சமென்று
கைதடியைத் தாண்டிச்
கதியிழந்தோர் சென்றதுவும்,
தேர்வீதி தோற்கத் திரண்டசனம், வன்னிவரை
ஆர்தஞ்சம் என்று அலைந்ததுவும்,
சோறின்றிப்பஞ்சு, பசித்தீயில் பற்றியதும்,
சொந்தமென்று
தங்கவந்த வீட்டுச் சனநெரிவில் தவமிருந்து
'ஒண்டுக்கும், ரெண்டுக்கும்',
உயிர்நொந்து வாடிச்சனம்
துடித்ததுவும், வெந்து துவண்டதுவும்
இராப்பகலாய்
வெடித்தழுது வாழ்வை வெறித்ததுவும்,
நெஞ்சைவிட்டு வடிந்திடுமா? இந்த வரலாற்றிடம்
பேர்வின்
சரிதம் தமிழேட்டில் அழிந்திடுமா?
அழியாது கற்பனைக்குள் காணாச் சோதனையும்
வேதனையும்
சொற்களுக்குள் சிக்கா
சுமைசுமந்த் நோ, வலியும்
சொப்பனத்திலும் நினையாச் சோகமதும்,
தமிழ்க்குடிகள்
எல்லாரும் தோளில் இடி ஏற்று விடிவின்விலை
என்றால் எது என்று தேறியதும், இம்மண்ணில்
வீணாகிப் போகாது விதிமாற்றும்!
நேற்றுவரை
காணாத சொர்க்கத்தைக் கையில் தரும்.
பெய்தகண்ணீர் தர்மத்தைக் காட்டும்.
சா அணைத்து நாம் தாங்கும்,
அழுத்தங்கள், மண்ணில் அமிர்தம் கடைந்தருளி
முழுவிடிவை எமக்கு முன்மொழியும்.
இன்று பட்ட பாடெல்லாம்
நாளை பலனளிக்கும் வீடிழந்து
ஐந்து லட்சம் வாய்கள் அழுதஒலி மிகவிரைவில்
சொந்த நிலம் சேரத்
துணிவுக்குச் சுருதிதரும்.
வேர்வையுடன், சிந்தும் விலை இரத்தம்
எம்தமிழின்
நேர்மைக்கு நல்ல நிலைகொடுக்கும்.
நிமிருங்கள்!
அச்சமில்லை, மீண்டும் அனைத்தும் திரும்பிவரல்
நிச்சயமாய் நீதி நீறாது மிகவிரைவில்
துயருற்றோர் மூச்சே
சூழும் பகை எரிக்க
'உயிர் வெடியாய்' மாறும்,உதயம் விரைவில் எழும்!

www.tamilarangam.net



தமிழர் புனர்வாழ்வுக்கழக யேர்மனிக் கிளை நடாத்தும்

# விடுதலைக் கானம்பாடி 1996

## சிறந்த பாடகர் தெரிவுப்போட்டி

## பங்குபற்றுவோருக்கான விதிகள்

1. இதுவரை வெளியாகியுள்ள தமிழீழ விடுதலைப்பாடற் தொகுப்புக்களில் இருந்து மாத்திரமே பாடல்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.
2. தங்கள் தெரிவுக்காக இரண்டு பாடல்கள் அனுமதிக்கப்படும்.
3. இணைகுரல் பாடற்போட்டி, தனிக்குரல் பாடற் போட்டி என இருவகைப் போட்டிகள் நடாத்தப்படும்.
4. தனிக்குரல் பாடற்போட்டி 14 வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு எனவும், 14 வயதிற்கு உட்பட்டோர் கீழ்ப்பிரிவு எனவும் இரு பிரிவுகளாகப் பிரித்து நடாத்தப்படும்.
   மேற்பிரிவு: 31.12.82 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்.
   கீழ்ப்பிரிவு: 01.01.83 அன்றும் அதற்கு பின்னரும் பிறந்தவர்கள்.
5. இணைகுரல் பாடற் போட்டிக்கு வயதெல்லை இல்லை.
6. முதற் சுற்றுப் போட்டியில் தெரிவான பாடகர்கள் இறுதிப் போட்டிக்கு அழைக்கப்படுவர்.
7. விண்ணப்பக் கட்டணமாக 75 DM செலுத்தப்பட வேண்டும்.
   E.Anandarajah, Konto: 10890085, BLZ: 29050101, Sparkasse Bremen.
   என்னும் காப்பக இலக்கத்திற்கு பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டுப்பிரதி ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
8. விண்ணப்பஞ் செய்வதற்கான இறுதித் திகதி: 01.06.1996
9. விண்ணப்பஞ் செய்ய வேண்டிய முகவரி:

E.Anandarajah
Tamilische Rehabilitations Organisation
Hompesch Str. 16, 41189 Monchengladbach

**ஆர்வமுள்ள அனைவரையும் அழைக்கின்றோம்**

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், யேர்மனிக்கிளை.

### விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரின் முழுப்பெயர்:..........
2. பிறந்த திகதி:..........
3. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயர்:..........
4. முகவரி (யேர்மன் மொழியில்):..........
5. தொலைபேசி இலக்கம்:..........
6. பங்கு பற்றும் போட்டி: தனிக்குரல் பாடற்போட்டி / இணைகுரல் பாடற்போட்டி.
7. தனிக்குரல் பாடற்போட்டியாயின் பங்கு பற்றும் பிரிவு: மேற்பிரிவு / கீழ்ப்பிரிவு
   பாடவிரும்பும் பாடலின் பெயர்: 1. ..........
   பாடல் இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு / ஒலிஇழைப்பேழையின் பெயர் :..........
   பாடவிரும்பும் பாடலின் பெயர்: 2 ..........
   பாடல் இடம் பெற்றுள்ள ஒலித்தட்டு / ஒலிஇழைப்பேழையின் பெயர்:..........
8. இணைக்குரல் பாடற் போட்டியாயின் இணைந்து பாடுபவர் பெயர்:..........
   முகவரி :..........
   பாடவிரும்பும் பாடலின் பெயர்: 1. ..........
   பாடல் இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு / ஒலிஇழைப்பேழையின் பெயர் :..........
   பாடவிரும்பும் பாடலின் பெயர்: 2 ..........
   பாடல் இடம் பெற்றுள்ள ஒலித்தட்டு / ஒலிஇழைப்பேழையின் பெயர்:..........

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது எனவும் அதனை முழுமனதுடன் ஏற்பேனென்றும் இத்தால் உறுதிசெய்கின்றேன்.

1. .......... ..........

2. .......... .......... ..........

பாதுகாவலரின் ஒப்பம்    விண்ணப்பதாரின் ஒப்பம்    திகதி

தமிழர்புனர்வாழ்வுக் கழகம், யேர்மனிக்கிளை

விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழக யேர்மனிக்கிளை நடாத்தும்

# அன்னை பூபதி நினைவுப் பேச்சுப் போட்டி 1996

விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழக யேர்மனிக்கிளை வருடாவருடம் நடாத்திவரும் அன்னை பூபதி நினைவுப் பேச்சுப் போட்டிகளின், 1996ம் ஆண்டிற்கான போட்டியை, நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

**பேச்சுப் போட்டிக்கான விதிகள்:**

போட்டியில் பங்குபற்றுவோர் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பு முகவரிக்கு 01-04-1996 ற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

பரிசுக்குரியவராக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில், வயதை உறுதிப்படுத்த அடையாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் கேட்கப்படுவர்.

அனைத்துப் பிரிவுகளும் அன்னை பூபதி என்னுந்தலைப்பிலேயே பேச்சுக்களை நடாத்துதல் வேண்டும்.

போட்டியாளர்கள் பேசுவதற்கான நேரஎல்லை:

| | | |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | – | மூன்று நிமிடங்கள் |
| நடுப்பிரிவு | – | ஐந்து நிமிடங்கள் |
| மேற்பிரிவு | – | ஏழு நிமிடங்கள் |
| அதிமேற்பிரிவு | – | பத்து நிமிடங்கள் |

பிரிவுகளுக்கான வயதெல்லைக் கணிப்பு:

| | |
|---|---|
| கீழ்ப்பிரிவு | – 01-01-1986 அன்றும் பின்னரும் பிறந்தவர்கள் |
| நடுப்பிரிவு | – 31-12-1980 ற்கும் 01-01-1986 ற்கும் இடையிற் பிறந்தவர்கள் |
| மேற்பிரிவு | – 31-12-1976 ற்கும் 01-01-1981 ற்கும் இடையிற் பிறந்தவர்கள் |
| அதிமேற்பிரிவு | – 31-12-1976 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள். |

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி :**

Kulturelle Organaization der Tamilien e.V
Postfach 1160, 37441 Bad Sachsa

### விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரின் முழுப்பெயர்:..........
2. பெற்றோர் அல்லது பாதுகாவலர் பெயர்:..........
3. முகவரி:..........
4. தொலைபேசி இலக்கம் :..........
5. விண்ணப்பதாரின் பிறந்தநாள் :..........
6. பங்குபற்றவிருக்கும் பிரிவு:..........

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பெயருடைய விண்ணப்பதாரராகிய நான் அன்னை பூபதி நினைவு பேச்சுப் போட்டியிற் பங்கேற்க விரும்புகின்றேனென்றும் நடுவர் தீர்ப்பை முழுமனதுடன் ஏற்பேனென்றும் உறுதி கூறுகின்றேன்.

..........
பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பம்

..........
திகதி

..........
விண்ணப்பதாரின் கையொப்பம்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகம் யேர்மனிக்கிளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொடியேற்றிய "கோணல்" ராமலிங்கத்திற்கு...

கேணல் ரத்வத்த மேற்பார்த்து,
'கோணல்' ராமலிங்கத்திற்கு.........
மானத் தமிழனொருவனெழுதும் மடல்.
ஐயா வணக்கம்
கொடியேற்றிய களைப்பிலும்,
களிப்பிலுமிருக்கும் கனவானே!
நந்திக் கொடியேற்றிய நாயகனே!
இந்தக் கடிதத் தொந்தரவுக்கு மன்னிக்க,
சரியான முகவரி தெரியவில்லை
பெரியவனுக்கு எதற்குப் பெயரும் முகவரியும்?
வந்தடையுமென்ற நம்பிக்கையிலேயே
இந்த மடல்:
இடம் பெயர்ந்த எல்லோரும் நலமல்ல........
ஏதோ ஒருமாதிரி இருக்கின்றோம்.
கோயில் மடம் குடைவிரித்த பூவரசு,
வேதக் கோயில், விளையாட்டு மைதானம்,
வீதிக்கரை, வேம்பிராய்ச் சுடலை
எங்கும் வந்தவரே தங்கியுள்ளோம்.
முட்டை பத்து ரூபா,
முருங்கைக் காய் நூறு ரூபா,
கத்தரிக்காய் இருநூறு,
கருவாடோ முன்னூறு
ஒரு காலமுமறியாத விலையேற்றம்.
உமக்கென்ன கவலை?
ஆமி தரும் அரிசி,
அளந்து போடும் சாப்பாடு,
ரோஷமற்ற மேனிக்கு........ வாசச் சவர்க்காரம்
பெய்யப் போனாலும் பொலிஸ்காரன் பாதுகாப்பு
மானமிழந்து காட்டிக் கொடுத்தால்........
பகைவன் வானத்திலும் தூக்கி வைப்பான்.
வலிகாமத்திற்கு வயிறு பட்டினியெனினும்
மனது நிறைந்துள்ளது.
'சரணடையாத தமிழரென்ற' செருக்கில்
உரமேறியுள்ள உடல்,
துடைத்தெறியப்பட்ட துன்பம் கொடிதெனிலும்
'பகைவனுக்குப் பாதம் கழுவாதோர்' என்று
நாளைய வரலாறு நம்மை எழுதும்.
கையைத் தலைமேற் குவித்து
தாயே போற்றி சந்திரிகா போற்றியென
வாயாற் கூறாத 'வல்லமை' யெனும்
திமிரெமக்கு.
அது சரி ஐயா!
எல்லோரும் அல்லோல கல்லோலப்பட்டு
ஓடிய போது.....
உம்மால் மட்டும் எப்படி ஒளித்திருக்க முடிந்தது?
கொடியேற்றிய போது
பட்டு வேட்டி கட்டியிருந்ததாக
தொலைக் காட்சியிற் பார்த்தவர்கள் சொன்னார்கள்.
கக்கூசு வாளிக்குப் பொன்முலாம் பூசுவதில்லையே,
விளக்குமாறுக்கு எதற்குப் பட்டுக் குஞ்சம்?
உமக்கெதற்குப் பட்டும், பவிசும்?
அம்மணமாக நின்றிருந்தால் அர்த்தமிருக்கும்.
பட்டுவேட்டி என்ன பாவம் செய்தது?
ரத்வத்த சிங்கக் கொடியேற்ற,
ராமலிங்கம் நந்திக் கொடியேற்றினார்.
வெட்கமில்லை,
காக்கைவன்னியனின் புதிய வாரிசே!
எட்டப்பனின் இளவலே!
நீர் இராமலிங்கமல்ல......... துரோகலிங்கம்.
காலத்துக்குக் காலம் எமக்குள் களைகள்
முளைப்பதுண்டு.
இப்போது புதுமுகமொன்று அறிமுகம்
பட்டைக் கிடங்கையும் ஒத்தியெடுத்துக் கொண்டு,
வலிகாமம் வெளியேறியது
நீ மட்டும் ஏன் நின்றாய்?
கதிர்காமர் வெளிநாடுகளில் படியேறி
சந்திரிகாவுக்காக மடிப்பிச்சை கேட்கின்றார்
நீ கொடியேற்றி வைத்துக் குடிப்பெருமையழித்தாய்
புலிக்கொடி பறந்த கோட்டையின் அருகில்
நந்திக்கொடி பறப்பது நல்லதே
சிங்கக் கொடியோடு சேர்ந்து பறப்பதுதான்
நல்லதல்ல.......
ஏற்றிவைத்தாய் பாவி,
உனக்கு இல்லையினி மீட்சி.

- புதுவை இரத்தினதுரை


T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palemo, Italy
T/F: 091- 611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss
T/F: 01- 273- 29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O, 211 Katherine Rd
London E6 1Bu,U.K
Tel: 0181 503 4294
Fax:0181 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1 , Norway
Tel: 022- 191 260 Fax: 190114

W.T.C.C
170 - 10 Cadarcroft Road
Suite 1-L,Jamaica,
New York 11432 U.S.A.
T/ F: 718- 657- 9463

L.T.T.E
P.O.Box 47, 7400 Herning
Denmark
T/F: 97- 155299

T.C.C
Groot Hertoginneisaan
2517 BL Den Haag, Nederland
Tel:070 - 346 1963 Fax:384 0583

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F: 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia.
T: 03-470 6441 F: 560 8224

Disigned by Euro Graphics & Printing Ltd - 0181 801 3822

Printed by Observer Group News papers